கனடாவின் மூத்த தமிழ் இதழ்

# விளம்பரம்

VLAMBARAM™

25 விளம்பரம்

416-282-8059 416-282-4978

E-mail: vlambaram@sympatico.ca

www.vlambaram.com

www.tamilvanakkam.com



RBC Insurance

இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை

உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்

Jey Ahamparam P.F.P

Insurance Advisor

RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்

(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.

Call: 416.301.1733

நூற் பணமாற்றுச் சேவையில் முன்னோடிகள்

மு.காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

3228 Eglinton Ave., East, Suite # 3

(Eglinton & Markham)

Scarborough, ON M1J 2H6

Tel. - 416.267.8221

எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை



நதி 25 | பாலம் 16 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | AUGUST 15, 2015


# கனேடிய நாடாளுமன்ற தேர்தல்!

கனேடிய பிரதமர் ஸ்ரீபன் காப்பரின் பரிந்துரைக்கு இணங்கி ஆளுநர் டேவிட் ஜோன்சன் 2015 ஓகஸ்ட் 2ஆம் திகதி கனேடிய நாடாளுமன்றத்தைக் கலைத்து கனடாவின் 42ஆவது நாடாளுமன்றத் தேர்தல் 2015 ஒக்ரோபர் 19இல் நடைபெறும் என அறிவித்தார்.







நாடாளுமன்றம் கலைக்கப்படும் போது அங்கு பழமைவாதக் கட்சியை சேர்ந்த 159 உறுப்பினர்களும், புதிய ஜனநாயகக் கட்சியை சேர்ந்த 95 உறுப்பினர்களும், லிபரல் கட்சியை சேர்ந்த 36 உறுப்பினர்களும், புளக் குவிபெக்குவா கட்சி, ஜனநாயகத்தில் வலிமைக்கட்சி, பசுமைக் கட்சி ஆகிய மூன்று கட்சிகளிலும் முறையே இரண்டு உறுப்பினர்களும், சுயேட்சையாக 8 உறுப்பினர்களும் இருந்தனர். 4 இடங்கள் உறுப்பினர்கள் இல்லாது வெற்றிடங்களாக இருந்தன.

இவ்வாறு 308 தேர்தல் தொகுதிகளை கொண்டிருந்த கனேடிய நாடாளுமன்றத்திற்கு கனடாவின் சனத்தொகை அதிகரிப்பால் மேலதிகமாக ஒன்ராரியோவிற்கு 15உம், அல்பேட்டா, பிரிட்டிஸ் கொலம்பியாவிற்கு முறையே 6உம் மற்றும் குவிபெக்கிற்கு 3உம் ஆக 30 தேர்தல் தொகுதிகள் அதிகரிக்கப்பட்டு 2015 ஒக்ரோபர் 19இல் நடைபெறப் போகும் தேர்தலில் 338 தேர்தல் தொகுதிகளில் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட இருக்கின்றனர்.

கனடாவின் 2ஆவது நாடாளுமன்றத் தேர்தல் 1872இல் 89 நாட்கள் நடைபெற்றது. அதன்பின் நடைபெற்ற தேர்தல்கள் எல்லாம் சராசரி 50 நாட்கள் பிரசாரத்துடன் நடைபெற்றது. 1874இல் நடைபெற்ற கனடாவின் 3ஆவது நாடாளுமன்ற தேர்தலில்தான் கனடாவின் குறுகிய கால தேர்தல் பிரசாரம் நடைபெற்றது. இது 20 நாட்கள் நடைபெற்றது. ஆனால் இம்முறை நடைபெற உள்ள கனடாவின் 42ஆவது நாடாளுமன்ற தேர்தல் 78 நாட்கள் பிரசாரத்துடன் நடைபெற இருக்கிறது. கனேடிய தற்போதைய தேர்தல் சட்டப்படி தேர்தல் பிரசாரங்கள் குறைந்தது 36 நாட்கள் ஆதல் நடைபெற வேண்டும். இத்தேர்தல் சட்டத்தில் தேர்தல் பிரசாரம் நடைபெற வேண்டிய நாட்களுக்கு எந்தவித உச்சவரம்பும் விதிக்கப்படவில்லை.

கனடாவின் நாடாளுமன்றத்தேர்தலில் போட்டியிடுவதற்காக பதிவு செய்யப்பட்ட கட்சிகள் 19 இருந்தாலும் தற்போது நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களை கொண்டுள்ளவை ஆறு கட்சிகளாகும். அவையாவன: பழமைவாதக்கட்சி (Conservative Party) இது ஸ்ரீபன் காப்பார் தலைமையில் இத்தேர்தலில் போட்டியிடுகிறது. புதிய ஜனநாயகக்கட்சி (New Democratic Party) இது தோமஸ் மல்க்கெயர் தலைமையில் இத்தேர்தலில் போட்டியிடுகிறது. லிபரல் கட்சி (Liberal Party) இது ஜஸ்ரின் ரூடோ தலைமையில் இத்தேர்தலில் போட்டியிடுகிறது. புளக் குவிபெக்குவா கட்சி (Bloc Quebecois) இது கில்லஸ் டுசெப் தலைமையில் இத்தேர்தலில் போட்டியிடுகிறது. பசுமைக்கட்சி (Green Party) இது எலிசபெத் மே தலைமையில் இத்தேர்தலில் போட்டியிடுகிறது. ஜனநாயகத்தில் வலிமை கட்சி (Strength in Democracy) ஜோன் -பிரன்சுவா போர்டின் தலைமையில் இத்தேர்தலில் போட்டியிடுகிறது.


தொடர்ச்சி 06ஆம் பக்கம்



Raj A. Rasaratnam

Cell: 416-726-8055

Bus: 416-321-6969

HomeLife/GTA Realty Inc

LEXUS OF RICHMOND HILL

LEXUS

I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.

குமார் ஜெகசோதி

Kumar Jegasothy

Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...

ரவி பரமு

Real Estate Broker

Cell: 416-262-4176

Bus: 416-298-3200

HomeLife/Today Realty Ltd., Brokerage*

31 Progress Ave. Suite 210, Toronto

*Independently owned and operated

TD Canada Trust

Supen Subramaniyam

(Manager, Residential Mortgage)

ADVICE WHEREVER WHENEVER

416-844-8692

888-809-9154

DENTAL OFFICE

DENTAL IMPLANT • ROOT CANAL • WISDOM TOOTH EXTRACTION

Dr. Iru Vijayanathan

BDS, FAGD, MFDS RCPS (Glasg) DENTAL SURGEON

2 LOCATIONS

3150 Eglinton Ave. East, Unit 5 Markham/Eglinton | Tel: 416.264.3232

3351 Markham Road, Unit 129, Markham/Steeles | Tel: 416.609.2022

Buying Selling Residential & Commercial

Sothees Means Service

SOTHEES Kathirgamathamby

Sales Representative

HOMELIFE / Miracle Realty LTD., Brokerage

*Independently Owned Operated

* Free visa

* Free lawyer fee

* Home Warranty

416.704.1179

Toll Free: 1855 SOTHEES


HOMES *COMMERCIAL*INVESTMENTS
Markham/14th
luxury
4 bm 4wsm home
50F Front Lot with
library and spiral stairs
scarborough
2 bm 2 wsrm condo apt
Roseland/thickson
4 bm 3 wsrm
Kingston Rd/Lawrence
399k
3bm 4wm Home
Mccowan/Ellesmere
549k
3 bm 3 wm w/o
basement
Woodbine/hwy7
1100/- rent all included
Cafetaria
14 years of service
Pat Pushpakanthan
Real Estate Broker
COMMERCIAL & RESIDENTIAL
416-894-1187
COMMISSION NEGOTIABLE
GUARANTEED SALE
PAT WILL BEAT ANY DEAL*!
Century 21
Hall of Famer
80 Corporate Dr. Suite 208
Toronto M1H3G5
416-290 1200


Allstate
You're in good hands.
Allstate Insurance Company Of Canada
Home & Auto Insurance
வீடு, வாகன காப்புறுதி
Suren Navaratnarajah
(Agent)
Cell: 416.520.6916
E-mail: snavaratnarajah@allstate.ca


வாகன MOTOR VEHICLE
விபத்து ACCIDENT
SKT PARALEGAL SERVICE
CRIMINAL MATTERS
SUMMARY
416.803.5296
Kalakalappu Theesan
கலகலப்பு தீசன்
SK THEESAN
TRAFFIC TICKETS
LICENSED PARALEGAL
sktheesan@gmail.com
MOTOR VEHICLE ACCIDENT
SERIOUSLY INJURED ?
ACCIDENT BENEFITS
PERSONAL INJURY
TRAFFIC TICKETS
DON'T
MISS YOUR TRIAL DATE
LOSE YOUR POINTS
CRIMINAL CONVICTION
PERMANENT RESIDENT
CITIZENSHIP
SPONSORSHIP
CRIME
CRIMINAL CHARGES ?
EXPERIENCED LAWYERS AVAILABLE

# பான் அம் விளையாட்டுக்கள்- 2015

## உலகத்தை திரும்பி ரொறொன்ரோவைப்பார்க்க வைத்தது

**367**

'Together we are one' என்ற அழகான பாடலை ரொறொன்ரோவில் பிறந்த பாடகி Serena Ryder மிகவும் விமரிசையாக பாடி யூலை 10ஆம் திகதி தொடங்கிய சரித்திர பிரசித்திபெற்ற பான் அம் இன் 2015ஆம் ஆண்டிற்கான விளையாட்டுக்கள் முடிவிற்கு வந்தன. இம்முறை நடைபெற்ற பான் அம் Am விளையாட்டு போட்டிகளின் முடிவில் 41 வித்தியாசமான Cultural pride நடைபெற்றது. ரொறொன்ரோ மாநகர் எத்தனை வித்தியாசமான கலாசாரங்களைக் கொண்ட ஒரு நகர் என்பதனை உலகிற்கு எடுத்தியம்பியது என்றால் மிகையாகாது.



இந்த பான் அம் விளைட்டுக்களின் முடிவில் 40,000 மக்கள் நிறைவு விழா நிகழ்வுகளை கண்டுகளித்தனர். இப்போட்டிகள் உலக அரங்கில் ரொறொன்ரோ நகருக்கு ஒரு 'High note' ஐ ஏற்படுத்திக் கொடுத்துள்ளது மட்டுமல்லாமல் அடுத்து வரும் ஒலிம்பிக்ஸ் போட்டிகளை நடத்துவதற்கு ரொறொன்ரோ நகர் தகுதி வாய்ந்தது என்பதனை உலகிற்கு ஏற்படுத்தியுள்ளது.

சரித்திரத்தில் முதல் முறையாக கனடா தன்னுடைய திறமையை உலகிற்கு தனது சொந்த மண்ணில் எடுத்தியம்பியுள்ளது. 2015ஆம் ஆண்டு பான் அம் விளையாட்டுக்களில் பெற்ற பதக்கங்களின் முதல் 5 நாடுகளின் நிலை

| Country | Gold | Silver | Bronez | Total |
|---|---|---|---|---|
| 1. Usa | 103 | 81 | 81 | 265 |
| 2. Canada | 78 | 69 | 70 | 217 |
| 3. Brazel | 41 | 40 | 60 | 141 |
| 4. Cuba | 36 | 27 | 34 | 97 |
| 5. Colombia | 27 | 14 | 31 | 72 |

இம்முறை பான் அம் விளையாட்டுக்களில் நிகழ்த்தப்பட்ட சரித்திரப் பிரசித்திபெற்ற சாதனைகளைப் பார்ப்போம்.

- 45% பெண் வீராங்கனைகள் பங்குபற்றி பெண்கள் அதிகூடியளவு பங்குபற்றியது என்ற சாதனையை படைத்துள்ளது.
- இம்முறை முதல் முறையாக 80 பான் அம் விளையாட்டு சாதனைப் பதிவுகள் முறியடிக்கப்பட்டுள்ளன.
- பிறேசில் நாட்டைச் சேர்ந்த நீச்சல் வீரர் Thiago Perezra இதுவரையில் 23 பதக்கங்களை பெற்ற வீரர் ஆவார். ரொறொன்ரோவில் இம்முறை 5 பதக்கங்களை பெற்று சாதனை படைத்துள்ளார்.
- Saint Lucia நாடு முதல் முறையாக பான் அம் விளையாட்டுக்களில் தங்கப்பத்தக்கம் பெற்று சாதனை படைத்துள்ளது.
- பான் அம் விளையாட்டின் சரித்திரத்தில் கனடாவின் பெண்கள் Basket ball அணி முதல் முறையாக தங்கப்பதக்கம் வென்றுள்ளது.
- 32 வருட சரித்திரத்தில் Baseball விளையாட்டில் அமெரிக்காவை கனடா வென்று சாதனை படைத்துள்ளது.
- மார்க்கம் நகரில் வாழும் Andre De Grasse 1999 ஆம் ஆண்டின் பின்பு முதன் முறையாக 10 செக்கனுக்குள் 100 மீ. ஓட்டப் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்று சாதனை படைத்துள்ளார். மீண்டும் 200 மீ. ஓட்டப்போட்டியில் கனடாவின் 200மீ. சாதனைப் பதிவையும் உடைத்து தங்கப் பதக்கத்தை பெற்று உள்ளார்.
- கனடாவின் அதி வேக ஓட்டக்காரர் ஆக 'Fastest Men' தற்போது திகழும் இவர் எதிர்வரும் பல உலக கிண்ண போட்டிகளில் சாதனை படைக்கப் போவது திண்ணம்.

100 மீற்றர் போட்டிகளில் 9.97 செக்கனிலும் 200 மீற்றர் போட்டிகளில்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

எஸ். கணேஷ்











Lebara's
Tamil Fest
தெரு விழா
Powered by IDEAL DEVELOPMENTS
AUGUST 29 & 30
Morningside Ave
Between
Finch & Neilson
நுழைவுக்குக் கட்டணம் இல்லை
Free Admission
Nighstar Road
Stains Road
Morningside Avenue
Emergency Lanes
Neilson Road
Finch Avenue
Barricade
Regular Vendors
Food Vendors/Patio
Amusement Rides for Kids
Seating
Main Stage
Street Stage
Tamil Canadian History Museum
Great Food | Free Concert | Family Entertainment | Amusement Rides for Kids
HONDA Formula Honda
Where You're Treated like Family.
747 AUTOPARTS
The Right Price; The Right Choice
www.747autoparts.com
Adyar
THE MAGIC OF
BonaFide Mortgage
GALAW
SUTHAHOMES
ATN
metrolandmedia toronto
geniemedia
Proudly Hosted by
Canadian Tamil Congress
CTC
/tamilfestTO
@tamilfestTO
tamilfestTO
www.tamilfest.ca | 416.240.0078
tamilfest@canadiantamilcongress.ca

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

நல்ல ரேட்ல மோட்கேஜ், லைன் ஒப் கிரெடிட், ரீபைனான்ஸ்,
2வது, 3வது மோட்கேஜ், பாங்க்ரப்சி நிலையில் மோட்கேஜ்,
எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க , வீடு வாங்க, விற்க,
வாடகைக்கு விட அல்லது பெற்றுக்கொள்ள
மற்றும் எதுவாக இருந்தாலும்

பவர் ஒப் சேல் பிரச்சினையா ?



## மோட்கேஜ் கிளினிக்

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

திங்கள்—வெள்ளி (call for appointment)

வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00





எமது முகவரி

1504 Markham Rd, Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 12001741
Cell : 647-861-8240

ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
Cell : 416-624-4843

## எங்களது சமீபத்திய ரியல் எஸ்டேட் சேவைகள்

விற்பனைக்கு முன் வீட்டினை திருத்த பண உதவி தேவையா? அதற்கான ஒழுங்குகள் செய்து தரப்படும்.





Leslie & Green Lane / Markham


Miller Park & Sideroad 10 / Bradford


Bayly & Salem / Ajax


Warden & Finch / Toronto


Warden & Finch / Toronto


Miller Park & Reid / Bradford


Markham & Sheppard / Scarborough


Finch & Don Mills / Toronto

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate Office :
2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4
Toll Free : 1-877-366-3487

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto*

Brockerage Office :
112-895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC
Office Phone : 416-391-3232

# கனேடிய...

## 01ஆம் பக்கத்தொடர்ச்சி

தேர்தல் பிரசாரங்கள் நாடாளுமன்றம் 2015 ஓகஸ்ட் 02இல் கலைக்கப்பட்டவுடனேயே ஆரம்பித்திருந்தாலும் 2015 ஓகஸ்ட் 10ஆம் திகதி வரை ஒரு கட்சியாதல் 338 தேர்தல் தொகுதிகளிலும் போட்டியிட வேட்பாளர் களை தெரிவு செய்யவில்லை. லிபரல்கட்சி 294 தொகுதிகளுக்கான வேட்பாளர்களை



யும், பழமைவாதக்கட்சி 255 தொகுதிகளு க்கான வேட்பாளர்களையும், புதிய ஜனநா யகக்கட்சி 231 தொகுதிகளுக்கான வேட்பா ளர்களையும் அறிவித்துள்ளன. வேட்பாளர் நியமனப்பத்திரங்கள் 2015 செப்ரெம்பர் 28ஆம் திகதி வரை தாக்கல் செய்யலாம். இம்முறை நீண்டநாட்கள் (78) தேர்தல் பிரசாரம் நடைபெற உள்ளதால் ஒவ்வொரு கட்சிகளும் தேர்தலுக்காக சட்டப்படி செலவிடப்படும் பணத்தொகையும் அதிக மாகும். 338 தொகுதிகளிலும் வேட்பாளர் களை நியமிக்கும் பதிவு செய்யப்பட்ட ஒரு கட்சி அதன் உறுப்பினர்களுடன் சேர்ந்து தேர்தல் செலவினங்களுக்காக இம்முறை $128 மில்லியன் அதி உச்சவரம்பாக செலவிடலாம். இவ் உச்சவரம்பு 38 நாட்கள் நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தின் பின் 2011 மே 2இல் நடைபெற்ற தேர்தலில்



$49 மில்லியனாக இருந்தது. 2015 ஒக்ரோபர் 19இல் நடைபெற இருக்கும் கனேடிய பொதுத்தேர்தலுக்கு மொத்த செலவாக $500 மில்லியன் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இம்முறை நடைபெற இருக்கும் தேர்தல் பிரசாரத்தில் கனேடிய நாடாளுமன்றத்தில் ஆட்சி அமைக்கக்கூடிய கட்சிகளென எதிர்பார்க்கப்படும் மூன்று கட்சிகளின் பிரசார கோஷங்களாக இருப்பவை.

**பழமைவாத கட்சி:** ஒரு வலுவான கனடா விற்கு நிரூபிக்கப்பட்ட தலைமை தேவை. (Proven leadership for a strong Canada)
**லிபரல் கட்சி:** உண்மையான மாற்றம் ஒன்று தேவை. (Real change).
**புதிய ஜனநாயக்கட்சி:** மாற்றம் ஒன்றிற்கு தயார் (Ready for Change).

கனடாவில் பல்வேறு நிறுவனங்கள் தேர்தல் முடிவுகள் பற்றி கருத்துக் கணிப்புக்கள் எடுத்து வருகின்றன. இதில் Nanos Research என்ற நிறுவனம் 2015 யூலை 31இல் எடுத்த கருத்துக் கணிப்பின்படி தற்போது தேர்தல் நடைபெற்றால் பழமை வாதக்கட்சி 31.5 வீதமும், புதிய ஜனநாயகக்கட்சி 30.1 வீதமும், லிபரல் கட்சி 29.3 வீதமும் வாக்குகளைப் பெறும் என கூறப்பட்டுள்ளது. ஆனால் Innovative Research என்ற நிறுவனம் 2015 யூலை 30இல் எடுத்த கருத்துக கணிப்புகளின்படி தற்போதைய தேர்தல் நடைபெற்றால் பழமைவாதக்கட்சி 29.3 வீதமும் புதிய ஜனநாயகக்கட்சி 33.7 வீதமும் லிபரல் கட்சி 25.8 வீதமும் வாக்குகளை பெறும் எனக் கூறப்பட்டுள்ளது.

கனேடிய நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படும் 338 உறுப்பினர்களில் 170 உறுப்பினர்களின் ஆதரவை பெறும் கட்சியே பெரும்பான்மை ஆட்சியை அமைக்கும்.

CBC செய்தி நிறுவனத்தின் 2015 ஓகஸ்ட் 07 கணிப்பின்படி அன்று தேர்தல் நடந்தால், பழமைவாதக்கட்சி 129 ஆசனங்களையும், புதிய ஜனநாயகக்கட்சி 124 ஆசனங்களை யும், லிபரல்கட்சி 83 ஆசனங்களையும், புளக்குவிபெக்குவாகட்சி 1 ஆசனத்தையும், பசுமைக்கட்சி 1 ஆசனத்தையும் பெற்றிருக்கும் என கூறப்பட்டிருந்தது.

இவ்வாறு 2015 ஓகஸ்ட் 07இல் கட்சிகள் பெறும் உறுப்பினர்கள் எண்ணிக்கையை CBC மாகாணம் வாரியாக பிரித்து ஆராய்ந்திருந்தது.

**ஒன்ராரியோவின் 121 உறுப்பினர்களில்**
பழமைவாதக்கட்சி 62 உம்
புதிய ஜனநாயகக்கட்சி 27 உம்
லிபரல்கட்சி 32 உம் பெற்றிருக்கும் எனவும்,
**பிரிட்டிஸ் கொலம்பியாவின் 42 உறுப்பினர்களில்**
பழமைவாதக்கட்சி 9 உம்
புதிய ஜனநாயக்கட்சி 24 உம்
லிபரல்கட்சி 8 உம்
பசுமைக்கட்சி 1 உம் பெற்றிருக்கும் எனவும்,
**அல்பேட்டாவின் 34 உறுப்பினர்களில்**
பழமைவாதக்கட்சி 27 உம்
புதிய ஜனநாயக்கட்சி 4 உம்
லிபரல்கட்சி 3 உம் பெற்றிருக்கும் எனவும்,
**சஸ்கச்சுவான், மனிற்ரோபாவின் 28 உறுப்பினர்களில்**
பழமைவாதக்கட்சி 16 உம்
புதிய ஜனநாயக்கட்சி 7 உம்
லிபரல்கட்சி 5 உம் பெற்றிருக்கும் எனவும்,
**குவிபெக்கின் 78 உறுப்பினர்களில்**
பழமைவாதக்கட்சி 9 உம்
புதிய ஜனநாயகக்கட்சி 53 உம்
லிபரல்கட்சி 15 உம்
புளக்குவிபெக்குவா கட்சி 1 உம் பெற்றிருக்கும் எனவும்,
**அற்லான்றிக், பிரதேசங்களின் 35 உறுப்பினர்களில்**
பழமைவாதக்கட்சி 6 உம்
புதிய ஜனநாயக்கட்சி 9 உம்
லிபரல்கட்சி 20 உம் பெற்றிருக்கும் எனவும் தெரிவித்துள்ளது.


TBC Toronto Business College



DIPLOMA PROGRAMS
- ACCOUNTING & PAYROLL ADMIN. 35 Weeks
- BUSINESS ADMINISTRATION 26 Weeks
- COMPUTERIZED ACCOUNTING 26 Weeks
- FOOD SERVICE WORKER (FSW) 12 Weeks
- MEDICAL OFFICE ADMIN.(MOA) 32 Weeks
- PERSONAL SUPPORT WORKER(PSW) 26 Weeks

FREE TRAINING

யார் தகுதி உடையவர்கள்
- EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
- 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள் DIPLOMA

Tuition Fees,Books,Living Expenses
Day care & Transportation up to $28000
அனைத்தும் இலவசம்

PART TIME COURSES
Windows,Outlook,Word,Excel,
Power Point,Access,QuickBooks,
Sage50 Accounting & Accpac 2012

PSW

START YOUR CAREER
IN JUST SIX MONTHS
Immediate Job Opportunities
Placement In Long Term Care Facilities
NACC Diploma

416-291-5155 / 416-451-6680
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com

EDUCATION IS A LIFE LONG JOURNEY

(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# மக்களை குழப்பத்திலாழ்த்தியுள்ள தமிழ் அரசியல் களம்!







**- விகிர்தன் -**

முன்னெப்போதும் இல்லாதவாறு தமிழர் அரசியலில் ஒருவித குழப்பநிலை நிலவுவதை காணமுடிகின்றது. நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடும் தமிழ் கட்சிகளும் அவர்கள் முன்வைக்கும் கருத்துக்களும் தமிழ் மக்கள் மத்தியில் குழப்ப நிலையை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த தேர்தல்களில், வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு இரண்டு தெரிவுகள் மட்டுமே இருந்தன. தமிழ் தேசியத்திற்கு ஆதரவாக வாக்களிப்பது அல்லது தமிழ் தேசியத்தைப் பற்றி பேசாது தனியே அபிவிருத்தி நடவடிக்கைகளை மட்டும் வாக்குறுதிகளாக முன்வைத்து போட்டியிடும் கட்சிகளுக்கு வாக்களிப்பது. இதனை இன்னும் விளக்கமாக கூறுவதெனில் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கா அல்லது அரசசார்பு கட்சிகளுக்கா ஆதரவளிப்பது என்பதே அந்த தெரிவு. இதில் தமிழ் மக்கள் நிதானமாகவும் தெளிவாகவும் தங்கள் தீர்மானங்களை வெளிப்படுத்தினர். பல கட்சிகள் இணைந்த அமைப்பான தமிழ் தேசியக் கட்சிக்கே அவர்கள் தங்கள் ஒட்டுமொத்த ஆதரவை அளித்தனர். போர் நடைபெற்ற காலத்திலும் போர் முடிவடைந்த காலத்திலும் இந்த நிலைப்பாட்டையே தமிழ் மக்கள் எடுத்திருந்தனர்.

போர் முடிவுற்றதன் பின்னர், நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் அதாவது, 2010ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு தங்கள் ஏக போக ஆதரவை தமிழ் மக்கள் அளித்தனர். பின்னர் நடைபெற்ற, உள்ளூராட்சி சபை தேர்தலிலும் மக்களின் ஆதரவினால், வடக்கின் பெரும்பாலான அனைத்து சபைகளும் தமிழ் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கே கிடைத்தன.

ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற, மிக முக்கியத்துவம் வட மாகாணசபைத் தேர்தலிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பே வெற்றிவாகை சூடியது. அந்த தேர்தல் பரப்புரைகளின் போது தங்களுக்கு இத்தனை உறுப்பினர்களை தெரிவு செய்ய மக்கள் வாக்களிக்க வேண்டும் என்றும், குறித்த தேர்தலை சர்வதேசம் ஒரு கருத்துக் கணிப்பாக அவதானிக்கின்றது என்றெல்லாம் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் பிரசாரம் செய்தனர். ஆனால், அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு அதிகமான உறுப்பினர்கள் தெரிவாக தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளை வழங்கியிருந்தனர். ஆனால், இந்த முறை மக்களுக்கு சிக்கலை ஏற்படுத்தும் விதமாக மூன்று கட்சிகள் (1. தமிழ் தேசியக் கூட்டமைப்பு, 2. தமிழ் தேசிய மக்கள் முன்னணி, 3. ஜனநாயக போராளிகள் கட்சி) தமிழ் தேசியத்தை முன்னிறுத்தி களத்தில் இறங்கியுள்ளன. இதில் எந்தக் கட்சி கூறும் தேசியம் சரியானது என்பது குறித்து சாதாரண தமிழ் மக்கள் குழம்பிய நிலையிலேயே உள்ளனர்.

இலங்கை தமிழரசுக் கட்சி, ரெலோ, ஈபிஆர்எல்எவ், புளோட் ஆகிய நான்கு கட்சிகளும் இணைந்த, மூத்த அரசியல் வாதியான இரா.சம்பந்தனின் தலைமையில் உள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் தேசியத்தையும், தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையினையும் முன்னிறுத்தி இயங்கி வருகின்றது. கூட்டமைப்பிலுள்ள தமிழரசுக் கட்சியை தவிர்ந்த ஏனைய கட்சிகள் கடந்த காலங்களில் ஆயுதப் போராட்டத்தில் பங்கேற்ற கட்சிகள். இந்த இயக்கங்கள் குறித்து அக்காலங்களில் பல்வேறு விமர்சனங்கள் மக்கள் மத்தியில் இருந்தன. ஆனாலும், இவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு குடையின் கீழ் வந்ததும் மக்கள் விமர்சனங்களை மறந்து, பழைய விடயங்களையும் மறந்து ஒற்றுமையை ஏற்றுக்கொண்டனர்- ஆதரவளித்தனர். அத்துடன், பல இளைஞர்களின் தியாகத்தினாலான விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட அமைப்பு தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்கிற உணர்வு தமிழ் மக்களிடம் இப்போதும் உள்ளது. போரின் பின்னரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஆதரவளித்து வருகின்றமைக்கும் இதுவே காரணம்.

ஆரம்பத்தில், தமிழ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்டோர் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்திருந்த போது, அவர்களுக்கு தமிழ் மக்களிடமிருந்த ஆதரவு பின்னர் பிரிந்து சென்றதும் இல்லாமல் போனது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. 2010ஆம் ஆண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து, தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்ற கட்சியினூடாக நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட அவர்கள் எவருமே வெற்றியீட்டவில்லை. அந்த தோல்விக்குப் பின்னர் தேர்தல்களில் போட்டியிடாமல் விலகியிருந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் இம்முறை போட்டிக்கு வந்துள்ளனர். அதுவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை கடுமையாக குற்றம் சாட்டியவாறு களத்தில் குதித்துள்ளனர்.

தமிழ் மக்களுக்கான தீர்வு குறித்து இருவேறு கருத்துக்கள் இவ்விரு தரப்பினராலும் முன்வைக்கப்படுகின்றன. பிளவடையாத இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கு சுயாட்சியுடன் கூடிய சமஷ்டி அடிப்படையிலான தீர்வை தமிழ் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைத்துள்ளது.

'இரு தேசம் ஒரு நாடு' என்பதை தமிழ் தேசிய மக்கள் முன்னணி முன்வைத்துள்ளது. இதனடிப்படையில் பல்வேறு முரண்பாடான கருத்துக்கள் பரப்புரைகளில் வெளியிடப்படுகின்றன.

போர்க்குற்றம் குறித்த சர்வதேச விசாரணை தொடர்பிலும் சரச்சைக்குரிய கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இலங்கை அரசாங்கத்தின் உள்ளக விசாரணையை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், சர்வதேச விசாரணையே தேவை எனவும் கூறும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் சர்வதேச விசாரணையை முடக்கியவர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரே எனவும் பரப்புரை செய்கின்றனர். ஆனால், தாங்களும் சர்வதேச விசாரணையினையே கோருவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் அதற்கு பதிலளித்து வருகின்றனர்.

இந்த நிலையில், புதிதாக தோன்றியிருக்கும் முன்னாள் போராளிகள் இணைந்த ஜனநாயக போராளிகள் என்ற கட்சியும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிராகவே பரப்புரை செய்து வருகின்றது. ஜனநாயக போராளிகள் கட்சியிலிருக்கும் முன்னாள் போராளிகளுக்கு இடமளிக்க தமிழ் தேசியக் கூட்டமைப்பு மறுத்த காரணத்தினால் தனியாக, சுயேற்சைக் குழுவாக போட்டியிடும்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்


## APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

**416-285-4998**

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# மக்களுக்காக தியாகம் செய்ய முடியாவிடினும் கடுமையாக உழைக்க முன்வரவேண்டும்!

## தாயகமடல்

வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் லண்டனில் வழங்கிய ஒரு நேர்காணல் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் அதிர்ச்சியையும், பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த நேர்காணலின் காணொளி பல இணையத்தளங்களிலும், முகநூல் பதிவுகளிலும் வெளிவந்துள்ளது. விக்னேஸ்வரன் அவ்வப்போது தனது கருத்துக்களை தான் சார்ந்த கட்சியினர் என்றும் பாராது வெளிப்படுத்துகின்றவர். அவர் முதலமைச்சராக பதவியேற்ற ஆரம்ப காலத்திலேயே மக்களுக்கு மேற்கொள்ள வேண்டிய உடனடி விடயங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கரிசனை கொள்ள வேண்டும் என்பதை சுட்டிக்காட்டியுள்ளார். தூரத்தில் உள்ள இலக்குகளைப் பற்றி பேசிக்கொண்டிருப்பதிலும் பார்க்க, வீழ்ந்து கிடப்பவருக்கு கரம் கொடுத்து தூக்கிவிட வேண்டும் என அவர் அடிக்கடி கூறுவார். அதாவது அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளும், நடவடிக்கைகளும் நீண்ட காலத்தை எடுப்பதாகவிருக்கும். அதற்கு முன்னதாக போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடி வாழ்வாதார பிரச்சினைக்கு முன்னுரிமை வழங்கி செயற்பட வேண்டும் என்பதே அவரது கருத்து. ஆனாலும், அதை நோக்கிய செயற்பாடுகள் கடந்த காலங்களில் முனைப்பு பெற்றதாக தெரியவில்லை. இதன் காரணமாகவோ அல்லது வேறு விடயங்கள் தொடர்பாகவோ தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கும் இப்போது முரண்பாடுகள் அதிகரித்துள்ளதாகவே தெரிகின்றது.

நடைபெறவிருக்கும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் தான் எவருக்குமே சார்பாக பேசப் போவதில்லை என்று தெரிவித்துள்ள அவர், அவ்வாறே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எந்தவொரு தேர்தல் பரப்புரைக் கூட்டங்களிலும் பங்கேற்கவில்லை. இந்நிலையில் மேற்படி அவரது நேர்காணல் இப்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமை உள்ளிட்ட அனைவரையுமே அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கின்றது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு அறுபது எழுபது வயதிற்கு மேற்பட்டவர்களை தலைவர்களாக கொண்டுள்ள, கொண்டிருக்கிறது எனவும், இரண்டாம் கட்ட தலைமைத்துவத்தை ஏற்படுத்தவில்லை எனவும், அதற்கான முயற்சிகளும் எடுக்கப்படவில்லை என முதலமைச்சர் விக்னேஸ்வரன் குற்றம் சாட்டியுள்ளார்.



தமிழ் மக்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் உள்ள போதும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் அவற்றை சரியாக வெளிப்படுத்துவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார். இவற்றையும் விட, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றவர்களை கடுமையாக விமர்சிக்கும் விதத்திலும் அவர் அந்த நேர்காணலில் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலருடைய குடும்பம் இந்தியாவில் இருக்கின்றன எனவும், அவர்கள் இங்கு வந்து ஒரு வியாபாரத்தை நடத்துவதைப் போல் அந்தந்த நேரத்திற்கு வந்து வாக்குகளை எடுப்பதும் போவதுமாக இருக்கின்றார்கள் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். மக்களோடு மக்களாக வாழ்ந்து எம்மை மக்களுக்காக அர்ப்பணிக்கும் தலைவர்களாக இருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு இல்லை எனவும் அவர் கவலைப்பட்டுள்ளார்.

இம்முறை நடைபெறவுள்ள தேர்தலில் பல்வேறு எதிர்ப்புக்களையும், விமர்சனங்களையும் எதிர் தரப்புக்களிடமிருந்து எதிர்கொண்டுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு உள்ளுக்குள்ளேயே கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாகியிருக்கின்றது என்பது விக்னேஸ்வரனின் கருத்துக்களில் இருந்து வெளிப்படுகின்றது. இப்படியெல்லாம் முதலமைச்சரிடமிருந்து கருத்துக்கள் வந்திருப்பதை தமிழ் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நம்ப முடியாமலும் உள்ளது.

விக்னேஸ்வரனின் குறித்த நேர்காணல் காணொளி உண்மையானதா என்பதில் தமக்கு சந்தேகம் எற்பட்டுள்ளதாக கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தற்போதைய வேட்பாளருமான சுமந்திரன் தெரிவித்துள்ளார். அந்தளவிற்கு கடுமையான விமர்சனங்களை விக்னேஸ்வரன் குறித்த நேர்காணலில் முன்வைத்திருக்கின்றார். ஒரு முக்கியமான தேர்தலுக்கு முகம்கொடுக்கும் வேளையில், இவ்வாறான விமர்சனங்கள் பாதிப்பை ஏற்படுத்தும் என்பது உண்மைதான் எனினும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் எதிர்காலத்தில் மக்களின் நலன் குறித்து முறையானதொரு பொறிமுறையை ஏற்படுத்த வேண்டும் என்பதே இப்போது நோக்க வேண்டிய விடயமாகும். வாக்குறுதிகளுக்கும் நடைமுறைக்கும் வித்தியாசம் இருக்காமல் அவர்கள் அதனை முன்னெடுத்து செல்ல வேண்டியுள்ளது. இம்முறை நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் முன்னர் போலன்றி, சிறு பின்னடைவு ஒன்று ஏற்பட்டாலும் கூட தமிழர் பிரதேசத்தின் தலைமைக் கட்சியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பே ஆசனங்களை கைப்பற்றும் என்பதில் சந்தேகமில்லை. எனவே, இந்த முறை அவர்கள் ஒரு புதிய மாற்றத்திற்கு தங்களை உள்ளாக்க வேண்டிய தருணம் ஏற்பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் ஒரு பொறிமுறையும், அவர்களின் வாழ்வாதாரத்திற்கான ஒரு பொறிமுறையையும் ஏற்படுத்தி இரண்டையும் கலக்காமல், தனித்தனியே அதனை முன்னோக்கி நகர்த்தும் செயல்பாட்டை கூட்டமைப்பு முன்னெடுக்க வேண்டும். இன்று தமிழ் மக்களின் பிரதானமான பிரச்சினைகளில் ஒன்று காணாமல் போனவர்களின் பிரச்சினை. இதற்கு ஒரு தீர்வு காண ஒரு காலவரையறையை ஏற்படுத்த வேண்டும். காணாமல் போனவர்கள் இலங்கையிலுள்ள சிறைகளிலே தடுத்து வைக்கப்பட்டுள்ளார்களா? எங்கேனும் இரகசிய முகாம்கள் இருக்கின்றவா என்பதையெல்லாம் கண்டறிய தமிழர் தரப்பிலும் இலங்கை அரசுத் தரப்பிலும் ஐ.நா உள்ளிட்ட சர்வதேச தரப்பிலுமாக உறுப்பினர்களைக் கொண்டு அழுத்தமான- பொறுப்புக்கூறும் குழுவொன்று அமைக்கப்பட்டு தீவிரமான செய்பாட்டில் இறங்க வேண்டும். உயிருடன் இருப்பவர்களை வெளிக்கொண்டு வருவதுடன், உயிருடன் இல்லை என்று முடிவு செய்யப்பட்டால் அதனை வெளிப்படையாக தெரிவித்து பாதிக்கப்பட்ட உறவினர்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும். காணாமல் போனவர்களின் பிரச்சினையை தொடர்ந்து அரசியலாக்குவதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இதேபோன்று சிறைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வது தொடர்பிலும் அழுத்தமான செயற்பாடுகளை சட்ட ரீதியாக முன்னெடுக்க தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் வழிவகை செய்ய வேண்டும். இதற்கும் ஒரு காலவரையறையை ஏற்படுத்த வேண்டும். இதேவேளை, முன்னதாக குறிப்பிடப்பட்டுள்ள பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை இனியும் காலம் தாழ்த்தாது மேற்கொள்ள வேண்டும். சமூக சீரழிவுகள், குற்றச்செயல்கள் அனைத்திற்கும் வறுமையே பிரதானமான காரணமாக அமைகின்றது. மண்ணிலே போராடி தங்களை தியாகம் செய்த இளைஞர்கள் குறித்தெல்லாம் தேர்தல் காலங்களிலேயே பேசப்படுகின்றன. முன்னாள் போராளிகளில் பலர் உடலுறுப்புக்களை இழந்துள்ளனர் அவர்களில் பலர் செயற்பட முடியாதவர்களாக உள்ளனர். அவர்களின் குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றன. இது தொடர்பில் எல்லாம் நமது அரசியல்வாதிகளிடம் ஏதேனும் கணக்கெடுப்புக்கள் புள்ளி விபரங்கள் இருக்கின்றதா என்பது தெரியவில்லை. சில தினங்களுக்கு முன்னர் முன்னாள் போராளியான குடும்பஸ்தர் ஒருவர் வன்னியில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். ஏற்கனவே வறுமை நிலையிலிருந்த, மூன்று பிள்ளைகளின் தந்தையான அவர், தனக்கேற்பட்ட நோய்க்கு மருத்துவம் செய்ய பணமில்லாத காரணத்தினால் இவ்வாறு தற்கொலை செய்துகொள்ள நேர்ந்தது. இவ்வாறான பல துன்பியல் பிரச்சினைகள் தமிழ் மக்கள் மத்தியில் உள்ளன.

**- ஆதித்தன் -**

இவற்றிற்கெல்லாம் முதலில் தீர்வினைத் தேட வேண்டும். அரசியல் பிரச்சினைக்கு தீர்வைக் காண இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டிவரும். தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற தீர்வு என்பது ஒரு குறுகிய காலத்தில் கிடைக்கப் போவதில்லை. இதுவே யாதார்த்தம். ஆனால், ஏனைய பிரச்சினைகளுக்கு ஒரு காலவரையறைக்குள் தீர்வினைப் பெறுவது சாத்தியமானதே. அதற்கு கடுமையாக உழைக்க வேண்டும். தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல்வாதிகள் மக்களுக்காக தங்களை தியாகம் செய்ய - அர்ப்பணிக்க முடியாவிட்டாலும் கடுமையாக உழைக்க முன்வரவேண்டும்.


விளம்பரம்
VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜயபாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.


**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# Why Pay More?

## 1% Are You Planning to Sell a Property?

## Listing Commission*

$259,000



Markham/Commerce Valley

Great Buy For First Time Or Investment*Situated In The Heart Of Thornhill*Just Over 600Sq Ft With Large Balcony 8'10X5'50"Very Practical Layout* Kitchen Counter Top*Amazing Building Facilities: Indoor Pool,Gym,Sauna,Party Rm,Guest Suites,Mahjong

$789,000



Westney / Rossland

Client Remks:Stunning 5 Bedrooms And 5 Washrooms. Beautiful Tribute Home In A Most Desirable Neighbourhood Of Ajax

$749,000



Lawrence Avenue East

Your Opportunity To Move In To An Affordable House In One Of The Best And Quietest Family-Oriented Communities.

$335,000



Bathurst/Lakeshore

The Luxury Neptune At Waterpark. Fantastic Layout Attached, 660 Sq Ft, 1 Bedroom +Den With Balcony On High Floor, One Of The Largest Unit In The Building, Modern Kitchen

$259,000



Neilson/Sheppard

Do Not Let The Opportunity Pass You By To Own In A Thriving Community That Keeps Increasing In Value! Fantastic Home For That 1st Time Buyer Or The Buyer Looking To Downsize. Well Maintained With The Same Owner For 15 Yrs. 3BR Town House

$1,149,000



Pickering: Kingston Rd/Brock Rd

Enjoy The Perfect Blend Of Modern And Contemporary Design With Elegance!! Gorgeous House Under Fully Tarion Warranty.Premium Deep Lot.

$799,000



Markham:Denison/Fonda

Absolutely Gorgeous Home In Prime Markham Location. Close To 407, Markham Transit, Schools, Parks & Shopping! Sunny & Spacious All Brick Home! Popular And Rare

$799,000



Port Union/Lawrence

Client Remks Location!!Location!!Location!!Must See!! Most Demanded Area, Fully Upgraded Beautiful Detached 4 Bedroom Home, Prof. Finished 2 Bedroom Basement With Separate Entrance, Double New Door Entry

$839,000



Markham: 16th Ave/ Bur Oak

Gorgeous Madison Home In The Heart Of Cornell Rouge*Less Than 1Yr Old* Under Tarion Wrnty*Mins To Hospital, 407 Hwy, Cornell Com Cntr, Go Station & Schools* 70K Spent On Upgrades*

$749,000



Whitby:County Lane/Taunton

Where The Party's At! The Perfect Host's Dream Home. Entertain Guests In The Elaborate Backyard Retreat With New Inground Pool, Custom Cedar Cabana And Stone Patio 4+1 Bedroom

$298,000



Mississauga:Hwy 10/Burnhamthorpe

Excellent To Live Or Invest.Gorgeous & Chic Fully Reno 2+Den Condo In Up&Coming Sq1. Features Rich Eng Hardwood Thruout. New Kitchen W/ S/S Appliances, Backsplash, Potlights, Pantry, Huge Master W/ Large W/I Closet, Ensuite

$359,000



Burnhamthorpe/Confederation

Investor's Dream, Stunning 2 Bedrooms + 2 Full Washrooms. Condo In Grand Residence At Parkside Village. Very Spacious Corner Unit, With Lovely View

*Some condition apply. Please feel free to contact me for further information. Not intended to induce breach of existing buyer or seller contracts. 1%Not included buyer agent's commission




I will guide you through the process in a professional, friendly and accountable manner



Call for more information

## Nishantha 416 417 0763

Nishantha Donsiyambalapitiyage Sales Representative Email:nishan.don@gmail.com
Innovative Realty Inc. 2250 Markham Road Unit 3 Toronto ON M1B2W4. Office: 416 417 0763

# தமிழ் பேசும் மக்களின் நலனுக்காக அணிதிரண்டு வாக்களியுங்கள்! - வடமாகாண முதலமைச்சர்

எனது அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, இளைஞர்களே, யுவதிகளே! தேர்தலுக்கு இன்னமும் சில நாட்களே உள்ள நிலையில் யாருக்கு வாக்களிப்பது, யாரை தெரிவு செய்தால் உங்களையும் ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தையும் அவர்கள் வாழவைப்பார்கள் என்பது குறித்து நீங்கள் ஓர் தீர்மானத்திற்கு வந்திருப்பீர்கள் என நம்புகின்றேன். உங்களது தீர்மானத்தில் நான் எந்தவொரு செல்வாக்கினையோ அல்லது தலையீட்டினையோ செய்யப்போவதில்லை. இம்முறை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் பக்கச் சார்பற்ற நடுநிலைத் தன்மை என்ற எனது நிலைப்பாட்டில் தொடர்ந்தும் உறுதியாகவுள்ளேன்.

ஆரோக்கியமான அகமுரண்பாடுகள் அவசியமானவை யாயினும்கூட, ஒரே கட்சிக்குள் இருந்து கொண்டு ஒரே கொள்கைக்காகத் தேர்தலில் போட்டியிடுபவர்கள் ஒருவரை ஒருவர் தூற்றிக் கொண்டும், வசைபாடிக் கொண்டும், அரசியல் நாகரிகம் அற்ற முறையில் ஒருவர் மற்றவருக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் நிலைமையினைக் காணும் போது பக்கச் சார்பற்ற நடுநிலைத் தன்மை என்ற எனது முடிவு சரியானது என்றே நான் கருதுகின்றேன்.

வடமாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு செப்ரெம்பர் மாதம் 2013இல் வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட வாக்குறுதிகளை பலத்த சவால்களுக்கு மத்தியிலும் நிறைவேற்றுவதற்காக நான் இதயசுத்தியுடன் செயற்பட்டேன், செயற்பட்டு வருகிறேன். இதனைத் தொடர்ந்தும் வெற்றிகரமாக முன்னெடுக்க எதிர்காலத்தில் எனது மக்களின் பாரிய ஒத்துழைப்பும் பங்களிப்பும் மென்மேலும் அவசியம். மக்கள் நலனை முதன்மைப்படுத்திய எனது வேலைத்திட்டங்களையும், அது சார்ந்த உள்நாட்டு வெளிநாட்டுச் சந்திப்புக்களையும் வட மாகாண சபைத் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு அமைவாகவே முன்னெடுக்கின்றேன்.

தமிழ் மக்களின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கும் மக்கள் நலன்களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பது எனது பொறுப்பென உணர்கின்றேன். அந்தப் பொறுப்பைப் பற்றுறுதியுடன் பற்றிக் கொள்ளவே நான் விரும்புகின்றேன். இதற்காக நான் எத்தகைய அர்ப்பணிப்பையுஞ் செய்யத் தயாராக இருக்கின்றேன். போரின் போது மேற்கொள்ளப்பட்ட இனஅழிப்பு எமது இனத்தின் சமூக, பொருளாதார, பண்பாட்டு கட்டமைப்புகளை சிதைத்துள்ளது. இவற்றை நாங்கள் மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். இதற்கு அமைவாக ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களைப் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுடன் நேரடியாக மேற்கொள்ளும் வாய்ப்பு நான் முதலமைச்சராக



பதவியேற்ற பின் கிடைத்தது. அதனை, மிக ஆழமாக ஆராய்ந்து பார்த்த பின்பே எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நடுநிலை வகிப்பதென்ற முடிவையெடுத்தேன். இது சம்பந்தமாக அண்மையில் நான் வெளியிட்டசெய்தி பலவிதமான மாறுபட்ட கருத்துக்களை முன் கொண்டு வந்துள்ளதாக அவதானிக்கின்றேன். எனினும் அது பலரைச் சிந்திக்க வைத்துள்ளமை புலப்படுகிறது. என்னைப் பொறுத்த வரையில் நான் தற்போது அரசியலில் இருக்கும் அதேநேரம், அரசியலுக்கு வர முன்பிருந்தே சமூக சேவையிலும் சமூக மறுமலர்ச்சியிலுந் தொடர்ந்து ஆர்வம் காட்டி வந்துள்ளேன் என்பதை அறியத்தர வேண்டியுள்ளது. எம் மக்களின் சேவையிலும் மறுமலர்ச்சியிலுந் தொடர்ந்து ஈடுபட அரசியல் எனக்கு ஒரு கருவியேயொழிய எனது முழு நேரத் தொழில் அல்ல. சென்ற 22 மாதங்களில் நான் என் மக்களிடம் இருந்து தெரிந்து கொண்ட பாடங்கள் சில உண்டு.

ஒன்று - அரசியல்வாதிகள் தேர்தல் காலத்தில் பேசுபவற்றை தேர்தல் முடிந்ததும் காற்றில் பறக்க விட்டு விடுகின்றார்கள் என்பது. எனவே இதனால் மக்கள் மனக் கிளர்ச்சியுந் தளர்ச்சியும் அடைகின்றார்கள்.

இரண்டு- தேர்தல் முடிந்ததும் மக்களிடம் இருந்து அரசியல்வாதிகள் விலகிச் செல்கின்றார்கள். அவர்களின் பிரச்சனைகளை, ஏக்கங்களை, தேவைகளைப் புறக்கணிக்கின்றார்கள். தமக்கும் தமக்கு அண்மித்தவர்களுக்கும் மட்டும் சலுகைகள் செய்கின்றார்கள், கரிசனை காட்டுகின்றார்கள், உதவிகள் புரிகின்றார்கள், என்பது.

மூன்று- கொடுத்த தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளுக்கு மாறாக சுயநலத்துடன் நடக்க எத்தனிக்கின்றார்கள். முக்கியமாகத் தெற்கத்தைய அரசியல்வாதிகளுடன் சேர்ந்து நடக்க வேண்டும் இல்லையேல் விமோசனம் இல்லை என்ற எண்ணத்தில், உணர்ச்சியுடன் தமிழ் மக்களிடையே தேர்தல் மேடைகளில் பேசிய வசனங்களை மறந்து, தெற்கத்தையவர்களின் மனங் கோணாமல் நடந்து கொள்ள எத்தனிக்கின்றனர். அவ்வாறு செய்வதானால் அதை முன்கூட்டியே தேர்தல் விஞ்ஞாபனங்களில் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்பதை மக்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

இவ்வாறு பலதையும் மக்கள் கூறுவதை நான் கேட்டுள்ளேன். இதுபற்றி அரசியல்வாதிகளிடங் கேட்டால் தமது கட்சியின் பெயரைக் கூறி அதில் குளிர்காயப் பார்க்கின்றார்கள். இதனால்தான் நான் கட்சிக்கு அப்பால், கொள்கை நிலை கொண்ட நேர்மையான, பற்றுறுதி கொண்ட, விலை போகாத, தூரநோக்குப் பார்வை கொண்ட, கரிசனையுடைய பிரதிநிதிகளை அடையாளங் காணுங்கள் என்றேன். எனினும் நான் என் முன்னைய செய்தியில் இன்னொன்றைக் கூறியதையும் எம் மக்கள் மறக்கக் கூடாது. நாம் தேர்ந்தெடுப்பவர்கள் தமிழ் மக்களின் தனித்துவத்தையும் அவர்களின் சுயநிர்ணய உரிமையையும் உறுதிப்படுத்தி, எம்மக்களின் உரிமைகளையும் அவர்களுக்கான நீதியையும் பெற்றுக்கொள்ளக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்றுங் கூறியிருந்தேன்.

போட்டியிடும் பல கட்சிகள் எமது மக்களின் தனித்துவத்தையுஞ் சுயநிர்ணய உரிமைகளை யும் மதியாத வகையில்த்தான் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களைத் தயாரித்துள்ளார்கள். அக்கட்சிகளுள் தரம் மிக்கவர்கள் இருந்தால்க் கூட (நான் இருக்கின்றார்கள் என்று கூறவில்லை) அவர்களின் தாற்பரியம் வேறு என்பதை நாங்கள் மனதில் நிலை நிறுத்த வேண்டும். அவர்களால் எமது வடக்கு கிழக்கு வாழ் மக்கள் நிரந்தரமான நன்மைகளைப் பெற முடியாது என்பதை நான் கூறி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. மேலும் தாயகம், தனித்துவம், தமிழர் சுயநிர்ணயம் போன்ற கருத்துக்களை 2009ஆம் ஆண்டு மே மாதந் தொடங்கியாவது இக்கட்சிகள் உலகிற்குப் பறைசாற்றி வந்திருக்க வேண்டும். காளான்கள் காரியவாதிகளாக முடியும் ஆனால் காவலர்கள் ஆக முடியாது.

ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின் வடகிழக்கு மாகாணங்களில் ஒரு சிறந்த அப்பளுக்கற்ற அரசியல் கலாசாரத்தைக் கட்டி எழுப்ப வேண்டிய கடப்பாடு எம் எல்லோருக்கும் எழுந்துள்ளது. தெற்கில் பூதவடிவம் பெறப்பார்க்கும் இனவெறுப்புடனான அரசியல் சிந்தனைகளை நாம் தடுத்து நிறுத்த முன்வரவேண்டும். எம்முடன் கைகோர்த்து வரச் சம்மதித்திருக்கும் மேற்கத்தைய நாடுகளுடனான உறவை நாம் பலப்படுத்தவேண்டும். இவ்வாறு செய்வதால் எமக்கொரு நிரந்தர அரசியல் தீர்வை நாங்கள் பெற வழி அமைக்கலாம். இதை மனதில் வைத்துத்தான் நாம் தேரந்தெடுக்கும் பிரதிநிதிகளின் தரம், தகைமை, தகுதி எவ்வாறு அமைய வேண்டும் என்று மக்களை நோக்கிய எனது முன்னைய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். அதைவிட மத்தியில் உள்ளோர், நல்லாட்சிக்கானதும், நீதி, சமத்துவம் போன்ற

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE - TEL : 416.289.7514 / OWNER SAM - CELL: 416.732.9383

OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# ஆதன வியாபாரத்தில் இவ்வாறும் நடக்கின்றது!

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

### தொடர் - 446

ஆதன வியாபாரம் மட்டுமல்ல, அனைத்து வியாபாரங்களும் வாங்குபவர்கள் விற்பவர்களின் நிலைப்பாட்டிலேயே தங்கியுள்ளது. வாங்குபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து விற்பவர்களின் எண்ணிக்கை குறையும் போது, விற்கப்படும் பொருளின் விலை அதிகரித்தே தீரும். (Supply and demand) இந்நிலைமை தனி வீடு (Detached house) சேர்ந்த வீடுகள் (Semi detached), பல சேர்ந்த வீடுகள் (Attached houses)களிற்கு கடந்த இரு வருடங்களுக்கு மேலாக இந்நிலைமை தொடர்வதனைக் காணக்கூடியதாக உள்ளது. இந்நிலைமை தொடருமா? கனடிய மத்திய வங்கியின் இவ்வருடத்தின் இரண்டாவது வட்டிவீதக் குறைப்பு, இந்நிலைமைக்கு மேலும் பலம் சேர்ப்பது போலவே அண்மையில் நடைபெறும் ஆதனம் வாங்குவதற்கான போட்டா போட்டிகள் உதாரணமாகக் காட்டுகின்றது. இதுவே இன்றைய யதார்த்த நிலைமை.

ஒரு சாரார், ஊடகங்கள் உட்பட, ஆதனவியாபாரத்தின் விலை அதிகரிப்பை அபாய மணி கொண்டு அடித்து கொண்டு இருக்க, மறுபக்கம் விலை அதிகரித்தே செல்கின்றது.

இதற்கு உதாரணமாக பல உதாரணங் களைக் கொள்ளலாம். வன்கூவரில் $2.98 மில்லியனிற்கு சந்தைக்கு கொண்டு வரப்பட்ட தனி வீடு, $4.1 மில்லியனிற்கு விற்கப்பட்டுள்ளது. ஒரு மில்லியனிற்கு மேலான விலை கொடுத்ததனைக் காணலாம். இவ்வாறு பல உதாரணங்களை GTA இலும் காணலாம். போதியளவு Lower rise வீடுகள் சந்தையில் இல்லாததும், சில குறிப்பிட்ட பகுதியிலேயே மக்கள் விரும்புவதற்கும் காரணமாகவும் இதனைக் கொள்ளலாம்.

**வெளிநாட்டவர்கள் கனடாவின் ஆதனத்தில் முதலிடுவதன் நோக்கம் எது?**

கடந்த வருடம் (2014) உலகில் ரொறொன்ரோ பிரசித்தி பெற்ற (Hottest) நகரமாக காணப்பட்டது. உலகின் பிரபல்யமானவர்களினதும், வசதி படைத்தவர்களினதும் ஆதன முதலீட்டிற்கு உகந்த இடமாக ரொறொன்ரோ தெரிவு செய்யப் பட்டது. Luxury market கடந்த வருடம் 37% இனால் அதிகரிப்பு ஏற்பட்டது. 80 நகரங்களின் வரிசையில் முதல் 10 நகரங்களில் ரொறொன்ரோவும்



காணப்பட்டது. (Christie's International Real Estate Report) ஆதன வியாபாரத்தில் luxury homes இல் முதலீடு செய்பவர்களின் ஆய்வு அறிக்கையின் படி, நியூயோர்க், கொங்கொங் போன்ற நகரங்களுடன் ஒப்பிடும்போது ரொறொன்ரோவின் சராசரி விலை குறைவாகவே காணப்படுகின்றது. மேலும் கனடாவின் ஆதனத்தில் முதலீடு செய்வதற்கு வெளிநாட்டவர்களுக்கு இ து வ ரை எதுவிதமான கட்டுப்பாடுகளும் கிடையாது. கனடிய அரசியல் சூழ்நிலை, எச்சந்தர்ப்பத்திலும் இலகுவாக ஆதனத்தை விற்று வாங்கும் முறை, கனடிய கல்விமுறை போன்றவை வெளிநாட்டவரின் முதலீட்டுக்கு சில முக்கிய காரணங்களாகக் கொள்ளலாம்.

இவ்வாறான நிலைப்பாடுகள் கனடிய ஆதனத்தில் வெளிநாட்டவர்கள் முதலீடு செய்வதாகக் கொள்ளலாமா? கடந்த வருடத்தில் பெருமளவிலான இந்தியா, சீனா பெரும் பணக்காரர்கள் வெளிநாடுகளிற்கு தமது குடும்பங்களுடன் வெளியேறுவதாகவும் அறிக்கைகள்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

Raja Mahendran, P.Eng.



5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969

* INDEPENDENTLY OWNED AND OPERATED

**CONDO FOR SALE**



**Yonge / HWY 401**

1 Bedroom, South West exposure - vacant. walking distance to subway.

**Asking Price $279,900**

**HOUSE. FOR SALE**



**CASTLE MORE & MCVEAN**

4 Bedroom + 2 Bedroom bsmt. Sep. entrance, 4 Washroom, Hardwood floor. Parking, 9ft ceilings

**Asking Only $769 K.**

**CONDO FOR SALE**



**NEILSON & MCLEVIN**

1 Large Bedroom, Balcony. North view, & Parking Recently Painted. Close to all amenities.

**Asking Price $159,900**

# சத்குருவின் சுதந்திர தின செய்தி 2015

இந்தியாவின் 68-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, இந்திய குடிமக்களாக இந்தியாவின் வளர்ச்சிக்கு நாம் ஒவ்வொருவரும் செய்ய வேண்டியதையும், நம் தேசத்தின் வேற்றுமைகள் அனைத்தையும் தாண்டி நம்மை பிணைக்கும் "தேடுதல்" எனும் நூலினை பாதுகாப்பதன் அவசியத்தையும் வலியுறுத்துகிறார் சத்குரு.

கடந்த சில நூற்றாண்டுகளாக, இந்தியா, ஒரு தேசமாகவும், இந்தியர்களாகவும், பல்வேறு காரணங்களால் தன் முழுத்திறனுக்கு குறைவாகவே வாழ்ந்திருக்கிறது. சுதந்திரம் கிடைத்து 68 வருடங்கள் ஆகியும், கிட்டத் தட்ட பாதி ஜனத்தொகைக்கு: ஊட்டச்சத்து, ஆரோக்கியம், மற்றும் கல்வி சரியாக போய்ச்சேராத நிலையில் இருக்கிறது. ஆனால் கடந்த ஒரு வருடத்தில் புதியதோர் நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் இந்தியாவிலும் பிற தேசங்களிலும் பிறந்துள்ளது. இளைஞர்களின் கூட்டு சக்திகளால் நாம் நல்வாழ்வை நோக்கி சீறிப்பாயும் வாய்ப்பு இப்போது நம்மிடம் உள்ளது.

ஒரு தேசமாக, நம்மிடம் 125 கோடி மக்களுக்குத் தேவையான நிலம் இல்லை, நீர் இல்லை, மலைகள் இல்லை, காடுகள் இல்லை, வான்வெளி கூட இல்லை. நம்மிடம் இருப்பது எல்லாம் மனிதர்கள் தான். இந்த ஜனத்தொகையை நாம் கல்வி இல்லாமல், தெளிவான நோக்கமில்லாமல், திறமையில்லாமல், ஊக்கமில்லாமல் வைத்திருந்தால், நமக்கு ஒரு பேரிழப்பு காத்திருக்கிறது. ஆனால் இந்த தலைமுறையை தெளிவான நோக்கமுடைய, ஆற்றல்வாய்ந்த, திறமையான, ஊக்கமிக்க தலைமுறையாக மாற்றிவிட்டால், நமக்கு ஓர் அற்புதம் காத்திருக்கிறது.

இந்தியாவுக்கு சக்திவாய்ந்த தேசமாக மாறும் வாய்ப்பு இருக்கிறது. சக்திவாய்ந்த தேசம் என்றால் இராணுவப்படை சக்திவாய்ந்ததாய் இருப்பதல்ல. உலகை நல்வாழ்வு நோக்கி வழிநடத்தத் தேவையான வலிமை, அறிவு மற்றும் ஆற்றல் நம்மிடம் இருப்பதையே சக்தி என்கிறேன். அப்போது பிற உலக நாடுகள் இயல்பாகவே இந்தியாவை நாடும். பழங்காலம் முதல் விவேகம் என்றால் எல்லோரும் கிழக்கு நோக்கி, இந்தியாவை நோக்கி பார்த்தனர். இந்த இடத்தை நாம் தொலைத்து விடக்கூடாது. நாம் வலிமையான தேசமாக மாறி, நம் மக்களை வல்லமை படைத்தவர்களாக மாற்றவேண்டும், அந்த வாய்ப்பு இப்போது நம்மிடம் இருக்கிறது. உலகம் முழுவதற்கும் நல்வாழ்வு கிடைக்கும் வாய்ப்பின் வாசலில் நாம் அமர்ந்திருக் கிறோம். இந்த செய்தியின் மூலம், இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனிடமும் நான் வேண்டிக்கேட்பது இதைத்தான், நீங்கள் இந்நாட்டில் இருந்தாலும் சரி வேறு எங்கோ வாழ்ந்தாலும் சரி, இந்த சாத்தியத்தை நிஜமாக்குவது, தலைமையினால் நிகழாது, இதை நிகழ்த்த குடிமக்களாக நீங்கள் ஒவ்வொருவரும் எழுந்து நிற்கவேண்டும். "இதை எப்படிச் செய்வது?" என்பது உங்கள் கேள்வி. உங்கள் வாழ்க்கையில் என்ன செய்தாலும் சரி, விவசாயி, அரசியல்வாதி, போலீஸ், டாக்டர், வக்கீல், எஞ்ஜினியர் என்று என்ன வேலை செய்தாலும், அதை சிறப்பாக செய்யுங்கள். ஒரு நாட்டை முன்னேற்றம் நோக்கி கொண்டுசெல்ல இது மட்டுமே வழி. நாடு முன்னேறுவது, பெரிய பெரிய சொற்பொழிவுகளாலும் கோஷங்களாலும் நிகழாது. நாம் ஒவ்வொருவரும் நாம் செய்யும் பணிகளை வேறொரு நிலையிலான ஊக்கத்துடன் செய்தால் மட்டுமே நாடு முன்னேறும். நாம் செய்வது அனைத்தும், புதியதோர் தேசத்தை உருவாக்கும் உறுதியுடன் ஓர் அர்ப்பணிப்பாக நிகழவேண்டும்.

இப்போது நாம் புதியதோர் சாத்தியத்தின் வாசலில் அமர்ந்திருக்கிறோம். கிட்டத்தட்ட 500 கோடி மக்களின் வாழ்க்கைத்தரத்தை ஒரு நிலையில் இருந்து இன்னொரு நிலைக்கு நம்மால் எடுத்துச் செல்லமுடியும். இது சரித்திரம் படைக்கும் வாய்ப்பு, சரித்திரத்தில் மிகக் குறைவான தலைமுறையினருக்கு மட்டுமே இது கிடைத்துள்ளது. என்னுடைய ஆசை, ஒவ்வொரு இந்தியனும் இதற்காக உழைத்து இதை நிஜமாக்க வேண்டும். நான் குறிப்பாக இந்நாட்டின் அரசியல் தரப்பினரிடம் இதை கேட்டுக் கொள்கிறேன். உங்கள் அரசியலை தயவு செய்து தேர்தலின்போது மட்டும் செய்து கொள்ளுங்கள். மீதி நேரம், மத்தியிலோ மாநிலத்திலோ மக்களால் தேர்வு செய்யப்பட்டுள்ள அரசுகள், மக்களுக்கு பயனளிக்கும் விதத்தில் தன் வேலையை நல்லபடியாக செய்திட அனுமதியுங்கள். தேர்தலுக்கு ஒருமாதம் முன்னர் மட்டும் அரசியல் நடக்கட்டும். மற்ற நேரத்தில், இந்த தேசத்தை ஓர் உயர்ந்த சாத்தியமாக மாற்றுவது நோக்கி நாம் ஒவ்வொருவரும் செயல்படுவோம். இந்த சாத்தியத்தை நிஜமாக்குவதற்குத் தேவையான உறுதியையும் தைரியத்தையும் நாம் வெளிப்படுத்துவோம். இது தேசப்பற்று சார்ந்த விடயமல்ல, இது நம் மனிதத்தன்மையைப் பற்றியது.

தேசங்கள் பெரும்பான்மையாக ஜாதி, மதம், இனம் மற்றும் மொழியின் அடையாளங்கள் மீது உருவாக்கப்படுகின்றன. ஆனால் ஒரு



தேசமாக நம்மிடம் பற்பல மதங்கள், இனங்கள், ஜாதிகள், மற்றும் மொழிகள் உள்ளன. நாம் மிகவும் பிரம்மாண்டமான, தனித்துவமான தேசம், 10,000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமிருந்தே நாம் இப்படித்தான் இருந்துள்ளோம். அரசியல் ரீதியாக நமக்குள் பிரிவினைகள் இருந்தாலும், கலாச்சாரரீதியாக நாம் எப்போதும் ஒரு தேசமாகத்தான் இருந்துள்ளோம். அடிப்படையாக நம்மை இணைக்கும் நூல், நாம் உண்மையை நாடுபவர்களின் தேசம் என்பதே. இந்த தனித்துவத்தை நாம் பேணிக்காப்பது முக்கியம். நாம் ஒற்றுமையைத் தேடினால், ஒரே நம்பிக்கை உடையவர்களின் தேசமாக நாம் மாறிவிடுவோம். மக்கள் ஒரே விடயத்தை நம்புவதால் ஒன்று கூடுவார்கள். ஆனால், இங்கே நாம் எப்போதும் உண்மையையும் விடுதலையையும் தேடும் தேடுதல் உடையவர்களின் தேசமாகவே இருந்துள்ளோம். உண்மையை நாடுபவராக இருந்தால் ஏதோ ஒருவிடயத்தோடு மட்டும் ஒத்திசைவாக இல்லாமல், உங்களுக்குள் இருக்கும் உயிர் செயல்முறைக்கு ஒத்திசைவாக இருப்பீர்கள், அது ஒருபோதும் தவறாய்ப் போகாது. இந்த தேடுதலில் நாம் ஒன்றாய் சங்கமித்தோம், ஏனென்றால் தேடுதல் என்பது நீங்களோ நானோ கண்டுபிடித்த ஒன்றல்ல. பிழைப்பு என்பது கவனிக்கப்பட்டுவிட்டால், நம்பிக்கை முறைகளும் வேறு விடயங்களும் மிக மோசமாக மாசுபடுத்தினாலும் கூட, ஒவ்வொரு உயிரும் இயற்கையாகவே உண்மையை உணர்ந்து, தன்னை விடுவித்துக் கொள்ளவே விரும்பும். ஏனென்றால் மனித புத்திசாலித்தனத்தின் இயல்பே அதுதான். இந்த தேசம் இந்த அடிப்படையில்தான் உருவாக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டது. இந்த தேடுதலை நாம் உயிர்ப்புடன் வைத்துக்கொண்டால், இந்த தேசத்தை அழிக்கமுடியாது. இந்த தேடுதலை நாம் பேணிப் பாதுகாக்கவில்லை என்றால், நமக்கு தேசம் என்று எதுவும் இருக்காது. இந்தியர்களாக நம்மை பிணைப்பது என்னவென்று நாம் உணர்ந்திட வேண்டும், இது இந்த 68-வது சுதந்திர தினத்தில் என் ஆசையும் ஆசியும். இந்த அடிப்படையான பண்பை பாதுகாப்பதன் மூலமாக மட்டுமே, நம் வேற்றுமையில் உள்ள அழகை நம்மால் இரசித்திட முடியும்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**:
www.innerengineering.org

சத்குருவின் சுதந்திர தின செய்தி 2015 http://tamilblog.ishafoundation.org/sadhguruvin-suthanthira-dina-seithi-2015/





சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# தமிழ் பேசும்...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

கொள்கையின் அடிப்படையிலானதுமான ஒரு ஆட்சியை அமைக்க முன்வர வேண்டும் என்று கேட்டிருந்தேன். அத்துடன் எமது சர்வதேச பரிமாற்றங்கள் எமக்கு நன்மை அளிப்பனவாக அமைய வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

ஜனநாயகக் கடமையினை நிறைவேற்ற முன்வருவதோடு தமிழ் பேசும் மக்களின் நலனுக்காய் அணிதிரண்டு சென்று வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். இம்மாதம் 17ந் திகதி காலையில் எந்தக் கட்சிக்கு நீங்கள் வாக்களிக்கப் போகின்றீர்கள் என்பதை முதலில் மனதில் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். அக்கட்சி



தேர்தல் நெருங்கி விட்டிருக்கும் இந்த நேரத்தில் எனது இனிய சகோதர சகோதரிகளுக்கும் இளைஞர்கள் யுவதிகளுக்கும் நான் ஒன்று கூறக் கடமைப் பட்டுள்ளேன். தேர்தல் விரைவில் முடிந்து விடும். பழைய வாழ்க்கை மீண்டும் திரும்பி விடும். ஆனால் உங்கள் இனிவரும் வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்பட வேண்டுமானால் உங்களுக்கான கட்சியை நீங்கள் தேர்ந்தெடுத்தால் போதாது. அக்கட்சியில் போட்டியிடும் திறமான வேட்பாளர்களை அடையாளம் கண்டால் போதாது. நீங்கள் அனைவரும் திரண்டெழுந்து சென்று ஆகஸ்ட் மாதம் 17ந் திகதி காலையில் வாக்களிப்பது மிக முக்கியம்.

வீட்டில் முடங்கிக் கிடக்காதீர்கள்! உங்கள் பொன்னான வாக்குகளை அன்று காலையே வாக்குச்சாவடிகளுக்கு சென்று அளியுங்கள். அதுமட்டுமே உங்களுக்குள்ள ஒரேயொரு திடமான ஜனநாயக உரித்து. நீங்கள் வாக்களிக்காது விட்டால் முன்னர் 25 வாக்குகளுடன் நாடாளுமன்றம் சென்றவர் களைப் போல் குறைந்த வாக்குகளுடன் குறையுள்ள வேட்பாளர்கள் உங்கள் குறை கேட்கும் நாடாளுமன்ற அங்கத்தவர்கள் ஆகி விடுவார்கள். நீங்கள் வாக்குகளை இடாவிடில் வேறு வழிகளில் உங்கள் வாக்குகளைப் பாவிக்க சில கூட்டங்கள் தயார் நிலையில் இருக்கக்கூடும். அவ்வாறானவர்களின் தவறான நடவடிக்கைகளுக்கு இடம் அளிக்காதீர்கள்.

"செய்தக்க செய்யாமையானுங் கெடும்" என்று வள்ளுவன் கூறியது போல நீங்கள் செய்யவேண்டிய உங்களது கடமையை செய்யாது போனால் அது உங்களுக்கு மாத்திரமல்ல ஒட்டுமொத்த தமிழினத்திற்கும் கேடுதருவதாய் அமைந்து விடும் என நான் அஞ்சுகின்றேன். எனவே எனது வடக்குக் கிழக்கு மாகாண அன்பார்ந்த சகோதர சகோதரிகளே! இளைஞர்கள், யுவதிகளே! தேர்தலில் வாக்களிப்பதென்ற உங்களது

எமது தனித்துவத்தையும் சுயநிர்ணயத்தையும் உறுதிப்படுத்தும் கட்சியாக இருக்க வேண்டும்.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின்னுந் தாயகம், தனித்துவம், தமிழர் சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டில் உறுதியாக இருந்து வருகின்ற கட்சியாக இருக்க வேண்டும். தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனஅழிப்புக்கு நீதி தேடுவதற்குப் பின்னிற்காத கட்சியாக, சுதந்திரமான சர்வதேச விசாரணை என்ற விடயத்தில் உறுதியுடன் உள்ள கட்சியா-கத் திகழவேண்டும். தமிழ் மக்களின் கௌரவம், சமத்துவம், பாதுகாப்பு போன்ற விடயங்களில் சமரசம் செய்யாத கட்சியாக இருக்க வேண்டும். போருக்குப் பின்னரான இந்தச் சூழலில், செயற்திறன் மிக்க புனருத்தாரண பணிகளை முன்னெடுக்கின்ற கட்சியாக இருக்க வேண்டும். காணமல் போகச் செய்யப்பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிவதற்காகவும், அரசியல் கைதிகள் விடுதலைக்காகவும் இதயசுத்தியுடன் செயற்படுகின்ற கட்சியாக இருக்க வேண்டும்.

சரணாகதியடையாமல், எமது தனித்துவத் தையுஞ் சுயநிர்ணய உரிமையையும் வலியுறுத்தி வரும் கட்சியை அடையாளங் காணுவது உங்களுக்குச் சிரமம் அளிக்காது என்று எண்ணுகின்றேன். அடிப்படைக் கோட்பாடுகளில் உறுதியாக இருக்கும் கட்சியில் இருக்கும் நேர்மையான, கொள்கையில் உறுதியுடைய, மக்களுக் காக அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடிய, தூரநோக்குப் பார்வைகொண்ட, எத்தருணத் திலும் விலைபோகாத மனோதிடம் கொண்ட வேட்பாளர்களை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். அதாவது அவர்களின் இலக்கங்களை மனதில் பதிந்து வைத்திருங்கள். அன்றைய தினம் காலை ஏழு மணிக்கே தேர்தல்களம் செல்லுங்கள். தவறாது வாக்களியுங்கள். வடகிழக்கு மாகாணங்களில்தான் மிகச்சிறந்த வாக்காளர் பங்குபற்றல் நடைபெற்றதென்ற நற் செய்திக்கு வலுவூட்டுங்கள்.

வடகிழக்கு மாகாணங்களில் தேர்ந்தெடுக்கப் படும் அனைத்து வேட்பாளர்களும் மக்கள் நலனே முதன்மையானது என்ற இலக்கினால் ஒன்று சேர்ந்து, ஒரு குடைக்குக் கீழ் ஒற்றுமையாய் வடகிழக்கு மக்களின் நலன் கருதி செயலாற்ற முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு உங்கள் ஒவ்வொருவருக்கும் இறைவனின் இடைவிடாத ஆசிகள் கிடைக்க வேண்டும் என்று இறைவனை இறைஞ்சி விடைபெறுகின்றேன்.

நன்றி.
நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்

# ஆதன வியாபாரத்தில்...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

தெரிவிக்கின்றன. இவர்களில் பெரும்பாலானவர்களின் முதல் தெரிவு பிரித்தானியாவாகும். இருந்தாலும் சிறுபகுதியினர் கனடாவையும் தெரிவு செய்கின்றனர்.

**கனடியன் டொலர்**

யூலை 15, 2015 இல் ஏற்பட்ட மத்திய வங்கியின் 1/4% வட்டிவீதக்குறைப்பு 0.75% இலிருந்து 0.50% கனடிய டொலரின் பெறுமதியில், பெரிய பாதிப்பை ஏற்படுத்த தொடங்கியதனைக் காணலாம். இத்தொடர்ச்சி யூலை 24, 2015 இல் ஒரு கனடியன் டொலரின் பெறுமதி அமெரிக்கன் டொலரின் 76.69 இற்கு சமனாகக் காணப்பட்டது.

செப்ரெம்பர் 2004 இலும் இவ்வாறான நிலைமை ஏற்பட்டது. இதனால் உள் நாட்டிற்கு வெளிநாட்டிலிருந்து வருபவர் களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம். ஆனால் இங்கிருந்து சுற்றுலாவிற்கு வெளிநாடுகளுக்கு செல்பவர்களின்



எண்ணிக்கையில் இறக்கம் ஏற்படலாம் எனத் தோன்றுகின்றது. அல்லது கனடியர் களின் கோடைக்கால பிரயாணம் கனடா விற்குள்ளேயே காணப்படலாம். இவ்வாறான உள்ளூர் பிரயாணங்கள் கனடிய பொருளாதாரத்திற்கும் உகந்ததாகலாம்.

# பான் அம்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

20.12 செக்கனிலும் ஓடி இரு தங்கப் பதக்கங்களையும் பெற்று உள்ளார்.

பங்கு பற்றிய விளையாட்டு வீரர்களுக்காக Athletes 140,000 வாழைப்பழங்களும், 100,000 Chicken breasts, 50,000 Steakes 20,000 Muffins ஐயும் Loblows நிறுவனம்



வழங்கியுள்ளது. 1200 Chevrolet வாகனங்களை இந்த நிறுவனம் வழங்கியுள்ளது.

மிகவும் சோகமான சம்பவம் ஆக 4 X 100 மீற்றர் ஓட்டத்தில் கனேடிய relay team முதல் இடத்தை பெற்றார்கள். Smellie (Brampton), Degrasse (Markham), Brendon (Brampton), Aaron (Toronto) 4 அதிவேக ஓட்டக்காரர்களும் முதல் இடத்தை பிடித்தும் அவர்களுடைய சந்தோசம் நிலைக்கவில்லை. USA யும் Trinidad உம் உடனடியாக இதை எதிர்த்து முறையீடு ஒன்றை விண்ணப்பித்தார்கள். அதாவது Gavin Smellie ஓடும் பாதையின் கோட்டை மிதித்தார் என்ற குற்றத்தை புரிந்ததற்காக இவர்களது அணி போட்டியிலுந்து விலக்கப்பட்டது. இதன் மூலம் Andre Degrase இன் 3வது தங்கப்பதக்க கனவு துர் அதிஷ்டமாகியது. இம்முறை கனடா பெற்ற வெற்றிகள் இனிவரும் உலக கிண்ண போட்டிகளில் கனேடிய வீரர், வீராங்கனைகள் பல வெற்றிகளை படைக்கப் போகின்றார்கள் என்பது மிகவும் துல்லியமாக தெரிகின்றது.

# ஐங்கலை வெண்பா

## நாடகம்

நடனமும் நாடகமும் நட்புக் கலைகள்
உடலுள்ளம் கொண்ட உயிர்கள் - படியில்
நடனம் முதலிலும் நாடகம் பின்பும்
வடிவெடுத்த தென்னல் வழக்கு. (25)

(படியில் - புவியில்.)
நடனத்தில் பேச்சில்லை நாடகத்தில் உண்டாம்)
அடிமூல வேறுபா(டு) அதுவே - நடனத்தை
நாடகமும் ஏற்றிடலாம் நாட்டியமும் நாடகமாய்
ஆடுதலும் உண்டாம் அறி. (26)

காலம் இடம்செயலை ஓரிடத்தில் காட்டுவதே
ஞாலம் அரங்கேற்றும் நாடகமாம் - கோலமது
நாட்டுக்கு நாடு நடைமுறையில் வேறுபடல்
கூட்டுக் கலையின் குணம். (27)

(கோலமது - அரங்கேற்றப்படும் முறைகள்.)

முத்தமிழில் நாடகத்தை மூன்றாம் இடத்தினிலே
வைத்ததனை நன்கு வளர்த்தெடுத்தார் - வித்தகராம்
கூத்தாளர்க்(கு) ஆர்வுடனே வாரிக் கொடுத்துதவிக்
காத்தனவாம் வள்ளல்மார் கை. (28)

உலகத்தில் நாடகத்தில் ஓங்கியவர் ஒப்பில்
திலகமென என்றும் திகழும் - புலவர்பிரான்
சேக்ஸ்பியர் மாற்றினார் சீராக நாடகத்தின்
போக்கினை நன்கு புரிந்து. (29)

சொல்வளத்துச் சேக்ஸ்பியரை தூயவிபு லானந்தர்
மல்மதங்க சூளா மணியென்றார் - கல்விகலை
எல்லை கடந்தெவர்க்கும் இன்பம் அளிப்பதற்கு
நல்லசான்(று) ஈதெனலாம் நாம். (30)

(மல் - வலிமை.)

ஈழத்துக் கூத்து மரபுகளின் ஏற்றத்தை
ஆளும்அண் ணாவிமார் ஆட்டத்தின் - கேழில்லா
மேன்மையெலாம் வித்தியா னந்தன் வெளிக்கொணர்ந்த
பான்மைதனை யார்மறப்பா ரே. (31)

(கேழில்லா - ஒப்பு இல்லா.)

வெள்ளித் திரையாலே வீழ்ந்துவிடும் நாடகமென்(று)
உள்ளியவர் தாமும் உவகையுற - துள்ளி
நடைபோடும் தற்கால நாடகத்தின் மாட்சிக்
குடைக்கில்லை கூனும் குணம். (32)



கவிஞர் வி. கந்தவனம்

# அக்னி சிறகுகள் - அப்துல் கலாம்

மாமனிதர் அப்துல் கலாம் குறித்த குறிப்புகளை அவரது அக்னி சிறகுகள் புத்தகத்தில் Embodiment of Love என்ற தலைப்பில் தனது தாயார் குறித்து அந்த மகான் சொன்னதை வைத்து கலாம் யார் என்பதை கொஞ்சம் வலியோடு உணரலாம்.

அதில் கலாம் சொல்கிறார். 1941ஆம் வருடம் இரண்டாம் உலகப் போர் கொழும்வை எட்டிவிட்டதால் இராமேஸ் வரத்திலும் போர் மேகங்கள். இராமேஸ் வரத்தில் எங்களின் பெரிய கூட்டுக் குடும்பம் வாழ்ந்த அந்த சிறிய வீட்டின் கதவையும் போரின் தாக்கம் தட்டியது. இதனால் உணவில் ஆரம்பித்து எல்லாவற் றுக்கும் தட்டுப்பாடு. 10 வயதான நான் வழக்கமாக காலை 4 மணிக்கு எழுந்து குளித்து விட்டு எனது ஆசிரியரிடம் கணக்குப் பாடம் கற்கச் செல்வேன். எனது ஆசிரியர் மிக வித்தியாசமானவர். வருடத்துக்கு 5 பேருக்கு மட்டும் இலவசமாக டியூசன் எடுப்பார். குளிக்காமல் வந்தால் கூட சேர்க்கவே மாட்டார். இதனால் எனது தாயார் எனக்கு முன் எழுந்து என்னை குளிப்பாட்டி, தயார் செய்து படிக்க அனுப்பி வைப்பார். 5:30 மணிக்கு திரும்பி வருவேன். எனக்காக என் தந்தை காத்திருப்பார். வந்தவுடன் என்னை பள்ளிவாசலுக்கு அழைத்துச் செல்வார். தொழுகை முடிந்ததும் திருக்குரான் வாசிக்க அரபிப் பள்ளிக்கு செல்வேன். திருக்குரான் ஓதிவிட்டு இராமேஸ்வரம் ரோடு ரயில் நிலையத்துக்கு 3 கிலோ மீட்டார் தூரம் ஓடுவேன். அது போர் நேரம் என்பதால் மதுரை- தனுஷ்கோடி ரயில் அந்த ரயில் நிலையத்தில் நிற்காது. பேப்பர் பண்டல்களை தூக்கி பிளாட்பாரத்தில் வீசுவார்கள். அதை அள்ளி எடுத்துக் கொண்டு இராமேஸ்வரம் நகரின் வீடு களுக்கு பேப்பர்களைப் போடுவேன். மற்றவர்களுக்கு முன் பேப்பர் போட்டுவிட வேண்டும் என்று தினமும் முனைப்போடு இருப்பேன். இதனால் வேக வேகமாக ஓடுவேன். பேப்பர் போட்டுவிட்டு 8 மணிக்கு வீட்டுக்கு ஓடி வருவேன். மிக எளிமையான காலை உணவு தான் எங்கள் வீட்டில் எப்போதும். அதிலும் கூட எனக்கு கொஞ்சம் அதிகம் தருவார் என் தாயார். நான் படித்துக் கொண்டே (பேப்பர் போடும்) வேலையும் பார்க்கிறேன் இல்லையா. எனக்கு ஓட சக்தி வேண்டுமே,



அதற்காக.
ஒரு நாள் இரவு என் வீட்டில் நடந்த சம்பவத்தை நான் இங்கே பகிர்வது அவசி யம் என்று நினைக்கிறேன். இரவு அனைவரும் உண்டு கொண்டு இருந்தோம். நான் என் தாயார் சப்பாத்தி தரத் தர சாப்பிட்டுக் கொண்டே இருந்தேன். சாப்பிட்டு முடித்தபின் என் அண்ணன் என்னை வீட்டுக்கு வெளியே அழைத்துச் சென்றார். கலாம், நீ என்ன காரியம் செய்கிறாய். அம்மா நீ சாப்பிட சாப்பிட சப்பாத்தி தந்து கொண்டே இருக்கிறார். அவர் தனக்காக போட்ட சப்பாத்தியையும் உனக்கே தந்து விட்டார். நீயும் எல்லாவற்றையும் தின்று விட்டாய். இனி வீட்டில் மாவும் இல்லை, சப்பாத்தியும் இல்லை. கொஞ்சம் பொறுப்பாக நடந்து கொள். இது கஷ்டமான காலம். தாயாரை பசியில் வாட விடாதே என்றார். இந்த விவரத்தை கொஞ்சமும் உணராமல் சாப்பிட்ட எனக்கு கை கால்கள் நடுங்கிவிட்டன. என்ன காரியம் செய்து விட்டோம் என கலங்கிப் போனேன். ஓடிப் போய் என் தாயாரை கட்டிக் கொண்டேன். அவரிடம் தான் தியாகம் கற்றேன்.

காலை 4 மணிக்கு எழுந்து படிக்க, பேப்பர் பண்டல் தூக்க, அதை வினியோகிக்க, பள்ளிவாசல் செல்ல, பள்ளிக்கூடம் செல்ல, மாலையில் பேப்பருக்கான பணம் வசூலிக்க என ஓடிக் கொண்டே இருப்பேன். ஆனாலும், இரவு 11 மணி வரை படிப்பேன். நான் சாதிப்பேன் என என் தாயார் நம்பியிருக்க வேண்டும். இதனால் அந்தக் கஷ்டத்திலும் எனக்கு தனியாக ஒரு மண்ணெண்ணெய் விளக்கைத் தந்து 11 மணி வரை படிக்க என் தாயார் உதவினார். அது மட்டுமல்ல, அவரும் என்னோடு விழித்திருப்பார். பின்னர் என்னை தூங்க வைத்துவிட்டே அவர் உறங்குவார். என் தாயார் அன்பும் கருணையும் நிறைந்தவர். எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு புனிதத் தன்மை கொண்டவர். 5 வேளை தொழுகை புரிவார். அவர் தொழுகை செய்யும்போது ஒரு புனித தேவதை மாதிரி எனக்குத் தெரிவார். இவ்வாறு சொல்லும் கலாம் தனது தாயாருடன் ஒரு முழு இரவு நாளில் நடந்த சம்பவத்தை ஒரு கவிதையாய் வடித்துள்ளார். இதுவும் 'விங்ஸ் ஆப் பயர்' புத்தகத்தில் இருக்கிறது. அந்தக் கவிதையில் தனக்காக தனது தாயார் பட்ட கவலை, குடும்பத்திற்காக தினமும் காலை 4 மணி முதல் ஓட்டமே வாழ்க்கையாக்கிக் கொண்ட தனது இளைய மகனுக்காக அந்தத் தாயார் விட்ட கண்ணீரை கவிதையாய் சொல்கிறார் கலாம். இதைப் படிப்போர் யாரும் கண்ணீர் விடாமல் இருக்க முடியாது.

"தாய்" என்ற தலைப்பிலான அந்தக் கவிதை, "அம்மா, எனக்கு இன்னும் நினைவிருக்கிறது அந்த நாள். எனக்கு வயது 10 அது ஒரு பௌர்ணமி தினம் என் உலகம் உங்களுக்கு மட்டும் தானே தெரியும், அம்மா நான் உங்கள் மடியில் படுத்திருக்கிறேன். திடீரென நள்ளிரவில் என் காலில் விழுந்த கண்ணீர் துளிகள் என்னை திடுக்கிட்டு எழ வைத்தன குழந்தையின் வலிகளை தாய் மட்டும் தானே உணர முடியும் அம்மா!" ஓடி ஓடி உழைத்துப் படிக்கும் மகனை வருடியபடி கலாமின் தாயார் கண்ணீர் விட அந்தக் கண்ணீரின் வெப்பத்தில் எழுந்து தனது தாயாரை பார்த்த நினைவில் கலாம் எழுதிய கவிதை இது. அந்தக் கவிதயை இப்படி முடிக்கிறார் கலாம்,

"உங்கள் அன்பும், உங்கள் பாதுகாப்பும், உங்கள் நம்பிக்கையும் எனக்கு பலம் தந்தன. இந்த உலகத்தை அச்சமின்றி எதிர்கொள்ள வைத்த தாயே, இறுதித் தீர்ப்பு நாளில் நாம் மீண்டும் சந்திப்போம், என் அம்மா"! அன்பு நிறைந்த தன் தாயாரை பார்க்க கலாம் போய்விட்டார் போல.

BUY, SELL or LEASE
Dinesh Jeganathan
Sales Representative



Cell: 647-895-3466
Email: jdinesh@live.ca
Office: 416.298.3200
Fax: 416.298.3440
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6
*each office independently owned and operated
** Not intended to solicit Buyers/Sellers under representation agreement.

# அன்புடைமை - 23

கடந்த இதழில் தாயன்பு பற்றிப் பல ஆய்வுத் தகவல்களையும், முதுமொழிகளையும் மையமாக வைத்து உரையாடியிருந்தோம். இன்றும் தொடர்ந்து இவ்விடயம் பற்றி உரையாடலாம் என நினைக்கின்றேன். 1995ஆம் ஆண்டு குழந்தைகளின் வளர்ச்சிக்கான அமைப்பு ஒன்றின் தனிக்கட்டுரைத் தொகுதி ஒன்றில் இடம்பெற்ற ஆய்வுக் கட்டுரை ஒன்றில் ஒரு குழந்தைக்குத் தாயன்பு, தந்தையன்பு மட்டுமன்றி குறைந்த பட்சம் மேலும் ஒரு வளர்ந்தவரின் அன்பு அவசியம் தேவைப்படுகின்றது என்ற கருத்து வலியுறுத்தப்பட்டு இருந்தது. மூன்றாமவர் குழந்தையின் பேரன், பேத்தி, ஆசிரியர், குடும்ப நண்பர், நெருங்கிய உறவினர் என யாராகவும் இருக்கலாம் என்றும் அந்தக் கட்டுரையில் கூறப்பட்டிருந்தது. குழந்தைகள் தமது பெற்றோர் தவிர வேறு ஒருவரிடம் நெருக்கமான அன்பைக் கொண்டிருத்தலையும், வேறு ஒருவரிடமும் அன்பை எதிர்பார்த்து நாடுதலையும் நாங்கள் அவதானிக்க முடிகின்றது. குழந்தைகளின் மிகவும் சிறிய பருவத்தில் கேட்டலில் முழுமையான வளர்ச்சியைப் பெற்றிருக்க மாட்டார்கள். அவர்களால் சூழலில் உள்ள எல்லா ஒலிகளையும் உள்வாங்க முடியாது. இதனாலேயே குழந்தைகள் அழுகின்ற பொழுது ஏற்படும் சத்தம் எம்மைப் பாதிப்பதை விட குறைந்த அளவிலேயே அவர்களால் உணரமுடிகின்றது. குழந்தைகளின் இத்தன்மை போன்ற பல விடயங்களை ஒரு தாய் நன்குணர்ந்து கொள்ள வேண்டும் என்று ஆய்வுத்தகவல்கள் கூறுகின்றன. குழந்தைகள் வளரும் பருவத்தில் வானொலி ஒலியையோ அல்லது தொலைக்காட்சியில் ஏற்படும் ஒலியையோ அவர்களைத் தொடர்ச்சியாகக் கேட்க வைப்பதால் ஒலியின் வடிவங்களைக் கிரகித்துக் கொள்வதில் சிக்கல் ஏற்படலாம். ஒரு குழந்தை அதிகளவு இசை, பாடல்களைக் கேட்பதால் நன்மை ஏற்படுகின்றது என்ற கருத்தையும் நாங்கள் கேள்விப்பட்டிருக்கின்றோம். இந்த விடயத்தில் பெற்றோர் புரிந்து கொள்ள வேண்டிய விடயம் "ஒரு குழந்தைக்கு அண்மையில் இருந்து ஒரு பாடலை ஒருவர் பாடிக்கேட்க வைப்பதிற்கும், குழந்தையின் பின்புறச் சூழலில் வானொலி-யைப் போட்டு விட்டு குழந்தை இசையைக் கேட்கச் செய்வதிற்கும் இடையில் நிறைந்த வேறுபாடு உள்ளது" என்பதாகும். இதுபற்றி ஆய்வாளர் எலியட் "குழந்தைகள் இசையினை விரும்புகின்றார்கள். இசையினை கவனம் செலுத்தப்படக் கூடிய நடவடிக்கையாக வழங்கப்பட



வேண்டுமே தவிர ஒரு பின்புறச் சத்தமாக அல்ல" ("Music Should be a focused activity, not a background noise") என்றவாறு கூறுகின்றார்.

இந்தக் கட்டுரையில் இந்த விடயத்தை நான் குறிப்பிடுவதற்கு ஒரு காரணம் உள்ளது. ஒரு தாய் அல்லது தந்தை குழந்தைகளை வளர்ப்பதற்கு வேண்டிய போதுமான அறிவைப் பெற்றுக்கொள்வது மிகவும் முக்கியமானது என்ற கருத்தை வலியுறுத்துவதற்காகவே நான் இங்கு இவ்விடயத்தைக் குறிப்பிட்டேன். வெறுமனே தாயன்பு, தந்தையன்பு மட்டும் குழந்தையின் முழுமையான வளர்ச்சிக்குப் போதாது, குழந்தையின் வளர்ச்சிக்குத் தேவையான விடயங்களை நன்கு அறிந்து அதற்கேற்ப செயற்படுவதோடு முழுமையான அன்பையும் பகிர்ந்து கொள்வதே ஆரோக்கியமானது என்ற கருத்தை வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். ஆய்வாளர் எலியட் மேலும் குழந்தைகளைத் தொடர்ச்சியாக அன்பினை மட்டும் பொழிந்து அவர்களிற்கு வேண்டிய நித்திரை, ஆரோக்கியமான உணவு, தேவையான உடற்பயிற்சிகள் போன்றவற்றில் கவனம் செலுத்தாது இருத்தல் ஆபத்தானது என்றும் குறிப்பிடுகின்றார். பெற்றோரின் பேச்சுப் பரிமாற்றம் மிகவும் முக்கியமானது. தாய்மொழி அறிமுகத்திலும் பெற்றோர்கள் சிறுவயதில் இருந்தே கவனம் எடுக்க வேண்டும். குழந்தைப் பருவத்தில் பெற்றோர்கள் அவர்களுடன் சேர்ந்து விளையாடுவது மிகவும் நல்லது. பெற்றோர்கள் குழந்தைகளுடன் பேசுகின்ற பொழுது அவர்களுடன் பேசுவதிலும், அவர்கள் கொடுக்கும் பதில் பேச்சு முயற்சிகள், வாயசைவுகளை அவதானித்து ஊக்கப்படுத்தி, உற்றுக் கவனித்து பதில் மறுமொழிகளை வழங்கி வருவதன் மூலமும் அவர்களை விரைவாக பேசச் செய்யலாம் என்று கூறப்படுகின்றது. புலம்பெயர்ந்த சூழலில் பெற்றோர்களால் தமது குழந்தைகளுடன் அதிக நேரத்தைச் செலவழிக்க முடியாமல் திண்டாடுகின்றார்கள். இதனால் குழந்தைகள் பேசத் தொடங்குவதில் சிக்கலையும், தாமதத்தையும் அடைகின்றார்கள். பெற்றோர்கள் மிகவும் கவனம் எடுக்க வேண்டும். இயன்றளவு அதிகளவு நேரத்தை குழந்தைகளுடன் செலவழிப்பது மிகவும் அவசியமாகின்றது. குழந்தைகள் மிகவும் திறமை கொண்டவர்களாக வளர்வதற்குத் தேவையான முக்கியமான தேவை அவர்களுடன் பேசுவது என்று ஆய்வாளர் எலியட் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு குழந்தையைப் பெற்றெடுத்த தாய், தந்தை குடும்பத்தில் உள்ள பெரியவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் செய்யும் தவறுகள் குழந்தைகளைப் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இதன் காரணமாகவே வளர்ந்த நாடுகளில் குழந்தை நலன் சார்ந்த மிகவும் கட்டுப்பாடான சட்டங்கள் அமலில் உள்ளன. ஆனாலும் பெற்றாரின் கவனக்குறைவாலும், அன்புக் குறைவாலும், பொருளாதாரக் காரணங்களாலும், அறியாமையாலும் குழந்தைகள் நலன் பெருமளவில் பாதிக்கப்பட்டே வருகின்றது. தாயன்பு பற்றி உரையாடும் இந்த வேளையில் குழந்தைகளின் நலனில் பெற்றோர் எடுக்க வேண்டிய கவனம் பற்றிச் சில முக்கியமான விடயங்களை இன்று உரையாடலில் சேர்த்துக் கொண்டேன். இத்தகவல்கள் வாசகர்களாகிய உங்களுக்கும் ஏதோ ஒரு வகையில் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகின்றேன். தாயன்பு மட்டுமன்றி தந்தையன்பு மற்றும் குடும்பத்தில் உள்ள ஏனைய உறுப்பினர்கள் குழந்தைள் மீது செலுத்தும் அன்பும் முக்கியமான தாக்கத்தைக் குழந்தைகளில் ஏற்படுத்துகின்றன. பதிலுக்கு குழந்தையும், அந்தக் குடும்பத்தில் உள்ள எல்லோரையும் தனது மழலையாலும் மகிழ்ச்சிப்படுத்துகின்றது அல்லவா. ஒரு குழந்தை வளரும் பருவத்தில் முழுக்குடும்பமுமே அவர்கள் நலனில் அக்கறை எடுக்க வேண்டும். அவர்கள் மீது உண்மையான அன்பைச் செலுத்த வேண்டும்.





அன்புடைமை பற்றித் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணக் கருத்துக்களை எழுதுங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்.

**- அகணி -**

authorakani@yahoo.com

# மக்களை குழப்பத்தில்....

**07ஆம் பக்கத்தொடர்ச்சி**

இக்கட்சியினர் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை கடுமையாக சாடி வருகின்றனர்.

அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்ட கட்சியினரை துரோகிகள் என கடந்த காலங்களில் கூறப்பட்டு வந்த நிலைமை மாறி, தமிழ் தேசியத்தை முன்னிறுத்தி செயற்படும் கட்சியை சாந்தவர்களே ஒருவருக்கொருவர் துரோகிகள் என தூற்றிக்கொள்ளும் ஒரு அரசியல் களத்தை தற்போது பார்க்க முடிகின்றது.

உதாரணத்திற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் அவருடன் நெருங்கிப் பணியாற்றுபவருமான சுமந்திரனும் இப்போது அதிக தாக்குதல்களுக்கு உள்ளாகி வருகின்றனர். சுமந்திரன் மீது தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் மோசமான கருத்துக்களை முன்வைக்க, ஈபிடிபி டக்ளஸ் தேவானந்தாவிற்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கும் எதுவித வித்தியாசமும் இல்லை என்று சுமந்திரன் கூறுகின்றார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில், மஹிந்த ராஜபக்ஸவிற்கு ஆதரவாக டக்ளஸ் செயற்பட்டார். தமிழ் மக்கள் தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்ததன் மூலம் மஹிந்த மீண்டும் வருவதற்கு ஆதரவாக கஜேந்திரகுமார் செயற்பட்டார் என சுமந்திரன் கூறுகின்றார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு மக்கள் பெரும்பான்மை வாக்குகளை அளித்து வெற்றிபெறச் செய்ய வேண்டும் எனவும் 2016இல் தீர்வினைப் பெற்றுத்தர முடியும் எனவும் சம்பந்தன் கூறும் கருத்திற்கு ஜனநாயக போராளிகள் கட்சி கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. 2016இல் இனப் பிரச்சினைக்கு தீர்வைப் பெறுவது நடைமுறைச் சாத்திய மற்றது எனவும், சம்பந்தன் பொய் பேசுகின்றார் என்றும் கூறும் ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் 2016இல் தீர்வினை பெற்றுத் தராவிட்டால் கூட்டமைப்பினர் அந்த ஆண்டு இறுதியில் பதவி விலக வேண்டும் என ஜனநாயக போராளிகள் கட்சி தெரிவிக்கின்றது.

தமிழ் தேசியத்தை முன்னிறுத்தி அரசியலில் இறங்கியுள்ள இக்கட்சிகளுக் குள்ளேயே இவ்வாறு சரச்சைக்குரிய கருத்துக்கள் வெளியிடப்படுகின்றமை தமிழ் அரசியலில் ஆரோக்கியமற்ற நிலையினையே தோற்றுவித்துள்ளது. இவைதான் இன்று மக்களுக்கு ஏற்பட்டுள்ள குழப்ப நிலைக்கும் காரணமாகும். இவர்கள் அனைவரும் முரண்பாடுகளுக்கு மத்தியில் ஒரு குடையின் கீழ் வந்திருந்தால் மக்களுக்கு எவ்வித குழப்பநிலையும் ஏற்பட்டிருக்காது.

இவ்வாறான முரண்பாட்டு நிலை தமிழ் மக்களின் வாக்குகளை பிரிவடைய - சிதைவடையவே வழிவகுக்கும். இவ்வாறு தமிழர் வாக்குகள் சிதைவடைவதால் அதில் இலாபமடையப் போவது பேரினவாதிகளும் தமிழ் தேசியத்திற்கு எதிரான சக்திகளும் தான்.

# நோய்களை நீக்கும் நேச்சுரோபதி

## (Naturopathy) மருத்துவம்

ஆரோக்கியத்தின் அவசியம்

மனிதன் வாழப்பிறந்தவன். இந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக இருப்பது ஆரோக்கியம் ஆகும். மனித குலத்தின் முக்கிய கடமை தன்னைப் பேணிக்காத்தலே ஆகும் என்று சொல்லிச் சென்றார்கள் நம் முன்னோர்கள். ஒரு மனிதன் ஆரோக்கியமின்றி இருக்கும் போது அவரால் மற்றவர்களுக்கு என்ன செய்ய முடியும்? அத்துடன் அவர் செய்ய வேண்டிய சகல கடமைகளையும் செய்து முடிப்பதற்கு மிகவும் முக்கியமானதொன்று ஆரோக்கியம் என்பதை ஒவ்வொரு வரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**ஆரோக்கியம் என்றால் என்ன?**

ஆரோக்கியம் என்பதற்கு பலரும் பலவிதமான கருத்துக்களைக் கொண்டுள்ளனர். நோயில்லாது இருப்பதையே ஆரோக்கியம் என்றே அனைவரும் எண்ணுகின்றனர். நோயில்லாத நிலைவேறு, ஆரோக்கிய நிலைவேறு. ஒருவர் ஏழையாக இல்லை என்பதற்கும் பணக்காரராக இருக்கிறார் என்பதற்கும் வேறுபாடு உண்டு. ஏழ்மையற்ற நிலையே பணக்கார நிலையாக ஆகிவிட முடியாது. அதுபோல நோயற்ற நிலைதான் ஆரோக்கியமான நிலை என்று நாம் கருதக்கூடாது.

நோயற்றநிலை, ஆரோக்கியமான நிலை இவை இரண்டுக்குமுள்ள வேறுபாட்டினை பட்டியல் போட்டுப்பார்க்கும் போது இதனைத் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

**நோயில்லாமல் இருப்பவர்**

1. நோயில்லாமல் இருப்பவர். ஆனால் மந்தமாக இருப்பார்.
2. உற்சாகமின்றி காணப்படுவார்
3. மகிழ்ச்சி இல்லாதவராக இருப்பார்
4. எதிலும் ஆர்வமின்றி இருப்பார்.
5. எதையும் மனதில், பதியவைத்துக் கொள்ளும் ஆற்றலின்றி இருப்பார்.
6. தாழ்வு மனப்பான்மையும் எதிலும் சலிப்பு கொண்டவராகவும் இருப்பார்.

**ஆரோக்கியமாக இருப்பவர்**

1. நோயின்றி இருப்பார். ஆனால் சுறுசுறுப்பாக இருப்பார்.
2. எப்போதும் உற்சாகமாகக் காணப்படுவார்.
3. தானும் மகிழ்ந்து பிறரையும் மகிழ்விப்பார்.
4. எல்லாவற்றிலும் ஆர்வமாக இருப்பார்.
5. நினைவாற்றல் சிந்தனைத்திறன் உடையவராக இருப்பார்.
6. தன்னம்பிக்கை, சலிப்பின்மை, தோல்வியைக் கண்டு தளராத மனம் கொண்டவராக இருப்பார்.

இவ்வாறு பல வேறுபாடுகளைக் கூறிக் கொண்டே போகலாம். இடையிடையே உடல் பரிசோதனை செய்து கொண்டு தனக்கு ஒரு நோயும் இல்லை என்று இருந்துவிட்டால் போதாது. அட்டவணையில் உள்ளது போன்று ஆரோக்கியமான நிலையை அடைய ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும்.

உடலில் உற்சாகமும் மனதில் மகிழ்ச்சியும் கூடிய வாழ்வே ஆரோக்கிய வாழ்வு ஆகும். 'நோய் வரும் பின்னே மந்தத்தன்மை வரும் முன்னே'

நோய் வருவதற்கு முன் காத்துக் கொள்வதே புத்திசாலித்தனம். ஆனால் நோய் வருவதை எவ்வாறு முன்கூட்டியே அறிந்து கொள்வது. ஒருவருக்கு காய்ச்சல் போன்ற நோய்கள் வருவதற்கு முன்பாகவே அவரது உடலில் ஒருவித மந்தத் தன்மை காணப்படும். அந்த மந்தத்தன்மையை எவ்வாறு உணர்வது? கை, கால் சோர்வு, பசியின்மை, உடல் பாரமாக தோன்றுதல், அடிக்கடி கொட்டாவி வருதல், உடல் சமநிலை தன்மையை இழுத்தல் போன்றவற்றால் மந்தத்தன்மையை உணர முடியும்.

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

**மந்தத்தன்மையைப் போக்க**

1. இயன்றவரை ஓய்வு எடுக்க வேண்டும் அல்லது கடினமான வேலைகளைத் தள்ளிப்போடவேண்டும்.
2. வழமையான உணவுகளை அருந்தாமல் எளிதாக செரிமானமடையும் கஞ்சிகள், பழச்சாறுகளை அருந்தலாம்.
3. அடிக்கடி தண்ணீர் மட்டும் அருந்துதல் சிறந்தது.
4. இரவு உணவைத் தவிர்த்து அதற்கு மாற்றாக காய்கறிகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட சூப் வகைகளை அருந்தி வரலாம். அத்துடன் பசி உணர்வு இல்லாத போது உண்ணா நோன்பு இருந்தாலே மந்தத்தன்மை குறைந்து சுறுசுறுப்பு அதிகமாகும். பின்னர் வழமைபோல் உணவு சாப்பிடலாம்.



இவ்வாறு கடைப்பிடிப்பதன் மூலம் வர இருக்கிற காய்ச்சல், தடிமல், இருமல் போன்ற நோய்களைத் தவிர்க்கலாம். ஆனால் தொடர்ந்து மூன்று வேளையும் சாப்பிட்டபடி இருந்தால் காய்ச்சல் அல்லது வேறு ஏதேனும் கடுமையான நோயாக மாறும்.

**வருமுன் காக்கும் பழங்கள்**

நோய்கள் வருமுன் ஏற்படும் மந்தத்தன்மை கண்டவுடன் வழமையான உணவைத் தவிர்த்து சாறுள்ள பழங்களை மட்டும் அருந்த வேண்டும். ஆரஞ்சு திராட்சை, மாதுளை அன்னாசி போன்ற பழங்களைச் சாறு பிழிந்து அருந்த வேண்டும். இவைகள் கிடைக்காது விட்டால் எலுமிச்சையின் சாறு பிழிந்து சிறிது பனம் கற்கண்டைப் பொடி செய்து தண்ணீரில் கலந்து 2 மணி நேரத்திற்கு ஒரு முறை அருந்தலாம். இதனால் நோய்வருமுன் ஏற்படும் மந்தத்தன்மை நீங்கும்.

அடுத்து சதை உள்ள பழங்களைப் பொறுத்த வரை உடல் களைப்பு, பலயீனம், சோர்வு என்பனவற்றை போக்கக்கூடிய ஆற்றலுள்ளது.

'மாதா ஊட்டாத சோற்றினை மாங்கனி ஊட்டும்'
என்பது பழமொழி
உடல் நலிவுற்று நோய்வாய்ப்பட்டு இருப்பவர்களுக்கு மாம்பழம் ஒரு அருந்து.

ஆரோக்கியத்தை விரும்பும் ஒவ்வொருவரும் தினமும் காலை அல்லது மதிய உணவுடன் ஏதேனும் ஒரு கீரையின் சாற்றினை அருந்த வேண்டும் மேலும் நார்ச்சத்து (Fibre) அதிகமாகவுள்ள உணவுகளை உண்டு வந்தால் மலச்சிக்கல் ஏற்படாது தடுக்கலாம். பெரும்பாலான நோய்கள் உருவாக மூலகாரணம் மலச்சிக்கல் தான்.

மிகுதி அடுத்த இதழில் தொடரும்



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721



**YOGA - MEDITATION CLASSESS**

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



**GTA Square Mall** இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: **Scarborough - Markham** - செல்வ சோதி - **416.289.2033**

# MATH WORLD

MOST ADVANCED TALENTED HELP

**More Than 27 Yrs of Experience in Teaching**



# A Fast Track MATH Program

**For**

# G11 & G12

**(Proven to help score in 90's)**

**Learn in Advance Prior to School**

**Two Chapters in Advance**

**Starts in Aug 2nd week**

**INFO: 416-666-5515**

**Other grades are also being accepted at the same time.**

# அந்நியர்களும் அபூர்வ விமானங்களும் UFO's & Aliens

## (சுவாரசியமான அறிவியற் தகவல்களைக் கொண்ட தொடர்)

# றொஸ்வெல் விபத்தின் விளைவுகள்

பொதுவாகவே விமான விபத்துகள் பெரும் உயிர்ச் சேதங்களை ஏற்படுத்துவதைத்தான் நாங்கள் அறிவோம். ஆனால் றொஸ்வெலில் நடந்ததாகக் கருதப்படும் அந்நியர்களின் அபூர்வ விமானத்தின் விபத்தானது மனித குலத்திற்கு பெரும் அறிவியல் சொத்தாக, அறிவியலின் திருப்பு முனையாக அமைந்து விட்டது என்று யூஎவ்ஓ ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். எப்படி என்பதைத் தெரிந்து கொள்வோம்.

கிட்டத்தட்ட 55 ஆயிரம் வருடங்களின் முன்னர் புவியிற்கு வந்த வேற்றுக்கிரக வாசிகள் ஹோமோ சோபியன்கள் என்று கூறப்படும் எங்கள் முன்னவர்களின் மூளையில் ஏற்படுத்திய மூளை விகாரத்தின் விளைவாகப் புத்திசீவிகளாக மாறிய மனிதர்கள் தமது அறிவியல் வளர்ச்சிப் பாதையில் அதே வேற்றுக்கிரகவாசிகளின் அறிவியற் செல்வங்களை அல்லது செல்வங்களிற் சிலவற்றைப் பெற்றுக் கொண்டார்கள், றொஸ்வெல் விபத்தின் பின்னராக. இது தீட்டிய மரத்திலேயே கூர் பார்த்த கதைதான். என்றாலும் எமக்குச் சாதகமான விடயம்தான்.

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏலியன் ஆய்வாளர்களின் கருத்துப்படி, றொஸ்வெலில் விபத்துக்குள்ளானது அந்நியர்களின் அபூர்வ விமானங்களில் ஒன்றாகும். காலநிலை அறியும் பூதியின் (பலூன்) வெடிப்பல்ல. இவ்விபத்தின் போது சில அந்நியர்களும் அமெரிக்கர்களிடம் உயிருடன், படுகாயங்களுடன் அகப்பட்டுக் கொண்டார்கள். இந்த ஏலியன்கள் படுகாயம் அடைந்து இருந்ததாலும் அவர்களது விமானம் விபத்துக்குள்ளானதாலும் அந்த அந்நியர்களுக்கு தம்மவர்களுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. அவர்களது பழுதடைந்த விமானம் கூட அமெரிக்கர் களிடம் பத்திரமாக ஏரியா 51க்குள் மறைக்கப்பட்டுவிட்டது.

சில நிபுணர்கள், விஞ்ஞானக் கெட்டிக்காரர் கள் றொஸ்வெலில் பெறப்பட்ட விமானச் சிதலங்களில் இருந்து ஏதாவது புதிய சங்கதிகளைப் பெற்றுக் கொள்ள முடியுமா என்ற எதிர்பார்ப்புடன் அழைத்து வரப்பட்டி ருந்தார்கள். அத்துடன் விபத்தின் போது படுகாயங்களுக்குள்ளான ஏலியன்களின் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ளவும் அமெரிக்காவின் பலபகுதிகளில் இருந்தும் பல்வேறு துறைகளின் நிபுணர்களும் ஏரியா 51க்கு (கடத்திக்) கொண்டு வரப்பட்டார்கள். இந்த நிபுணர்களின் உதவியுடன் சில வேற்றுக்கிரகவாசிகளின் உயிர்கள் காப்பாற் றப்பட்டு விட்டன. இப்படிக் காப்பாற்றப்பட்ட வேற்றுக் கிரகவாசிகள் ஏரியா 51இன் சில பகுதிகளில் சுதந்திரமாக நடமாடக் கூடியதாகவும் இருந்திருக்கின்றது. அப்படித் திரிந்தவர்கள் அங்கிருந்தவர்களுடன் இயல்பாகப் பழகியும் இருக்கின்றார்கள் என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

அடுத்து நடந்ததுதான் முக்கிய சம்பவமாக இருக்கின்றது. உயிர் மீட்கப்பட்ட ஏலியன் கள் தங்களது இடத்திற்குத் திரும்புவதற்கு விழைந்திருக்கிறார்கள். ஆனால் அதற்குரிய வசதிகள் அவர்களிடம் இல்லை. அவை-யெல்லாம் அகற்றப்பட்டு விட்டன அல்லது பழுதடைந்து போயின. தங்களது விமானத்தை பழுது பார்ப்பதற்கும், தங்களது தாய்க் கலத்துடன் தொடர்பு கொள்வதற்கும் அமெரிக்க அதிகாரிகளிடம் உதவியைக் கேட்டுள்ளார்கள். இவர்களது தாய்க் கலம் கதிரவத் தொகுதிக்கு அப்பாலே எங்களது பால்வழிக் கலக்சி யினுள் எங்கேயோ ஓரிடத்தில் நிற்க வேண்டும் என்பது ஏலியன் ஆய்வாளர் களினது கணிப்பு. இங்கே ஒரு விடயத்தைத் தெளிவு படுத்த வேண்டும். அமெரிக்கர் களுக்கும் வேற்றுக்கிரக வாசிகளுக்கும் மொழி பிரச்சனையாக இருக்கவில்லை. இரு பகுதியினருக்கும் இடையில் ரெலிப்பதி முறையில் தொடர்பாடல்கள் நடந்திருக்கும் என்று ஏலியன் ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.



உயிர் மீட்கப்பட்ட ஏலியன்கள் அமெரிக்கர்களை உதவி கேட்கையில்தான் அமெரிக்கர்களின் அறிவியல் வளர்ச்சியின் தாகம் வெளிப்பட்டது. சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். வேற்றுக் கிரகவாசிகளின் வேண்டுதல் களுக்கு அமெரிக்கர்கள் ஒத்துக் கொண்டார் கள் சில நிபந்தனைகளுடன். வேற்றுக் கிரகவாசிகளின் விண்வெளிப் பறத்தலின் தொழில் நுட்பத்தையும் நுணுக்கங்களையும் வேறு சில அறிவியல் இரகசியங்களையும் பேரம் பேசிக் கேட்டுக் கொண்ட அமெரிக்கர் களிடம் ஏலியன்கள் ஒத்துக் கொண்டார்கள்.

இதன் விளைவாக அமெரிக்காவில் அறிவி யல் திடீரெனத் துரிதமாக வளர்ச்சி காணத் தொடங்கியது. இராணுவப் பாதுகாப்பு களுக்கு மட்டுமே, அதுவும் மட்டுப் படுத்தப்பட்ட அளவில் இருந்த தொழில் நுட்பங்கள் எல்லாம் இலகுவாக்கப்பட்டு பொது மக்களையும் வந்து சேர்ந்தது. இந்நாட்களின் தொழில் நுட்ப வளர்ச்சியின் அத்திவாரம் எனக் கூறப்படும் ICக்கள் ஏலியன்களின் மூளையின் வெளிப்பாடு என்று அடித்துக் கூறும் ஏலியன் ஆய்வாளர்கள் பலருண்டு. சிலிக்கன் பள்ளத்தாக்கும் திடீரெனப் பிரபலமடையத் தொடங்கியது. ICக்கள் எல்லாக் கருவி களிலும் பயன்படத் தொடங்கின. பெரிய அறைகளைப் பிடித்திருந்த கணினிகள் எல்லாம் சின்னச் சின்னப் பெட்டிகளுக்குள் அடைக்கப்பட்டு இன்று சாதாரண பொருட் கள் ஆக்கப்பட்டு விட்டன. மேலும் இந்த அறிவியல் வளர்ச்சியானது அமெரிக்கா வினுள் மட்டும் அடைந்துவிடாது உலகம் முழுவதுக்குமே மெதுமெதுவாகப் பரவத் தொடங்கின. இவற்றிக்கெல்லாம் காரணம் றொஸ்வெலில் 1947 யூலையில் நடந்த அந்நியர்களின் அபூர்வ விமானத்தின் விபத்தே ஆகும்.

இப்படியான நடவடிக்கைகளின் உச்சக் கட்டம்தான் அமெரிக்கர்களின் அம்புலிப் பயண வெற்றிகள். அமெரிக்க விஞ்ஞானி களுக்கு ஏலியன்களின் உதவி கிட்டியதை உறுதிப்படுத்திய பின்னர்தான் அப்போது இருந்த அமெரிக்க ஜனாதிபதி யோன் எவ்.. கென்னடி 'இந்த தசாப்பதத்தினுள் அமெரிக்கர்கள் சந்திரத்தரையில் காலடி வைப்பார்கள்' என அடித்துக் கூறினார் எனக் கூறும் ஆய்வாளர்களும் உண்டு.

ஏலியன்களுக்கும் அமெரிக்கர்களுக்கும் இடையிலான ஒப்பந்தம் ஒன்றிரண்டு பேருக்கு மட்டுமே தெரிந்த விடயம். ஆனால், தொழில் நுட்ப வெளிப்பாடுகள் அந்தந்தத் துறை வல்லுனர்களிடம் செயற்பாட்டுக்காகப் போகையில் அவற்றின் பரவலைத் தடுக்க முடியவில்லை. அவர்கள் எவ்விதம் இது வெளிப்பட்டது என்று அறி-வதை விட, அவற்றின் வெளிப்பாடுகளை மாத்திரமே ஆச்சரியமாகப் பார்த்ததால் அவ்வறிவியல் உற்பத்தியின் மையத்தினை ஆராய முற்படவில்லை. இன்னமும் ஐஊக் களின் ஆரம்பத்திற்கான சரியான விளக்கம் ஒருவரிடமும் இல்லை என்றுதான் கூறுகின் றார்கள். இந்த அறிவியல் அற்புதம் தற்செய லாக நடந்த ஒன்றாக இருக்க முடியாது என்பது ஏலியன் ஆய்வாளர்களின் உறுதி யான கருத்தாகும். IC நுட்பத்தை இப்போது ஒவ்வொரு திறமைசாலியும் தன்தன் துறை யிற்குப் பாவிப்பது அவரவர் சொந்த அறிவி யல் விற்பன்னமே தவிர அங்கு ஏலியன் களின் செல்வாக்கு இல்லை என்பதை நாங்கள் நினைவிற் கொள்ள வேண்டும்.

அம்புலிப் பயணத் திட்டத்தில் இருந்தவர் களுக்குக் கூட ஏலியன் விடயங்கள் தெரியாது. அவரவர் தத்தமது பங்களிப் பினை மட்டும் செய்து கொண்டிருந்தார்கள். அம்புலியில் முதன்முதலிற் காலடி வைத்த நீல் ஆம்ஸ்ரோங் கூடத் தன் பணியினைத் தான் செய்து முடித்திருந்தார். அதனால் தான் அவர் ஏலியன்கள் பற்றிய ஆச்சரிய மான விடயங்களைப் பின்னர் கூறியிருந்தார். (அவை பற்றியும் அவசியம் நாங்கள் பின்னர் பாரப்போம்.) அம்புலிப் பயணத்திற் கான வேற்றுக்கிரக வாசிகளின் உதவியின் பக்க விளைவாகவே நாம் காணுகின்ற அனுபவிக்கின்ற அறிவியற் தொழில் நுட்ப வளர்ச்சிகள் யாவும் என்றால் மிகையாகாது. றோஸ்வெல் விவகாரத்தின் ஐமிச்சங்கள் இன்னமும் இருக்கின்றன.

சில ஆய்வாளர்களின் கருத்துப்படி, இன்னமும் றொஸ்வெல்லில் அகப்பட்டுக் கொண்ட ஏலியன்கள் புவியிலேயேதான் இருக்கின்றார்கள். அவர்கள் ஏரியா 51இல் இப்போது இல்லை. வேறொரு பாதுகாப்பான இரகசிய இடத்தில் வசதிகளுடன் வைக்கப்பட்டிருக்கிறார்களாம். அவர்களது விமானம் கூட, எங்கேயோ பாதுகாப்பாக மறைத்து வைக்கப்பட்டுள்ளது. இறந்து போன ஏலியன்களின் உடல்கள் பனியால் மூடப்பட்டு பாதுகாப்பாக உள்ளது. இப்படியான கதைகள் இன்னமும் உள்ளன.

ஏலியன்கள் எங்களுக்குக் கொடுத்த அறிவி யல் விபரங்கள் எல்லாம் ஏலியன்களைப் பொறுத்தவரையில் ஆரம்ப நிலைதானாம். அவர்களின் முழுமையான அறிவினைப் பெறாதது, அவர்களின் முழுமையான அறிவினைப் பெறக் கூடியதான நிலைக்கு இன்னமும் எமது அறிவியல் நிலை உயர வில்லை என்பதும் ஒரு காரணமாம். அதனால்தான் அம்புலிப் பயணங்கள் இடையில் தடைப்பட்டது போல நின்று போனது என்றும் காரணம் கூறுகின்றார்கள்.

ஐரோப்பியர்கள், அவுஸ்திரேலியர்கள் மற்றும் இந்தியர், சீனர்களின் விண்வெளிப் பறப்புகளில் ஏலியன்களின் தொடர்போ அல்லது பங்களிப்போ இல்லை. இந்நாட் களின் அறிவியல் நிலைகளில் இருந்தே அவர்கள் அச்சாதனைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதேபோல அமெரிக் கர்களின் இந்நாட்களின் விண்பயணங்களில் அவர்களின் சொந்தச் செயற்பாடுகள் மட்டுமே உள்ளன என்று நம்ப வேண்டி யுள்ளது. உங்களையும் என்னையும் உட்படுத்திய மனித மூளை வலுவைக் குறைவாக மதிப்பிடக் கூடாது. நாங்களும் சிறப்பு விலங்குகள் தான், உயிரியல் கூறுகின்றது.

இதுவரையில் எப்படி அம்புலிப் பயணம் எங்களுக்கு வெற்றியளித்திருக்கக் கூடும் என்ற புதினத்தை ஒரு புறம் நின்று பார்த்தோம். அடுத்த தடவையில் இருந்து எங்களது பயணம் விட்ட இடத்தில் இருந்து தொடரும்.

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



# ஒன்றிணைந்து உரிமைகளை வென்றெடுப்போம்

தமிழீழத் தாயகத்து உறவுகளே தலைவர்களே
யாகத்துத் தீயினிலே வெந்தழிந்த தியாகிகளின்
கனவுகளை நெஞ்சத்திற் சுமந்து கொண்டு உறுதியுடன்
தேர்தலுக்கு முகங்கொடுப்பீர் இழக்கும் மண்ணை மீட்டெடுப்பீர்

தேர்தற்காலம் இறையருளின் அருள் வழங்கும் பொற்காலம்
தேர்ந்தெடுக்கும் தலைவர்களின் கொள்கைகளை, செயற்றிறனை
கூர்மையுடன், மதியூக, சிந்தையுடன் காய்நகர்த்தும்
நேர்மையுள்ள தலைவர்களைத் தேர்ந்தெடுத்து இனம்காப்பீர்

இருபத்தியைந்தாண்டு தமிழினத்தின் காவலனாய்
இறுங்காத நெஞ்சுடனே சிங்களத்துத் தலைவருடன்
அகிம்சைவழிப் போராடித் தோற்றாலும் அவ்வழியே நாம் சென்று
கூட்டாட்சிக் கொள்கையினை முன்னெடுத்து மண் மீட்போம்

இழந்த மண்ணை மீட்க வேண்டும், இராணுவத்தை அகற்ற வேண்டும்
பழிசுமக்கும் பாவியர்போல் கதறியழும் மக்கள் கண்ணீர்த்
துளியகற்றி நல்வாழ்வு நாமளித்துத் தேற்ற வேண்டும்
துடிப்புடைய இளைஞர்களே உத்தமரைத் தேர்ந்தெடுங்கள்

நீண்டகாலம் சிறைகளிலே, வாடுகின்ற இளைஞர்களை
மாண்டழியும் முன்னதாக மீட்டெடுக்கும் துணிச்சலுடன்
அநீதிக்கு எதிராகப் போராடும் வீரமிகு
தலைவர்களைத் தேர்ந்தெடுக்கத் தவறாதீர் உறவுகளே

அத்துமீறி நிலம் பறித்து இருப்பிடங்கள் தகர்தெறிந்து
புத்தர்சிலை யெழுப்பிவைத்துப் புதியபல விகாரைகளை
எத்திசையும் அமைக்கின்ற சண்டாளர் செயல்களினை
எத்தனை நாள் பொறுத்திருப்பீர் ஒன்றிணைந்து திரண்டெழுவீர்

சிங்களத்துத் தேசமின்று பிளவுபட்டு நிற்கையிலே
தமிழர்பலம் வெண்ணெய் போல் ஒன்றாகத் திரண்டெழவே
பொங்கியெழும் சக்தியுடன் பேரம் பேசி உரிமை கோரும்
நெஞ்சுரத்தின் தலைவர் கட்டுகு வாக்களிப்பீர் உறவுகளே!

அறுபதாண்டு காலமாக ஆட்சியாளர் எமக்கிழைத்த
அழிவுகளுக் கடித்தளமே ஒற்றையாட்சி என்றறிவீர்
கூட்டாட்சிக் கொள்கையினை உறுதியுடன் முன்னெடுத்து
தமிழர் தேசம் காக்கின்ற தலைவர்களை இனம் காண்பீர்

மகிந்தாவின் பிரவேசம் தமிழர்க்கோர் எச்சரிக்கை
மைத்திரியின் வெற்றியின்று தமிழர்களின் கரங்களிலே
தந்தைசெல்வா வேண்டிநிற்கும் ஆண்டவனே அருளி நிற்கும்
இக்காலம் பொற்காலம் அவன் அருளால் மீட்படைவோம்

புலம்பெயர்ந்த பாசமுள்ள உறவுகளே ஒன்றிணைவீர்
தாயகத்து உறவுகளைக் கையெடுத்துத் தாங்குங்கள்
கட்சிபேதம் பாராது பொறுப்புணர்ந்து செயற்படுவோம்
கடவுள் எமக்கருள் புரிவார் கலங்குவாரை மீட்டெடுப்போம் - 'மாரீசன்'







**MOHAN HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC**

mhc

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

**WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:**

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

**HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING**

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

*Also other Acute & Chronic Problems*
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537/416-291-3022**

*5200 Finch Ave, East Suite 210*
*At Middle Field, Scarborough, M1S 4Z4*



**யோகா சோதிடம்**

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# உலகமயமாதலும் சினிமாவும்

முன்னாள் கனடிய பிரதமர் கிம் ஹம்பல் "அமெரிக்காவின் பிம்பங்கள் உலகெங்கும் ஊடு பரவியுள்ளன. உலகம் அமெரிக்காவினுள் செல்வதற்கு மாறாக அமெரிக்கா உலகெங்கும் தனது பிம்பங்களை பரவசெய்து விட்டது. உலக மக்கள் அனைவரும் அமெரிக்கராக வேண்டும் என்ற அவாவை ஏற்படுத்தி விட்டது" என்று 1998ல் குறிப்பிட்டுள்ளார். கனடாவைப் பொறுத்தவரை 96 வீதமான திரைப்படங்கள் ஹொலிவூட் படங்களே திரையிடப்படுகின்றன. கனடிய வானொலிகளில் ஒலிக்கும் 75 வீதமான இசை அமெரிக்க இசை. 80 வீதமான சஞ்சிகைகள் அமெரிக்க சஞ்சிகைள். 60 வீதமான நூல்கள் அமெரிக்க வெளியீடுகள். ஒரு தடவை அமெரிக்க சஞ்சிகைகளில் வெளிவரும் கனடிய விளம்பரங்களுக்கு அதிக வரி விதிக்கப்பட்ட போது அமெரிக்க உலக வணிக மையத்திடம் சென்று முறையிட்டு வரியை நீக்கியது. அதேசமயம் அமெரிக்காவிற்கு ஏற்றுமதியாகும் கேளிக்கை பொருட்கள் எதிர் மறையான விளைவுகளை பெறுகின்றன.

அமெரிக்கா கலாச்சார மேலாதிக்கம், கலாச்சார ஏகாதிபத்தியம், கலாச்சார காலனித்துவத்தைக் கொண்டு இயங்குகின்றது. அமெரிக்கா இன்று மேற்குறிப்பிட்ட மூன்றையும் உலக நாடுகளின் மேல் ஏற்படுத்தியுள்ளது. இதனை அமெரிக்காவிற்கு இணையாக மேற்கத்திய நாடுகளும் செய்கின்றன. குறிப்பாக கனடாவைப் பொறுத்தவரை கனடாவின் சந்தை மிகச் சிறியது. உலகின் இரண்டாவது பெரிய நாடு. ஆனால் சனத்தொகையில் மிக மிகக் குறைவு. கனடா பெருமளவு தயாரிக்கும் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளை ஏற்றுமதி செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றது. இதேபோன்று ஐரோப்பிய நாடுகளும் உலக சந்தையை நாடுகின்றன. ஆனால் அமெரிக்கா கனடா, ஐரோப்பா போன்ற நாடுகளிலும் தனது கேளிக்கை பொருட்களை தள்ளுகின்றது.

உலகமயமாதல் மற்றும் அமெரிக்கமயமாதல் மூன்று விடயங்களை முன்நிறுத்துகின்றன. முதலாவது பொருளாதாரம் மற்றும் வேலைவாய்ப்பு. உள்நாட்டு பொருளாதாரத்தை உலகமயமாதல் பலவீனப்படுத்துகின்றது. இரண்டாவது உள்ளூர் கலாச்சாரத்தை இவை மாற்றீடு செய்து விடும். மூன்றாவது அப்பிரதேசங்களை மாசடையச் செய்வதுடன், ஒரு ஸ்திரமற்ற தன்மையையும் ஏற்படுத்திவிடுகின்றது. இவற்றுடன் ஆங்கில மொழியை பிரதேச மொழிக்கு மாற்றாக்கிவிடுகின்றது. உதாரணத்திற்கு ஆங்கிலத்தை பிரதான மொழியாகக் கொண்டவர்கள் 380 மில்லியன் (36 கோடி) மக்கள். ஆனால் ஆங்கில மொழியைப் பயன்படுத்துபவர்கள் 160 கோடி மக்கள். இணையத்தளங்களும் சமூக வலைத் தளங்களும் அதிகளவு ஆங்கிலத்தையே பயன்படுத்துகின்றார்கள். அண்மைக் கால கணிப்புக்கள் 90 வீதத்துக்குமேல் இணையம், சமூகவலைத் தளங்களில் ஆங்கிலம் பயன்படுத்தப்படுகின்றது எனச் சுட்டிக்காட்டுகின்றன.

2. ஜேம்ஸ் பொன்ட் படங்கள் கலாச்சார மற்றும் அரசியல் மேலாதிக்கத்தை வெளிப்படுத்தின. பொதுவாக இப்படங்கள் அமெரிக்காவை ஒரு நேர்மையான நாடாக சித்தரித்தன. அமெரிக்காவின் நிலையை பல்வேறு மட்டங்களிலும் உயர்வானதாக சித்தரித்தன. இப்படங்கள் உள்ளடக்கியுள்ள மூன்று பிரதான பரிமாணங்கள் கருப்பொருள், ஒத்துழைப்பாளர்கள், வில்லன்கள். இப்படங்களின் கருப்பொருட்களின் முக்கியம் அமெரிக்காவிற்கு அச்சுறுத்தலாகவிருக்கும். இவை சில உதாரணங்கள்

***Movie***

| | |
|---|---|
| Dr. No | Obstructing U.S missile orbit |
| Goldfinger | Blowing up U.S Federal Reserve Bank |
| You Only Live Twice | Hijacking U.S rocket |
| Diamonds are forever | Ruling over space development corporation of U.S |
| Live and Let Die | Monopolizing North American drug market |
| The spy who Loved me | Hijacking U.S nuclear submarine, launching U.S. nuclearwarhead aimed at New York |
| Moonraker | Hijacking 'moonraker' made by U.S government |
| Octopussy | Destroying U.S air force base in Germany |
| A view to a Kill | Causing flood in Silicon Valley |
| Tomorrow NeverDies | Promoting tension between UK and China using U.Sdecode |

007 படங்களில் ஒத்துழைப்பாளர்களாக அமெரிக்க அரசு பாதுகாப்பு அல்லது உளவு அதிகாரிகள் செயல்படுவார்கள். 007 நாயகனுடன் இணைந்து இவர்கள் தான் எதிரியை அழிப்பார்கள். அமெரிக்காவின் எதிரி உலக எதிரியாகவும் வெளிப்படுத்தப்படுவார். உலகத்தையும் இணைத்தே அமெரிக்காவும் 007வும் எதிரியை அழித்தார்கள் என வெளிப்படுத்தப்படும்

3. வட அமெரிக்காவின் முதன் மக்களை செவ்விந்தியர் என்பார்கள். இதுவே ஒரு இனவாதம். அவர்கள் இந்தியர்கள் இல்லை என்று தெரிந்தும் அவர்களை இந்தியர்கள் என்று அழைப்பதனை நிறுத்தவில்லை. ஸ்பானியர் உலகை ஆள கப்பலோட்டிய ஸ்பானியராக மாறி அமெரிக்க முதன் மக்களையே இனப்படுகொலை செய்து விட்டார்கள். இவர் களை எப்படி தங்களது படங்களில் சித்தரித்து இருப்பார்கள் என்பதற்கு இவ் அட்டவணை ஒரு சிறு உதாரணம்

| | முதன்மை குடிகள் | ஐரோப்பியர் |
|---|---|---|
| 1 | மூர்க்கத்தனமானவர்கள்-மிருக்கத்தனமானவர்கள் | நாகரிகமானவர்கள் |
| 2 | சுதந்திரமான சமூகம் | கட்டுப்பாடுடைய சமூகம் |
| 3 | இயற்கையுடன் ஒன்றியவர்கள் | கலாச்சாரம்-பண்பாடுடையவர்கள் |
| 4 | பழமைவாதிகள் | மாற்றங்களை ஏற்றுக் கொள்பவர்கள் |

4. சீனாவில் ரைரானிக் பெரும் வெற்றியைப் பெற்றது. இதன் பின் டிஸ்னியின் முலன் படத்தின் திரையீட்டை சீன அரசு பின்தள்ளியது. டீஸ்னியின் குன்டன் படம் தாய்லாமாவிற்கு ஆதரவாக் கருத்து தெரிவித்தமையினால் தடைவிதித்தது. சீனா முதலில் ஒரு வருடத்திற்கு பத்து வெளிநாட்டு படங்களே இறக்குமதி செய்யப்படலாம் எனக் கட்டுப்பாடுகளை சட்டமாக்கியது. இப்பொழுது இதில் தளர்வுண்டு.

தென் கொரியாவில் திரை அரங்குகளில் 146 நாட்கள் கொரிய மொழிப்படங்கள் திரையிடப்படவேண்டும் என்ற நடைமுறை உண்டு. அவுஸ்திரேலியா மாலை 6 மணியிலிருந்து இரவு 12 மணிவரை ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளில் 55 வீதமானவை அவுஸ்திரேலியாவில் தயாரிக்கப்பட்டவையாக இருக்க வேண்டும். சீனாவில் இது 75 வீதமாக இருந்தது. ஐரோப்பிய நாடுகள் தங்களது சுய மொழிக்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுத்திருந்தன. காலப்போக்கில் உலகமயமாதல் இதனில் சரிவைக் கொண்டு வந்தது. உதாரணத்துக்கு மெக்சிக்கோவில் 1993இல் இறக்குமதி செய்யப்படும் படங்கள் 30 வீதமாகத்தான் இருக்க வேண்டும் என்ற சட்டமிருந்தது. 1997 இல் இது பத்து வீதமாக குறைக்கப்பட்டுவிட்டது. இதற்கான காரணம் உலகமயமாதலில் இன்று ஐரோப்பா, கனடா போன்ற நாடுகளும் பிரதான பங்குவகிக்கின்றன. சீனா



**- ரதன் -**

வெகுவேகமாக முன்னேற்றமடைந்துள்ளது. Crouching Tiger, Hidden Dragon என்ற மன்டரின் சீன மொழிப்படம் 2000 ஆம் ஆண்டு 17 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு தயாரிக்கப்பட்டு 213.5 மில்லியன் டொலர்களை வருமானமாகப் பெற்றுள்ளது. பொலிவூட் படங்கள் இன்று சர்வதேச அரங்கில் அதிக வருமானத்தைப் பெறுகின்றன.

ஹொலிவூட் மற்றும் சீனா, ஐரோப்பா போன்றன தங்களது படங்களில் ஹொலிவூட் தன்மை இருக்கச் செய்கின்றன. தயாரிப்பு முறைகள், உடையலங்காரம் போன்ற பல விடயங்களில் ஹொலிவூட் சாயலைக் காணலாம். இந்நாட்டுப் படங்கள் ஒரு வகையில் அமெரிக்காவையும், ஹொலிவூட்டையும் நினைவு படுத்துகின்றன. அதேசமயம் ஹொலிவூட்டும் பல உலக திறமைசாலிகளை உள்வாங்கியுள்ளது. ரைரானிக் டேவிட் கமரோன் ஒரு கனடியர், Arnold Schwarzenegger ஒரு ஒஸ்ரியர், நிக்கோல் கிட்மன் அவுஸ்திரேலியர். இவை சில உதாரணங்கள். மீரா நாயர் போன்றோர் இந்திய கதையம்சங்களைக் கொண்ட படங்களை அமெரிக்காவிலேயே தயாரிக்கின்றனர். அமெரிக்காவில் உள்ள பல தயாரிப்பு நிறுவனங்கள் வேறு நாட்டு நிறுவனங்களுக்குச் சொந்தமானவை. பல ஹொலிவூட் படங்கள் வேற்று மொழிப்படங்களின் தழுவல்களாகவுள்ளன. 2006இல் ஒஸ்காரின் சிறந்த படமாக தெரிவு செய்யப்பட்ட The Departed படம் சீன Mou gaan dou அல்லது இனரேனல் அபயாஸ் என்ற படத்தின் தழுவலாக இருந்தது. த ரூரிஸ்ட் படம் பிரெஞ்ச் படமான அன்ந்தனி சிம்மர் படத்தின் தழுவல். இதன் மூலம் இரண்டு விடயங்களை ஹொலிவூட் நிரூபித்துள்ளது. ஒன்று அமெரிக்காவின் நீதி, தர்மம் என்பன உள்வாங்கப்பட்டுள்ளன. இரண்டாவது ஹொலிவூட் உலக மக்களை இது உங்களுக்கான படமென நம்பவைத்துள்ளது. உலக சினிமா என்ற விடயம் வணிக சினிமாவில் ஹொலிவூட் சினிமாவாகத்தான் உள்ளது.

ஒரு விடயத்தை இங்கு குறிப்பிடவேண்டும், கனடாவும், அமெரிக்காவும் ஒத்த கலாச்சாரத்தையுடைய நாடுகள். கனடிய படங்கள் தனித்தன்மையுடன் உள்ளன. அதேபோல் பலத்த முஸ்லீம் எதிர்ப்பையும் மீறி ஈரானிலிருந்து உலக தரமான சினிமா தொடர்ந்து வெளிவருகின்றது.

தொடரும்...

ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL

• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca

# REFINANCE TO LOWER RATES & SAVE 75%

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | 320,000@2.9% | 1,498.02 | - |
| Car Loan | 21,000@7.5% | 764.25 | 0.00 |
| Line Of Credit | 16,000 @6.5% | 566.67 | 0.00 |
| Line Of Credit2 | 12,500 @7% | 447.92 | 0.00 |
| Credit Card 1 | 8,800 @12% | 352.00 | 0.00 |
| Credit Card 2 | 5,200 @19% | 238.34 | 0.00 |
| Store Card | 3,000 @24% | 150.00 | 0.00 |
| | | | |
| New Mortgage Payment | 386,500@2.5% | | 1,524.55 |
| Total Dept | | 386,500.00 | 386,500.00 |
| Total Payment | | **4,014.20** | **1,524.55** |

## MONTHLY SAVING

## $2,489.65

VERICO MORTGAGE BROKERS NETWORK

APPLY ONLINE kiruba.ca OR Call Me

ULTIMATE MORTGAGE & FINANCIAL SOLUTIONS
LIC#: 11995
305-5200 Finch Ave East
Scarborough, ON. M1S 4Z5

KIRUBA THANABALASINGHAM
Mortgage Agent
LIC#: M12002440

416.298.2777
info@kiruba.ca



Ajax | Markham | Scarborough

நடன வகுப்புகள் ஆரம்பம்

**Bharathanatyam**
**Bollywood**
**Gaana**

## irudaya DANCE COMPANY

ஆசிரியர்கள்:- "நாட்டியகலாமணிகள்"

**நிவேதா மூத்ததம்பி**
**கீர்த்தனா அருளானந்தராஜா**

- அரங்கேற்றம் முடித்த மாணவிகள் (ஆசிரியர்: - வாசுகி சின்னராசா)
- அண்ணாமலைப் பல்கலைகழகப் பட்டதாரிகள் (Canada Campus)
- நடன அமைப்பாளர்கள் (8 வருட அனுபவம்)
- மேடை நிகழ்வுகளில் பல வருடங்களாக சிறந்த அனுபவம்



மேலதிக தொடர்புகளுக்கு:
(647)967-1994 (416)319-0164

## ASVITHA CAKES & BRIDAL

அனைத்து வைபவங்களுக்குமான எல்லா வகையான Cake மற்றும் மணமகள் அலங்காரங்களும் செய்து தரப்படும்

- RICH CAKE
- WEDDING CAKE
- EGG LESS CAKE



**Contact: 416-986-9001 / 289-660-1972**
**pathma.kandasamy@gmail.com**


இப்பொழுது கிடைக்கிறது
கோடை கால தாகத்துக்கோர் இளநீர்..!
Niru BRAND®
Natural Ingredients!
Coconut Water
Made with
Real pieces of Coconut
COCONUT WATER
JUS DE COCO
MADE WITH REAL PIECES OF COCONUT
PLEASE CHILL BEFORE SERVING
40 Minuk Acres, Scarborough ON M1E 4Y6
Tel: 416 750 1976 | Fax: 416 750 8779 | info@niru.com | www.niru.com
AVAILABLE AT YOUR LOCAL COMMUNITY GROCERY STORE.


JRS AUTO TECH
OPEN 24 HOURS
7 DAYS A WEEK
MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS
VISA
Free Inspection & Diagnostics
Complete Car & Truck Care
Licensed Mechanics
Insurance Work Done
All Fluid Top Ups & A/C Repairs
Fuel Injection Service & Muffler/ Turbos
Courtesy Drop Off & Pick Up Available
Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash
SENIOR'S SPECIAL
Free Shuttle Available for Seniors
TIRE SPECIALS
NEW TIRES FROM $75
USED TIRES FROM $35
FREE OIL CHANGE WITH RUST PROOFING
$99 Car
$120 SUV
BRAKE JOB
STARTING FROM $159
WATER PUMP TIMING BELT & LABOR
STARTING FROM
$450 Most Cars
$550 Most Vans
Castrol
REGULAR OIL CHANGE $29.95
CASTROL OIL CHANGE $39.95
SYNTHETIC OIL CHANGE $49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR $149.95
TRANSMISSION FLUSH
Starting From...
Imports $74.95
Radiator Flush $79.95
Domestic $149.95
ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS
CHECK
LEXUS
FREE DTC Code Run and Inspection
2655 Lawrence Ave. East, Unit 5
(Midland & Lawrence, rear of the building)
CALL SUBAS DIRECT → 416-206-9489
Tel: 416-628-4399
Email: jrsautotech@hotmail.ca
Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech
*Prices subject to change. Valid with flyer. Cannot be combined with any other offers.

# இயற்கை எழில் கொஞ்சும் தண்ணீர் தேசம்!

முற்றிலும் சுற்றுலாவை நம்பி உள்ள நாடு தாய்லாந்து. தாய்லாந்து என்றாலே, நம் நினைவிற்கு பாங்கொக், பட்டயா (Pattaya), புக்கெட் (Phuket) போன்ற இடங்களும், கூடவே 'மசாஜ்' நிலையங்கள், மற்றும் இரவு நேர விடுதிகள் ஆகியனவும் வரும். இந்த மூன்று நகரங்களுக்குத் தான், அதிக அளவில் இந்தியர்கள் செல்கின்றனர். ஆனால், ஐரோப்பியர்கள் மற்றும் சிங்கப்பூர், மலேசியா, சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்த வர்கள், தாய்லாந்தில் அதிகம் தேர்வு செய்வது, கிராபி என்ற பகுதியை தான்.

கிராபி என்பது ஒரு மாகாணம். தாய்லாந்தின் தென் கோடியில், அந்தமான் கடலோரம் இருக்கிறது. கிராபி தான் தலைநகர். பாங்கொக்கில் இருந்து, 800 கி.மீ. தூரத்தில் உள்ளது. புக்கெட்டில் இருந்தும், சாலை வழியாக இரண்டு மணி நேரப் பயணத்தில் கிராபியை அடையலாம்.

கிராபி மற்றும் அதன் அருகில் அந்தமான் கடலில் உள்ள குட்டித் தீவுகள் என குறைந்தது மூன்று நாட்கள் சுற்றுலா சென்று கண்டுகளிக்க ஏராளமான இடங்கள் இங்குள்ளன. இங்கு, 'நிறைந்த தண்ணீரோடு' பாய்கிறது கிராபி என்ற நதி. ஆற்றை அழகாக வைத்திருப்பது எப்படி என்று இவர்களைப் பார்த்துத் தான் தெரிந்து கொள்ள வேண்டும். அத்தனை தெளிவான தண்ணீர். ஆற்றின் மறு கரையில் சதுப்பு நிலக் காடுகள். 'நீண்ட வால் படகில்' அரை மணி நேரம் பயணம் செய்தால், ஒரு சிறு காடு வரும். அதனுள் ஓர் உயர்ந்த சுண்ணாம்புப் பாறை. அதில் ஏறிச் செல்ல, படிகள் உண்டு. பாறைக் குகைக்குள் சென்றால், கற்கால மனிதர்கள் வாழ்ந்த இடங்கள் என்று, சில பகுதிகளை அடையாளப்படுத்தி வைத்துள்ளனர்.

கிட்டத்தட்ட 40 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய மனித எலும்புக்கூடு இங்கு கண்டெடுக்கப்பட்டதாக, கல்வெட்டு வைத்திருக்கின்றனர். கற்கால மனிதர்களை போன்ற சிற்பங்கள் நம்மை மிரட்டுகின்றன. மேலே பார்த்தால், நம்மைக் குத்துவது போல நிற்கிற சுண்ணாம்புப் பாறைகளின் கீற்றுகள் தெரிகின்றன. ஆற்றில் உள்ள மிதக்கும் 'ஹொட்டல்களில்' அங்கேயே பிடித்த பெரிய மீன்களை, நண்டுகளை சுடச்சுட பொரித்துத் தருகின்றனர். ஒரு மீனை ஐந்து பேர் சாப்பிடலாம். அவ்வளவு பெரியது. ஆற்றைக் கடந்து சென்றால், ஐயாயிரம் மக்கள் வாழும் குட்டித் தீவு. வயல் வெளியும், தென்னை தோப்பு களுமாய் கேரளாவை ஞாபகப்படுத்துகிறது. தாய்லாந்தின் கைவினைப் பொருட்களை, மீன், இறால் ஊறுகாயை இங்கு வாங்கலாம். கிராபியில் உள்ள புத்தர் கோவில், புலிக்குகை போன்றவை பார்க்க வேண்டிய இடங்கள்.

குட்டித் தீவுகளில் படகு யாத்திரை: கிராபி யில் இருந்து 17 கி.மீ. தொலைவில் உள்ள நொப்பரடாரா என்ற படகுத் துறைக்கு, வீதி வழியாக சென்று, அங்கிருந்து படகில் குட்டித் தீவுகளுக்குச் செல்லலாம். இந்த ஊருக்கு அருகிலேயே, ஆ நாங்க் என்ற கடற்கரை நகரம் உள்ளது. இங்கு 'தாய் மசாஜ்' பிரபலம்.



இந்தத் தீவுகள் கொஞ்சம் கடல், கொஞ்சம் மணல் என இயற்கை கொஞ்சும் 'தண்ணீர் தேசம்' எனலாம். இயற்கையானது அற்புதங்களை அள்ளித் தெளித்திருக்கும், கண்ணிற்கு இதம் அளிக்கும் கோ சமுய், கோ பன்கன், கோ பி பி, கோ லண்டா, கோ லைபி, போடா என குட்டி, குட்டித் தீவுகள் தான் சுற்றுலா பயணிகளின் சொர்க்க பூமி. உலக வரைபடத்தில் காண முடியாத, தாய்லாந்து வரைபடத்தின், 'சிறு புள்ளிகள்' இவை. அலைகள் ஆர்ப்பரிக்காத, அமைதி யான, தெளிவான நீலக்கடல்... இங்கு நீரில் குளித்து, களித்து, கவலைகளை மறந்து, வெள்ளை மணற்பரப்பில், 'அவர்களது ஆடையில்' ஓய்வெடுக்கின்றனர் ஐரோப்பியர்கள்.

நொப்பரடாராவில் இருந்து, கோ லண்டா விற்கு மூன்று மணிநேர படகு பயணம். மதியம் 12:00 மணிக்கு படகின் மேற்பகுதியில் வந்து நின்றாலும், வெயில் சுடவில்லை. நடுக்கடலும் ஏரி மாதிரி அமைதியாய் இருக்கிறது. அந்தமான் கடலின், 'அமைதியே' அழகு. கடலுக்கு இடையே, ஆங்காங்கே வழிமறிக்கின்றன, வானுயர்ந்து நிற்கும் பசுமை போர்த்திய சுண்ணாம்புப் பாறைகள். எல்லாத் தீவுகளும் சராசரியாக, 6 கி.மீ. நீளம், 20 கி.மீ. அகலம் என்ற அளவில் தான் இருக்கின்றன. இடையிடையே நாம் ஓய்வெடுக்க, கடல் நடுவே மணற்பரப்புகள். அதில் இறங்கி நின்றால் நடுக்கடலில் நிற்கும் பிரமிப்பு. அந்தப் பகுதியில் ஆழம் குறைவாக இருப்பதால் குளிக்கலாம். அபூர்வ கடல் மீன்களைக் கண்குளிர கண்டு ரசிக்கலாம்.

மனிதத் தலைகள் தெரியாத, மண்ணும், மரமும், கடலும் சூழ்ந்த சுற்றுச்சூழல் மாசுபடாத, நீண்ட கடற்கரையை உடைய தீவு இது. படகில் சென்று இறங்கியதும், நபர் ஒன்றுக்கு, 10 பாத் வசூலிக்கின்றனர். தீவைத் தூய்மையாகப் பாதுகாக்க இந்த நுழைவு வரியை வாங்குகின்றனர். கட்டணம் வாங்குவதற்கு ஏற்ப தூய்மையை காக்கின்றனர். கூடவே இலவசமாக தீவு குறித்த 'பாக்கெட் வழிகாட்டி' தருகின்றனர்.

வனத்திற்குள் சுற்றுலா (ஜங்கிள் சபாரி) சென்று அரிய பறவைகள், விலங்கினங் களைப் பார்க்கலாம். தேசிய பூங்கா, நீர்வீழ்ச்சி உள்ளன. சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கு ஏற்ற இடங்கள் இவை. 'சர்பிங்' (surfing) போன்ற தண்ணீர் விளையாட்டுகள் இங்கு பிரபலம். தனிமையை விரும்பும், தேனிலவுத் தம்பதி யர் தேடி வரவேண்டிய தீவு இது. வரலாற்று ஆய்வாளர்களை ஈர்க்க சீன - தாய்லாந்து பண்பாடு இணைந்த, பழமையான, 'மாதிரி கிராமம்' ஒன்றை பண்பாடு மாறாமல் அப்படியே வைத்துள்ளனர். இங்கிருந்து இரண்டு மணி நேரப் படகுப் பயணத்தில், ரெய்லே கடற்கரைக்குச் செல்லலாம். இங்கு, 'சூரியக் குளியல்' பிரபலம். தாய்லாந்திற்கு எத்தனை சுற்றுலாப்பயணிகள் வந்தாலும் கடற்கரை, தெருக்கள் எல்லாம் தூய்மை யாக சுற்றுச்சூழல் மாசு இல்லாமல் இருக்கின்றன. மாதம் ஒரு முறை 'வீட்டிற்கு ஒருவர்' எனத் தெருவிற்கு வந்து ஓரிடத்தில் கூடி, 'மாஸ் கிளீனிங்' செய்கின்றனர். இதில் நகர மேயர், மாகாண கவர்னர் என விதி விலக்கு இல்லாமல் பங்கேற்பது தான் சிறப்பம்சம். என்னதான் 'இயற்கையின் கொடை' இருந்தாலும் கடல்சார்ந்த சுற்றுலாவில் தாய்லாந்து சாதிக்கும் ரகசியம் இதுதான் போலும்.

நீங்களும் இனி தாய்லாந்து சுற்றுலாவிற்கு திட்டமிட்டால் வழக்கமான இடங்களை தவிர்த்து கிராபி சென்று அருகில் உள்ள குட்டி தீவுகளிற்கு சென்று வாருங்கள்.

***

எப்படி செல்வது: பாங்கொக்கில் இருந்து கிராபிக்கு, இணைக்கும் விமானம் (connecting flight) உள்ளது. கிராபியில் இருந்து தீவுகளுக்கு படகில் செல்ல ஏர் ஏசியா ஏற்பாடு செய்கிறது. விமானத்திற்கு புக்கிங் செய்யும் போதே படகில் செல்லவும் முன்பதிவு வசதி உண்டு.

உணவு: ரீ, கோப்பி, ஐஸ் ரீ, பிரட், ஓம்லெட், அரிசி சோறு கிடைக்கும். மீன், இறால், நண்டு, சிப்பி வகைகள் பிரபலம். வெஜிட்டேரியன், 'தாய் உணவுகள்' சூப்பர் சுவை.






# தமிழகத் தலைவர்கள் தங்கள் உடல் சுகவீனத்தை ஏன் மறைக்கிறார்கள்? - தமிழ்நாடு அரசியல்

சமீபத்தில் தமிழகம் வருகை தந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை விமான நிலையம் சென்று வரவேற்ற தமிழக முதல்வர் ஜெயலலிதா, அதன்பின்னர் மோடி கலந்துகொண்ட கூட்டத்தில் பங்கேற்க வில்லை. அதற்கு முந்தைய வாரம், ராமேஷ்வரத்தில் நடைபெற்ற முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் இறுதிச் சடங்கிலும் தமிழக முதல்வர் கலந்து கொள்ளவில்லை. இவை, ஜெயலலிதா உடல்நலம் பற்றித் தொடர்ந்து வந்த பல்வேறு விதமான தகவல்கள் மற்றும் ஊகங்களை உறுதிப்படுத்தும் விதமாகவே இருக்கின்றன. ஆனாலும், இதுவரை அரசு தரப்பில் இருந்தோ முதல்வர் தரப்பில் இருந்தோ, ஜெயலலிதா உடல்நலம் பற்றி வரும் ஊகங்களை மறுத்து அதிகாரபூர்வ மான அறிக்கை எதுவும் வெளிவரவில்லை. இந்நிலையில், "முதலமைச்சர் என்பவர், ஒரு நாட்டுக்கு ரகசியமானவராக இருக்கக் கூடாது. பகிரங்கமாக, வெளிப்படையாக இருக்க வேண்டும்" என்று பேசினார் திமுக தலைவர் கருணாநிதி. இதற்குப் பதிலாக, "ஸ்டாலினின் உடல் நலம் குறித்தும், அவர் அடிக்கடி வெளிநாடு சென்று மருத்துவப் பரிசோதனை செய்து வருவது குறித்தும் கருணாநிதி அறிக்கை வெளியிடுவாரா'' எனக் கேள்வி எழுப்பியது அதிமுக தரப்பு. மு.க. ஸ்டாலின் பற்றி மட்டுமல்ல, தமிழக எதிர்க்கட்சித் தலைவர் விஜயகாந்த் உடல்நலம் பற்றியும் பல வருடங்களாக தமிழகப் பத்திரிகைகளில் 'கிசுகிசு' பாணி செய்திகள் வெளிவந்து கொண்டிருக் கின்றன. ஸ்டாலின், ஏன் தான் அடிக்கடி வெளிநாடு சென்று திரும்புகிறார் என்பது பற்றியும் இரண்டு முறை சிகிச்சைக்காகச் சிங்கப்பூர் சென்று திரும்பிய விஜயகாந்த், சிங்கப்பூரில் தான் மேற்கொண்ட சிகிச்சை என்ன என்பது பற்றியும் இதுவரை பேசிய தில்லை. இப்படி தமிழக அரசியல் தலைவர் தங்கள் உடல் சுகவீனம் குறித்த தகவல் களை மர்மமாக வைத்திருப்பது, இதற்கு முன்னாலும் இருந்தது. எம்.ஜி.ஆர்., கடைசி- வரை தன் உடல்நிலை பற்றிய தகவல் களை ரகசியமாகவே வைத்திருந்தார். அவர் சுயநினைவு இழந்த பிறகுதான் அவரது உடல்நலம் பற்றிய செய்திகள் வெளிவந்தன. அவர் அவ்வளவு தீவிரமான நிலைக்குப் போகுமுன் இருந்த, எந்தப் பாதிப்பையும் வெளிக்காட்டியதில்லை. ஏன் தமிழகத் தலைவர்கள் உடல் சுகவீனம் அடையும்போது அதுகுறித்த தகவல்களை மறைக்கிறார்கள்? சென்னையை மருத்துவத் தலைநகரம் எனச் சொல்லிப் பெருமைப் பட்டுக்கொண்டே ஏன் சிகிச்சைக்காக வெளிநாடு செல்கிறார்கள்? ஓர் அலசல். சொத்துக் குவிப்பு வழக்கில் ஜாமீன் பெற்றுப் பெங்களூருவில் இருந்து சென்னை திரும்பியது முதல், அந்த வழக்கிலிருந்து கர்நாடக உயர்நீதிமன்றம் விடுதலை செய்வது வரை, 7 மாதங்கள், வெளியே எங்கும் செல்லாமல் தனது போயஸ் கார்டன் இல்லத்திலேயே இருந்தார், ஜெயலலிதா. விடுதலைக்குப் பிறகு, மே மாதம் 19ஆம் தேதி தமிழக முதல்வராக பதவியேற்றுக் கொண்டார். இந்த நிகழ்ச்சி, தேசிய கீதத்தின் நீளம்கூடக் குறைக்கப் பட்டு சில நிமிடங்களிலேயே முடிந்தது.

இதனையடுத்து ஆர்.கே. நகர் சட்டசபைத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட்டார். வெளியூர் செல்ல முடியாது என்பதால்தான் சென்னைக்குள்ளேயே ஆர்.கே. நகர் தொகுதியை தேர்ந்தெடுத்தார் என்று சொல்லப்பட்டது. அத்தொகுதியிலும்கூட ஒருநாள் மட்டுமே பிரச்சாரம் செய்தார். ஆர்.கே. நகர் தேர்தலில் வெற்றிபெற்ற



**- சிவதாணு -**

நாம் இந்த உலகத்தில் எதையெல்லாம் செய்கிறோமோ அவற்றின் மத்தியில் இந்த ஆமைக்குட்டியைப் போல மிக அடிப்படையானதொன்றை மறந்துவிட்டோம் என நான் சிந்திக்கவேண்டி இருக்கிறது. மனிதனொருவன் ஏதோ ஒரு காரணத்திற்காக இன்னுமொரு மனி தனின் உயிரையே எடுக்கத் தயங்காத போது நாம் யார்? நாம் யார்? நான் யார் எனச் சிந்திக்கத் தோன்றுகிறது. திரு. றாவத் அவர்கள் "அதற்கு ஒரு பதில் உள்ளது, அந்தப் பதில் எமக்குள்ளே தான் உள்ளது." எனக் கூறுகிறார். "யதார்த்தம் ஒன்றுள்ளது. அது எம் ஒவ்வொருவரின் உள்ளேயும் உள்ளது. ஒளியொன்றுள்ளது, அந்த ஒளியானது உள்ளேதான் உள்ளது. அத்துடன் இருளும் உள்ளது. அந்த இருளும் உள்ளேதான் உள்ளது. "யுத்தம் ஒன்று நடந்தால் யுத்தத்தின் வெளிப்பாடும் எமக்குள்ளேதான் இருக்கிறது. அப்படியல்லவா? அங்கே இருக்கும் மக்களிடம்தான் அது இருக்கின்றதென்பதல்ல. எப்படியோ இந்த உலகில் நடைபெறும் விடயங்கள் எல்லாவற்றுடனும் நாம் எல்லோரும் தொடர்புபடுகிறோம். அதற்கான பொறுப்பை நாம் எல்லோரும் பகிர்ந்துகொள்ள வேண்டும். இதனால்தான் நாம் எல்லோரும் அமைதியின் ஆற்றலைப் புரிந்துகொள்ள ஆரம்பிப்பது மிக முக்கியம்."

திரு. றாவத் யுத்தம் முடிவடைந்தால் அமைதி ஏற்படும் என வரை விலக்கணப் படுத்தவில்லை. ஆனால் அமைதி என்பது ஒரு உணர்வு – சகலரின் உள்ளேயும் உள்ள அந்தத் தேடுதலுக்கான பதிலேயாகும். "இது ஒவ்வொரு மனிதனினதும் உள்ளத்தில் உள்ளது, அமைதிக்கான தேவை நடனமாடுகின்றது. அத்துடன் அமைதிக்கான தீர்வும் அங்கேயே உள்ளது." என அவர் கூறுகின்றார். அமைதிை-யக் கொண்டுவாருங்கள். போர்கள் முடிவடை யும். போர்கள் முடிவடைவதால் அமைதி வரப்போவதில்லை. அதை அவர் ஒரு கடித உறைக்கும், கடித்திற்கும் இடையே உள்ள தொடர்புடன் ஒப்பிடுகின்றார்.

இதில் அதி முக்கியமானது எது?. கடிதத்தில்தான் செய்தி இருக்கப்போகிறதே ஒழிய கடித உறையில் அல்ல. இந்த உடல்தான் அந்தக் கடித உறை. கடிதம் உள்ளே தான் உள்ளது. எங்கள் உள்ளத்தில் தான் அந்தச் செய்தி இருக்கிறது. அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது என்ன? அந்தச் செய்தி அமைதியையும், புரிந்துணர்வையும் பற்றியதா? நீங்கள் அதை வாசித்திருக்கிறீர்களா? அல்லது அந்தக் கடித உறையினால் மட்டும் கவரப்பட்டுள்ளீர்களா? கடித உறையைத் திறவுங்கள். கடிதத்தை எடுத்து வாசியுங்கள். அதில் சொல்லப்பட்டுள்ளது மிக அழகாக உள்ளது. நிறைவாக இருக்கும்படி அது கூறுகிறது. உள்ளே உள்ள செழிப்பில் இருக்கும்படி கூறுகிறது. அந்த உணர்வில் இருக்கும்படி கூறுகிறது. அமைதியில் இருக்கும்படி கூறுகிறது.

திரு. றாவத் தன்னை ஒரு விற்பன்னன் எனக் கருதவேண்டாம் எனக் கூறுகின்றார். "சகலதும் எனக்குத் தெரியாது என அவர் கூறுகின்றார்." இந்தளவும்தான் எனக்குத் தெரியும். அதாவது நமக்கு அமைதி தேவை. எனது வாழ்வில் எனக்கு அமைதி தேவை. எனக்குத் தெரியும் உங்கள் வாழ்வில் உங்களுக்கு அமைதி தேவை. அது எனக்கு எப்படித் தெரியும்?. ஏனெனில் நாம் எல்லோரும் ஒரேமாதிரியானவர்கள்.

"நான் இங்கே உங்களுக்குப் போதிப்பதற்கு வரவில்லை. நான் அதைச் செய்வதில்லை. நான் இங்கு எதையும் நிரூபிப்பதற்கும் முயற்சி செய்யவில்லை. நான் கூறுவதை உணரத்தான் வேண்டுமே அல்லாமல் நிரூபிக்கத் தேவையில்லை. உங்கள் உள்ளே உண்மையான ஆனந்தத்தின் உற்பத்தி இருக்கிறது. உங்களுள்ளே தெளிவு இருக்கிறது. உங்களுள்ளே எளிமையுள்ளது. உங்களுக்குள்ளே தான் தாகம் உள்ளது. அத்தாகத்தைத் தணிக்கக்கூடிய கிணறும் உங்கள் உள்ளேதான் உள்ளது. உங்களுள்ளேதான் பதில் உள்ளது. உயிர்வாழ்வின் அற்புதமும் உங்கள் உள்ளேதான் உள்ளது.

"இது ஒரு எளிமையான உண்மையைப் பற்றியது. இந்த உலகில் உள்ள எண்ணங்கள் எண்ணக்கருத்துக்கள் எல்லாவற்றையும் ஒன்று திரட்டுவது மிகவும் சுலபம். காதில் கேட்பனவற்றால் பாதிப்படை யாமல் இருப்பது முடியாத காரியம். திடீர் என எளிமையான உண்மை அலட்சியப்படுத்தப்படுகிறது. அந்த உண்மை என்ன? உண்மையென்னவெனில் நீங்கள் உயிர் வாழ்கின்றீர்கள். உயிரோடு இருக்கிறீர்கள். நீங்கள் தேடும் விடைகள் எல்லாம் உங்கள் உள்ளேதான் உள்ளது. பிறேம் றாவத் பற்றி மேலும் அறிந்துகொள்ள.

## Math Tutorial 305 (15.08.2015)

### Answers to Tutorial 304

**(1)** To find p:

$[(2^3)^{p^2}] \times (2^2)^p = 2$

$2^{3p^2} \times 2^{2p} = 2$

$2^{3p^2+2p} = 2^1$

→ since we have equal base

$3p^2 + 2p = 1 \rightarrow 3p^2 + 2p - 1 = 0$

$(3p - 1 \times x^{p+1}) = 0$, $p = 1/3$ or -1

**(2)** Find the smallest value of $n$ such that $t_n > 3000$.

$t_1 = 1000$, $t_2 = 1000(1,06)$,

$t_3 = 1000(1,06)^2$, $t_n = 1000(1,06)^{n-1}$

We want $1000(1,06)^{n-1} > 3000$ or

$(1,06)^{n-1} > 3$

Taking log on both sides

$(n\text{-}1) \log 1,06 > \log 3$

$n\text{-}1 > \frac{\log 3}{\log 1,06} = 18,8,$

$n > 1 + 18,8 = 19,8$

smallest value of n = 20.

**(3)** To find their intersection point:

$2x - 1 = x^4 + 3x^2 + 2x$

$x^4 + 3x^2 + 1 = 0$

Solving $x^2 = \frac{-3 \pm \sqrt{5}}{2}$ -2,65 or

$x^2 = -0,38$

→ in either case this is not possible

since $x^2 \geq 0, x \in R$

**(4)** $\overrightarrow{PQ} = (9\text{-}7), (\text{-}1\text{-}2), (\text{-}6+5) = (2, -3, -1)$

$\overrightarrow{PR} = (7\text{-}7), (3\text{-}2), (\text{-}3+5) = (0, 1, 2)$

Area of $\square = \overrightarrow{PQ} \times \overrightarrow{PR}$

$= (2, -3, -1) \times (0, 1, 2) = (-5, -4, 2)$

$|(-5, -4, 2)| = \sqrt{5^2 + (-4)^2 + 2^2}$

$= \sqrt{45}$, Area of $\Delta = \frac{\sqrt{45}}{2} = \frac{3\sqrt{5}}{2}$

### Tutorial 305

**(1)** In a school referendum $3/5$ of the student body voted yes, and 28% no. If there is no spoiled votes, what percentage of the students did not vote? [Gr. 6+7]

**(2)** If a, b and c are distinct positive integers such that abc =16 then the longest possible value of $a^b - b^c + c^a$ is (a) 253, (b) 63, (c) 249, (d) 263, (e) 259 [Gr. 11+12]

**(3)** If a 10-N force acting in the direction of the vector (1,1) moves an object from (-2,1) to Q(5,6). Calculate the work done. [Gr. 12]

By Mr. S.F. Xavier (Teacher)

Tel: 6473409490/
4167322228



# காக்கா முட்டை - திரை விமர்சனம்



சென்ற வருடம் Torontoவின் Tiff நிகழ்வில் வெளியிடப்பட்டு, இவ்வருடம் பொது மக்களுக்காக வெளியிடப்பட்ட படம் காக்கா முட்டை. இந்தியாவில் சில விருதுகள் பெற்றது இப்படம். இரு சிறுவர்களை முக்கிய கதாபாத்திரங்களாக கொண்டு கருத்தும், பொழுது போக்கு அம்சங்களும் கலந்து இப்படம் எடுக்கப்பட்டுள்ளது.

முட்டை வாங்கி சாப்பிட பணம் இல்லாததால் மரத்தில் ஏறி காகத்தின் முட்டைகளை எடுத்து குடிப்பதால் சின்ன காக்கா முட்டை, பெரிய காக்கா முட்டை என இவ் இரு சிறுவர்களும் அழைக்கப்படுகிறார்கள். இருவரும் தாயுடனும், பாட்டியுடனும் வாழ்கிறார்கள். ஏழையாக இருந்தாலும் அவர்களுக்கு ஆசைகள் நிறைய உண்டு. தந்தை சிறையில் இருப்பதால் இருவரும் கரி சேகரித்து விற்று பணம் சேர்க்கின்றனர்.

இவ் ஏழைகள் வாழும் இடத்திற்கருகே ஒரு புதிய Pizza கடை திறக்கப்படுகிறது. அதைக் கண்டவுடன் இரு பிள்ளைகளுக்கும் Pizzaவை ஒரு முறை வாங்கி உண்டு பார்க்க ஆசைப்படுகிறார்கள். இவர்களது ஆசையை TVயில் வரும் விளம்பரமும் தூண்டுகிறது.

நாலு துண்டுகளைக் கொண்ட ஒரு சிறிய Pizza 300 ரூபாய். அதை வாங்க ஒரு மாதம் வேலை செய்ய வேண்டும். Pizza கடை புதியது. வசதியானவர்கள் மட்டுமே உள்ளே செல்ல முடியும். அதற்கு புதிய உடை வேண்டும். அதற்கும் பணம் தேவை. இதை சம்பாதிக்க கடுமையாக உழைக்க வேண்டும்.

பணத்தை எப்படி இருவரும் சேகரிக்கிறார்கள்? Pizzaவை வாங்குவார்களா? இந்த சிறுவர்கள் எவ்வாறு TVயில் பிரபல்யமாகிறார்கள்? இந்த கேள்விகளின் பதிலை படத்தை பார்த்து அறியுங்கள்.

இரு சிறுவர்களும் கஷ்டப்பட்டு வேலை செய்துதான் சம்பாதிக்கின்றனர். தந்தையை சிறையில் இருந்து விடுவிக்க தாய் பணம் சேர்ப்பதாலும், Pizza வின் விலை அதிகம் என்பதாலும் நெடுங்காலம் வேலை செய்து காசை சேர்க்கின்றனர். ஒருபோதும் மற்றவரின் பணத்தைத் திருட முயற்சிக்கவில்லை. காகத்தில் கூட்டிலிருந்து முட்டைகள் எடுக்கும்போது, இரண்டு தனக்கும் தம்பிக்கும் எனவும் மிச்சம் இருந்த ஒரு முட்டை காகத்திற்கும் என கூறும்போது அவர்களது நேர்மையும், பேராசை இன்மையும் தெரிகிறது.

அத்துடன் குறுக்கு வழியில் Pizza வை சாப்பிட விரும்பவில்லை. நண்பரான பணக்காரப்பிள்ளை இவர்களை மதிக்காமல் தான் சாப்பிட்ட மிச்சமான Pizza வை தரமுற்பட, அது எச்சில் துண்டு எங்களுக்கு வேண்டாம். நாங்கள் சம்பாதித்து சாப்பிடுவோம் என உறுதியுடன் இருக்கிறார்கள். Tiffஇல் முதல் முறையாக தமிழ் இயக்குனரால் எடுக்கப்பட்டு காட்டப்பட்ட தமிழ் படம் இதுவாகும்.

பொதுவாக விருதிற்கு தெரிவு செய்யப்படுகின்ற படங்களில் நல்ல கருத்து இருக்கும் ஆனால் மற்றப் படங்களை விட மெதுவாகச் செல்லும். ஏழை பணக்காரனுக்கு இடையே இருக்கும் வித்தியாசத்தைப்பற்றிக் கூறும் படங்கள் பெரும்பாலும் சோகமாகவே இருக்கும். காக்கா முட்டை இப்படி இல்லாமல் நல்ல கருத்துடனும் எல்லோரும் பார்க்கக் கூடியதாகவும் இருக்கிறது. ஏழையாக இருந்தாலும் தன்னம்பிக்கையுடன் விடாமல் முயற்சி செய்தால் விரும்பியதை சிறுவர்கள் சாதிக்கலாம்.



ஞா. ஆரணி
அகவை 17

**இளையோர் ஆக்கம்** இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.



# உடல் மொழி (Body Language)

இன்று வாயால் பேசுபவர்களையும் மிஞ்சி விடுகின்ற அளவுக்கு உடல்மொழியும் வேகமாகி வருகிறது. உடலாலும் பேச முடியுமா? என்பது பலரது கேள்வி. சாதாரணமாக கடன் கேட்க வருபவர் முதல் நேர்முக பரீட்சைக்கு செல்பவர் வரையில் உடல்மொழியே மிகுந்தபலம் பெறும். ஆயிரக்கணக்கானவர்களுக்கு நேர்முகப் பரீட்சை வைத்த மேலாளர் முதலில் பார்ப்பது வந்தவரின் உடல் மொழியைத் தான். 'வாய்மொழியில்லாத தொடர்பு முறை, உணர்வுகளை வெளிக்காட்டும் நடத்தை, முகபாவனை மூலம் நடத்தை களை காட்டும் ஓர் உத்திமுறை, இருக்கும் முறை, கண் அசைவு என்பவற்றினை மாற்றி மாற்றி செய்தல் என்பவற்றினூடாக ஒருவர் வெளிக்காட்டும் முறையே உடல் மொழியாகும். வாயால் எத்தனையோ முறையில் பேசிக்கொண்டிருப்பவர்களை போலவே கணம்கணம் தங்கள் தோற்றத் தினை மாற்றிக் கொண்டிருப்பவர்களை சாதாரணமாக காணமுடியும். சாதூரியமான பேச்சால் காரியத்தை சாதிப்பவர்கள் போலவே உடல்மொழி மகத்துவத்தால் தமது கோரிக்கையை நிறைவேற்றுபவர் களும் உள்ளனர்.

நாம் சிலரை முதன்முறை பார்க்கும் போதே, நமக்கு பிடிக்காமல் போய் விடுகிறது. அவர்கள் என்னதான் அழகாகப் பேசினாலும் 'இந்த ஆளை நம்பக்கூடாது' என்றே உள்ளுக்குள் ஓர் எச்சரிக்கை மணி ஒலிக்கிறது. சிலர், வெளிப்பார்வைக்கு முரடர்களாகத் தெரிவார்கள். ஆனாலும் அவர்கள் மேல் நமக்கு இனம்புரியாத நட்புணர்ச்சி ஏற்படுகின்றது. ஒருவருடைய பேச்சுமொழிக்கு, நாம் ஓரளவு மரியாதை தருகிறோம். அதற்குமேல் ஒன்றுதான், அவர்கள் பேசுவது உண்மையா, பொய்யா என்று நம்மை முடிவு செய்ய தூண்டுகிறது. அந்த 'ஏதோ ஒன்றுக்கு' உளவியல் நிபுணர்கள் சூட்டியிருக்கும் பெயர் 'உடல் மொழி' (Body Language) என்பதாகும். தினசரி நாம் எத்தனையோ உடல் மொழி யுள்ளவர்களை சந்திக்கின்றோம். ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமானவை. எமது கண்களை பார்க்காது எங்கேயோ பார்த்துக் கொண்டு பேசுபவர்கள், எந்த நேரமும் கைகட்டிக் கொண்டு நிற்பவர்கள், காலுக்குமேல் கால் போட்டிருப்பவர்கள் (இதில் பெண்களும் விதிவிலக்கல்ல), அடிக்கடி தலையை ஆட்டிப் பேசுபவர்கள், விரல்களை நீட்டி பேசுபவர்கள், சங்கோஷ மாக நின்று பேசுபவர்கள், ஒற்றைக்காலை அடிக்கடி மற்றக்காலுக்கு மேலாக போட்டு பேசுபவர்கள், காலாட்டிக்கொண்டு பேசுபவர் கள் என நூறு வகையினர் உளர். வாயால் ஒருவர் நாலு விடயம் பேசினால், உடல்மொழி மூலம் தெரிவிப்பவை நானூறு செய்திகள். எந்த சூழ்நிலையிலும் உடல் மொழி என்பது நமக்கு துணையாக வரக்கூடிய அம்சமாகும்.



வாய்மொழி வருவதற்கு முன்பு எல்லாமே சைகை எனப்படும் உடல்மொழியே பாவனையில் இருந்துள்ளது. சினிமா கூட பல திரைப்படங்களில் வசனம் எதுவும் இருக்கவில்லை. எல்லாமே மௌனப் படங்கள் தான். சார்லிசப்ளின் உள்ளிட்ட பல அற்புதக் கலைஞர்கள், வெறும் உடல் மொழியைக் கொண்டுதான் ரசிகர்களுக்கு கதை சொல்ல வேண்டியிருந்தது. பின்பு இசையும் வசனமும் பாட்டும் வந்தன. இப்போது எல்லாப்படங்களிலும் நிறைவான எல்லாமே உள்ளன. எனினும் மௌனப் படங்களின் முன்னோடி உடல் மொழிதான். முதல் நடிப்பு; "வாயுள்ள பிள்ளைதான் பிழைக்கும்" என்பார்கள். ஆனால் குழந்தை கள் கூட ஆரம்பத்தில் பேசியது உடலால் தான். எனக்கு பசிக்கிறது, வலிக்கிறது, சந்தோஷமாக இருக்கிறேன். எல்லாமே கை, கால் அசைவால்தான் நிகழ்கிறது.

முதலாவது எமது முகம் மட்டும் உடல் மொழியாகும். இதனை Facial Expersion எனலாம். அதாவது முகத்தில் காட்டுவது. மகிழ்ச்சி, துக்கம், மனஅழுத்தம், கோபம் எல்லாவற்றையும் முகமே காட்டிக் கொடுத்து விடுகிறது. ஒருவரது மனஎழுச்சி, நடத்தை மாற்றங்கள் யாவும் முகத்தில் காட்ட வல்லவை. இதேபோல் கதிரையில் இருப்பவர் அல்லது நிற்பவர் எவ்வாறு செயல்படுகிறார் என்பதில் பல விடயங்கள் தெரியவரும். சிலர் கதிரையில் நேராக அடிவரை சென்று இருப்பர். சிலர் ஏதோ அந்தரத்தில் இருப்பதுபோல் தெரிவர். சிலர் சாகவாசமாக காலுக்கு மேல் கால்போட்டு இருப்பர். இப்படித்தான் கிரிக்கெட் அல்லது உதைபந்தாட்டம் செய்பவர்கள் கூட வாயால் கதைப்பதில்லை. அவர்களது செய்கை பார்த்தே நாம் ரசிக்கிறோம். கிரிக்கெட் டுக்கு மட்டுமல்ல, வாழ்க்கைக் கும் இது பொருந்தும். தெரிந்தோ தெரியாமலோ தினசரி வாழ்கையில் நாம் சந்திக்கின்ற ஒவ்வொரு வருடனும், நாம் தொடர்ச்சியாக உடல்மொழியுத்தம் நடத்திக் கொண்டிருக்கிறோம். ஆசிரியர் - மாணவன், அதிகாரி - ஊழியர், கணவன் - மனைவி, அப்பா - மகள், மாமியார் - மருமகள், கடைக்காரர் - வாடிக்கையாளர், அரசியல்வாதி - தொண்டர் என எல்லா விதமான உறவுகளும் இப்பொது விதியில் அடங்கி விடும். உடல் மொழியை வைத்துக்கொண்டு பல விடயங்களை சாதிக்கும் சாமர்த்திய சாலிகளையும் காண முடியும். மூளைக்கும் ஒருவருடைய செய்கைகளுக்கும் நிறைய தொடர்பு உண்டு. 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பர். உண்மையாக கூறப் போனால் முகத்தோடு கூடவே உடல் மொழியும் இணைந்து விடும். இதனை 'Face Language' எனவும் கூறலாம்.

தன்னிச்சையாக கை, கால், விரல், தலை என்பன அசைவது உண்டு. ஒருவரது செயல் தோற்றம் (Gestures) பற்றி அறிய வேண்டில் மேடைப்பேச்சில் காணலாம். ஒரு கையை தூக்குபவர்கள், இரண்டு கைகளையும் தூக்குபவர்கள், விரல் நீட்டிப்பேசுபவர்கள், அரசியல் மேடைகளில் நிற்பவர். ஆனால் பிரசங்கிகள் தேவையான இடத்தில் தமது உடலைப் பாவிப்பர். இசைக்கச்சேரியில் முகபாவமே முதன்மை பெறும். வெற்றி பெற்றவர்கள் விரல்களால் வெற்றி என Victory யில் உள்ள V அடையாளத்தை காண்பிப்பர். சிலர் பெருவிரலை மட்டும் உயர்த்தி காட்டுவர். இதனை மேலை நாடுகளில் காணலாம். எதுவித அசைவுமின்றி பேசுபவர் முன்னாள் பிரதம மந்திரி மன்மோகன்சிங். ஆனால் உடல்மொழியை கச்சிதமாக பாவித்து பிரதமரானவர் நரேந்திரமோடி. இன்றைய சமூகம் உடல்மொழியை பெரிதும் விரும்புகின்றது என்பதற்கு இதுவே சிறந்த உதாரணம்.

பொதுவாக கைகுலுக்குதல் (Handshakes) என்பது அடிக்கடி நிகழும் சம்பவம். சாதாரண மக்கள் கைகுலுக்குதல், நண்பர்கள் கைகுலுக்குதல், நாட்டுத் தலைவர்கள் கைகுலுக்குதல் ஒவ்வொன்று ஒவ்வொரு வழக. விரல்களை திருகுவது போல் பிடிப்பவர்கள், மிகவும் அழுத்திப் பிடிப்பவர்கள், மெதுவாகப் பிடிப்பவர்கள், நீண்டநேரம் கைகுலுக்குபவர்கள், படப் பிடிப்புக்காக அங்கும் இங்குமாக இழுப்பவர் கள் என பல வகையினர். அமெரிக்காவில் கைகுலுக்குதல் மிக பிரசித்திமானது. ஆண், பெண் கைகுலுக்குவதில் வேறுபாடு அங்கு உண்டு. முஸ்ஸீம் ஆண்கள் கைகுலுக்குதல் குறைவு. பெண்களை தொடுவதும் குறைவு. இந்து மதத்தினர் ஆண்கள் பெண்களுடன் கைகுலுக்குவதை தவிர்த்து கைகளை கூப்பி வணக்கம் மட்டும் சொல்வர். அப்படியே பெண்களும் செய்வர். சாதாரண மக்களிடையே கைகுலுக்குதல் இடம் பெறுகிறது.

உடல் மொழியில் கண்பார்வையும் முக்கியம் பெறுவதாகும். கண் அசைவு, கண் நடத்தை, உற்றுப்பார்த்தல், மேலும் கீழும் பார்த்தல், எங்கேயோ பார்த்தல் போன்றவை. சிலர் நேரே பார்ப்பதனை தவிர்த்து விடுவர். இதனை பார்த்து அவர்களின் உள்நோக்கங்களை புரிய முடிகிறது. சிலர் பேந்தப்பேந்த முழிப்பார் கள். ஒன்றும் செய்யாமலே கள்வர் போல பயந்து கொள்வார்கள். கடைகளில் வேலை செய்பவர்கள் குறிப்பாக புடவைக்கடை களில் வேலை செய்பவர்கள் பெண்களின் கண்களை துல்லியமாக அறிந்து விற்பனையை கூட்டி விடுவார்கள். நீண்ட காலம் வேலை செய்பவர்கள் ஜாடை மாை- டயாக பெண்களை எடைபோட்டு விடுவார்கள். விற்பனையாளர்களின் உடல் மொழி மிகவும் சாதுரியமாக செயல்படும். அவர்கள் கேட்காமலேயே பல சேலை களை வெளியே காட்டி ஒரு நடிகர் போல செயல்படுவார்கள். விமானரிக்கட் விற்பனை யாளர்கள், சுப்பர் மாக்கெட்டுகள், நட்சத்திர ஹோட்டல்கள், உணவகங்கள் என்பவற்றில் வேலை செய்பவர்களுக்கு உடல்மொழி பயிற்சி வழங்கப்படுகின்றது. உலகில் சிறந்த விற்பனையாளர்கள் தங்கள் வாடிக்கையாளர்களின் உடல்மொழியை துல்லியமாக படித்தவர்களாவர்.

உடல்மொழி என்பது யாரும் மினக்கெட்டு செய்கிற காரியமல்ல. அது அனிச்சையாக நிகழ்கிற விடயம். இதில் பொய் சொல்வது சிரமம். ஒருவரை விசாரிக்கும் போது முதலில் நல்ல உசாராக கதைப்பவர்கள் கூட தமது செய்கையால் அகப்பட்டு விடுவார்கள். தொடர்ந்து எவரையும் ஏமாற்ற முடியாது. சின்னக்குழந்தைகள் தொடங்கி, படித்தவர்கள், படிக்காதவர்கள், ஏழைகள், பணக்காரர்கள், வெவ்வேறு கலாச்சாரங்களை சேர்ந்தவர்கள், ஆண்கள், பெண்கள், உடல் வலுக் குன்றிவர்கள், மனவளர்ச்சி குன்றியவர்கள், பொய்சொல்லுபவர்கள் என சகலரிடமும் இதன் அம்சங்கள் கொஞ்சமேனும் உண்டு. மனத்தில் இருப்பதை வெளிக்காட்டுவதான் உடல்மொழியாகும். நீதிமன்றம், பொலீஸ் திணைக்களம், குடிவரவு குடியகல்வு திணைக்களம் போன்றவற்றில் பலர் அகப்பட்டுக் கொள்வதும் இந்த உடல்



சிந்தனைப் பூக்கள்
எஸ். பத்மநாதன்

தொடர்ச்சி 35ஆம் பக்கம்

**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**
**இலவச ஆலோசனை வழங்கப்படும்**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் எண்ணையினாலும் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர விளம்பரம் பத்திரிகை அலுவலகத்தில் "எம்மை நாம் பாதுகாப்பது எப்படி" என்ற புத்தகம் விற்பனைக்கு உள்ளது.

இலவச ஆலோசனைகளுக்கு: **647.456.9796**

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada) Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician LG.Ayurvedic Medical Services (SriLanka)

# உடல் மொழி

மொழியால்தான். வாயால் பேசாமல் இருக்கலாம். ஆனால் உடல் மொழிக்கு மௌனம் கிடையாது.

ஒருவர் உட்காரும் விதம், சாப்பிடும் வேகம், மற்றவர்களிடம் பேசும் விதம் என ஒவ்வொன்றாகக் கவனித்தால் அவர் சந்தோசமாக உள்ளாரா, சோர்ந்திருக்கிறாரா என கணித்து விட முடியும். இவ்வாறான நிலையை உடல்மொழி நிபுணர்கள் 'cluster of gestures' எனக் குறிப்பிடுகிறார்கள். இவ்வாறான உடல் அசைவு ஒவ்வொன்றும் நமக்கு ஒரு வார்த்தையை தருகிறது. அதனை சரியான முறையில் புரிந்து கொள்ள வேண்டும் இரண்டாந்தரமொழி (Second Language) போல இது உள்ளது. அதுவும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே சில நுணுக்கமான விடயங்களை உணர்த்தும் உடல் - உள அமைப்பு, வளர்ப்பு விதம் முக்கியமாகிறது. பெண்கள் புத்தகங்களை நெஞ்சோடு அணைத்து செல்வார்கள். இது அவர்களுக்கே உள்ள தனித்துவம்.

இளம் பெண்களை பார்த்தால் ஐந்து நிமிடத்திற்கு ஒருமுறை தம் கூந்தலைக் கோதிக்கொள்வர். அது ஒரு 'ஸ்டைலாக' ஒதுக்கப்படுவதற்கானது என்ற விதியைத்தான் தவறாமல் பின்பற்றுகிறார்கள். எதிர்பாலினர்களை கவனத்தை ஈர்ப்பது மூலம் நாம் கூடுதல் அழகாக தோன்றுகிறோம் என எண்ணலாம். அத்துடன் இது மனவியல் உத்தி 'Self touch' யாக கூட இருக்கலாம். தமக்கு தைரியம் கொடுப்பதாக நினைகிறார்கள். தனிமையை மறைக்கிற உத்தி



முறையாகவும் இருக்கலாம். தலைமுடியை சரியாக பராமரிப்பதன் மூலம் அழகு, கண்ணியம், கம்பீரம் உள்ளிட்ட அர்த்தங்களை உடல் மொழியால் வெளிப்படுத்த முடியும்.

எம்மிடையே வாழ்கின்ற பள்ளிக்கூட மாணவர்களின் முக்கிய உடல்மொழி அடிக்கடி தோள்களை தூக்குவது தான். பிள்ளைகளுடன் பழகினால் இந்த உண்மையை அறிந்து கொள்ளலாம். அடிக்கடி தோள்களைத் தூக்குவது அவர்களுக்கு தெரியாமல் நடந்துவிடுகிறது. தோள்களை தூக்குவதற்கு பல அர்த்தங்கள் இருக்கலாம். பேச்சின் நடுவே, தோள்களை குலுக்குகிறவர் ஏதோ குழப்பத்தில் சிக்கிவிட்டார் என்று அர்த்தம். அடுத்து என்ன என்று தெரியாமலும் இருக்கலாம். மாணவர்களிடம் ஏதாவது கேள்வி கேட்டால் 'I don't know' என்பதற்காகவே தோள்களை தூக்குகிறார்கள். இப்போதுள்ள கணினி பாவனை காரணமாக அவர்கள் எதனையும் ஞாபகத்தில் வைத்திருப்பதில்லை. தோள்களை தூக்குவர்கள் பெரும்பாலும் சம்பந்தப்பட்ட தலைப்பைப் பற்றி பேசுவதிலிருந்து விலக விரும்புகிறார்கள் என்று புரிந்து கொள்ள வேண்டும். எம்மவர்கள் எடுத்ததிற்கெல்லாம் 'சும்மா' என்று அடிக்கடி கூறுவதுண்டு. என்ன காரணமாக இந்தப்பக்கம் வந்தீர்? எனக் கேட்டால் 'சும்மா வந்தனான்' என்பார்கள். இதுபோலத் தான் எதற்கும் தோளை குலுக்குகிறோம்.

உடலியல் ரீதியில் பார்க்கிறபோது, நம்முடைய கைகள், மூளை நரம்பு மண்டலத்தோடு நேரடியாகப் பிணைக்கப்பட்டிருக்கின்றன. அதனால் தான் பேச்சின் போதும் சிந்தனையில் போதும் அவற்றை தொடர்ந்து அசைத்துக் கொண்டிருக்கிறோம். நேர்முகப்பரீட்சைக்கு சென்று 'உட்காருங்க' என்று மேலாளர் கூறுவதற்கு முதல் நாற்காலியில் உட்கார்ந்தால் வேலை கிடைப்பது நிச்சயமில்லை. காலுக்கு மேல் காலைத் தூக்கிப் போட்டாலும் கூட வேலைக்கு உத்தரவாதமில்லை. இதனால்தான் உடல் மொழி பற்றிய நூல்கள் பல எழுதப்பட்டு வருகின்றன. பயிற்சி வகுப்புகள் நடை பெறுகின்றன. இத்துறையில் நுணுக்கமான ஆராய்ச்சிகள் செய்து, இதையே முழுநேரப்பணியாக செய்பவர்களும் உள்ளார்கள். வியாபாரத்தில் தொடங்கி தனிப்பட்ட உறவுகள் வரை உடல்மொழியின் தாக்கம் அதிகமாகும். உடல்மொழியை நன்கு அறிந்தவர்கள் அடுத்தவர்களை துல்லியமாக எடை போடமுடியும். அவர்கள் மனதில் என்ன நினைக்கிறார்கள் என்பதனை நிஜமாக தெரிந்து கொள்ள முடியும்.


# Employment Opportunity

## *Manager for catering company*

RajahRam Caterers, a leading catering company specializing Sri Lankan and South Indian food in Toronto, is currently seeking a manager with strong analytical, communication and interpersonal skills to manage the catering services. Ideal candidate would be passionate about food, willing to lead and manage staff and have strong customer service skills. More information at ***www.Rajahram.com*** under 'Jobs' tab. Apply online.

# EDUCATION

## Review Questions15 -16

➢ **ADVANCED FUNCTION 12**

Create a function of the form of $f_{(x)} = \frac{P_{(x)}}{Q_{(x)}}$

Where $P_{(x)}$ is a cubic function and $Q_{(x)}$ is a Quadratic function. The function $f_{(x)}$ is to have a removable discontinuity at x= 2, and a vertical asymptote at x = 2 and an oblique asymptote of y = 2x +1. When you perform a long / synthetic division on $\frac{P_{(x)}}{Q_{(x)}}$, the remainder is 1. Sketch a graph of the function with all key features labelled.

➢ **CALCULUS & VECTORS**

Differentiate the following.

(i) $\sqrt{\frac{1+x^3}{1-x^3}}$ (ii) $\sqrt{1+x^2}.\sin^3\sqrt{x}$

(ii) Is there any solution for the following,

$P_1 = 2x + 3y - 4z = -5$
$P_2 = x - y + 3z = -201$
$P_3 = 5x - 5y + 15z = -1004$

Support your answer with calculations.

➢ **BIOLOGY**

(i) List the roles of eukaryotic DNA polymerases.

(ii) Glucose can be obtained from the conversion of glycogen for ATP production. Do the liver glycogen and muscle glycogen supply the same amount of ATP to the muscles.

(iii) Explain how memory T cells help provide immunity against future infections

➢ **CHEMISTRY**

Determine the de Broglie wavelength of an electron that accelerates from rest through a potential difference 60V

## Answer Key : 15-15

➢ BIOLOGY(Gr12)

Both the 5' and 3' ends are covalently modified during the mRNA synthesis before the mRNA exits the nucleus.

5'cap – modified by addition of 7, methyl guanosine (GTP) that is added to the 5' end. The 3' end, modified by enzymatic addition of a poly-A-tail,
(Poly-A tail – sequence of about 200 adenine nucleotides) to the 3' end of mRNA before it exits the nucleus. These modifications inhibit degradation of mRNA in the cytoplasm, may facilitate attachment to the small ribosomal subunit and may regulate protein synthesis by facilitating mRNA's export from the nucleus to the cytoplasm.

➢ **MATH**

$f(x) = x(30 - 2x)(20 - 2x)$
$x(30 - 2x)(20 - 2x) = 1008$
$f(x) = 4x^3 - 100x^2 + 600x$;
$4x^3 - 100x^2 + 600x = 1008$
$x$ = 3cm or 4.92cm

➢ **CHEMISTRY 11**

$K_2Cr_2O_7\,(aq) + 14HCl(g) \rightarrow 7H_2O(l) + 2KCl\,(aq) + 2\,CrCl_3(aq) + 3\,Cl_2(g)$

Calculate the number of moles of each reactant

$K_2Cr_2O_7$ = 0.9x 20 = 18g;
$K_2Cr_2O_7$ = 0.061225mol
Number of moles of HCl ,
= 50 /36.46 = 1.3714
Limiting reactant is $K_2Cr_2O_7$

Therefore, number of moles of $Cl_2$ is produced = 3 x number of moles of $K_2Cr_2O_7$
= 0.061225mol x 3

Mass of $Cl_2$ = 0.061225 x 3 x 70.9g

Answer key
15-16 - next issue
☎ 647 341 3975
KEEN TUTORING CENTRE

# மிகச்சிறப்பாக நடைபெற்ற வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர்களின் 20ஆவது ஒன்றுகூடல்

வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் 20ஆவது வருடாந்த ஒன்றுகூடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை (ஆகஸ்ட் மாதம் 2ம் திகதி) Scarborough Milliken Park இல் பல நூற்றுக்கணக்கான மக்களுடன் மிகச்சிறப்பாக நடை-பெற்றது. கல்லூரியின் பழைய மாணவர்களும் முன்னாள் ஆசிரியர்களும் நலன்விரும்பிகளும் மற்றும் கல்லூரியின் முன்னாள் நிர்வாகசபை உறுப்பினர்கள் அமரர்கள் திரு. நாகையா கந்தவேள் மற்றும் திரு. தர்மலிங்கம் கந்தையா அவர்கள் ஞாபகார்த்த விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்நிகழ்விற்குச் சங்கத்தின் தலைவர் திரு. சி. இளஞ்செழியன் அவர்கள் தலைமை தாங்கினார். பொன்னுச்சாமி அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். கல்லூரியின் பழைய மாணவிகள் திருமதிகள் கலா செல்வம் சோதிமலர் சிவா கவிதா காந்தன் ஆகியோர் இனிமையாக கல்லூரிக்கீதம் பாடினர். கௌரவ விருந்தினர் திரு. பே. பொன்னுச்சாமி அவர்கள் சங்கக் கொடியை ஏற்றினார். அடுத்து விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகின. விளையாட்டு நிகழ்ச்சிகளை ஆசிரியர்கள் திரு.







அவர்களது குடும்பத்தினரும் குவிந்திருந்தனர். பழைய மாணவர்கள் தங்களுக்குப் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கு மரியாதை நிமித்தமாகக் குரு வணக்கம் செலுத்தியதோடு தமது கல்லூரி நினைவுகளையும் பகிர்ந்து கொண்டனர்.

பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவரும் முன்னாள் பிரதி அதிபருமான திரு. பொன் ஈசன் அவர்களும் சிறப்பு விருந்தினராக முன்னாள் ஆசிரியை திருமதி ரெறீஸ் அலெக்ஸாண்டர் அவர்களும் பிரதம மத்தியஸ்தராக முன்னாள் விளையாட்டுத்துறை ஆசிரியர் திரு பே.

திருமதி. தனபாலசுந்தரன் ஆகியோர் மிகச்சிறப்பாக நெறிப்படுத்தினர். சங்கத்தின் 20ஆவது ஆண்டு நிறைவையொட்டி கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது குறிப்பிடத்தக்கது. சங்கத்தின் செயலாளர் திரு. சு. சிவகுமார் அவர்களது நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுபெற்றது.

# மரண அறிவித்தல்

# திருமதி நடராசா திருப்பதி அம்மாள் (இராசமணி)



யாழ். மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வாழ்விடமாகவும் கொண்ட நடராசா திருப்பதி அம்மாள் அவர்கள் 09-08-2015 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற கந்தவனம், செல்லக்குட்டி (பொன்னம்மா) தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்ற ராஜா, செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும்,

காலஞ்சென்ற நடராசா அவர்களின் அன்பு மனைவியும்,

குமுதினி (லண்டன்), சுகந்தினி (லண்டன்), சாந்தினி (லண்டன்), அமுதினி (கனடா), ஜெயந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தனபதி (லண்டன்), பத்மவதி (லண்டன்), காலஞ்சென்ற சிவசுந்தரம், சிவபாக்கியம் (கிச்சி- இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

ஞானகுமாரன் (ஜெனகன்-லண்டன்), நவேந்திரா (குமார்-லண்டன்), ரவிகாந்தன் (காந்தன்-லண்டன்), காலஞ்சென்ற கதிர்காந்தன் (காந்தன்), தனசேகரன் (ரஞ்சன்-லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கார்த்திகேசு, மகேஷ்வரி, காலஞ்சென்றவர்களான தையல்நாயகி, சிவனேஷ்வரி, தனலட்சுமி, சிவலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், விஜீத், ஜீவித், சஜன், தரண், சகானா, துஷியந்தன், சிரோமி, ஆரபி, அத்விகா, அக்ஷ்யன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

தோற்றம்
14.02.1935



மறைவு
09.08.2015

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**பார்வைக்கு** - திகதி: சனிக்கிழமை 15.08.2015, 05:00 பி.ப — 09:00 பி.ப
முகவரி: Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

**பார்வைக்கு** - திகதி: ஞாயிற்றுக்கிழமை 16.08.2015, 08:00 மு.ப — 10:30 மு.ப
**முகவரி:** Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

**கிரியை** - திகதி: ஞாயிற்றுக்கிழமை 16.08.2015, 10:30 மு.ப: 11:30 மு.ப
**முகவரி:** Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave, Markham> ON L3R 5G1, Canada

**தகனம்** - திகதி: ஞாயிற்றுக்கிழமை 16.08.2015, 12:00 பி.ப
**முகவரி:** 1591 Elgin Mills Rd E,Richmond Hill, ON L4S 1M9,Canada.

சுகந்தினி - பிரித்தானியா :+44.208.428.001
சாந்தினி - பிரித்தானியா :+44.208.723.6750
ஜெயந்தினி - பிரித்தானியா :+44.796.909.5891
தனபதி - பிரித்தானியா :+44.203.686.8642
சிவபாக்கியம் (கிச்சி): இலங்கை :+94.11.250.4049

# பரிசோதனைக்கு எப்போதும் நான் தயார்!

எப்போதும் பரிசோதனைக்கு உட்பட நான் தயாராக இருப்பதனால் நம்பிக்கையின் சக்தியை அனுபவித்து அதை வெளிப்படுத்துகிறேன்.

வாழ்வில் சகலதும் எமக்குச் சரிவர அமைந்து விட்டன என எம்மில் பலர் நினைக்கிறோம். நாம் அறிந்திருக்க வேண்டியவை யாவும் எமக்கு நன்கு தெரிந்த படியால், தேவையானபோது தகவல்களை உடனடியாக ஞாபகப்படுத்திக் கொள்ள முடியும் என நினைக்கிறோம். ஆனால் சற்றும் எதிர்பாராத போது ஒரு சவாலை நாம் சந்திக்கும்போது தேவை யான தகவல் ஒன்றுகூட நினைவுக்கு வந்து உதவாமல் எம்மை ஆச்சரியப்படுத்தும்! ஆமாம் எமது மனம் குழம்பிய நிலையில் அந்த நேரத்தில் எமக்குத் தேவையான விவரங்கள் எம் நினைவுக்கு வரவே வராமல் அடம்பிடிக்கும். இத்தகைய அபாயகரமான நிலைகளில் திகிலடைந்து பீதியுடன் பயப்படும்போதுதான் நாம் நம்பிக்கை வைத்திருந்தவை வழக்கமாக சோதனைக்குட்படுத்தப்பட்டு 'சோதனை மேல் சோதனை, போதுமடா சாமி' என எம்மைத் துன்புறுத்துகின்றன. எமக்குத் தெரிந்தவை யாவும் எமக்குச் சரியாகத் தெரிந்திருக்கின்றன என்பது எமக்கு நிச்சயமில்லாவிடின் இந்த நெருக்கடிகளைச் சமாளிக்க முடியாது. சந்தேகத்துட னும் பயத்துடனும் நாம் புதைகுழிக்குள் அகப்பட்டு விடுவோம். எமக்குத் தெரிந்தவை எமக்குச் சரிவரத் தெரிந்து நாம் சொல்வதில் உண்மையான நம்பிக்கை எமக்கு இருக்கிறதா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவே இவ்வாறு வாழ்வு எம்மைப் பரிசோதித்துப் பார்க்கிறது.



நம்பிக்கை என்ற மைதானத்தில் நீ எந்த இடத்தில் இருக்கிறாய் என்பதை உண்மை யாக அறியவேண்டும் என்றால் கடவுள் தரும் புதிர்களுக்கு உனது பதில் என்ன? உனக்குப் பதில்கள் தெரியும் என்ற நம்பிக்கையுடன் சோதனைக்குப் போவாயா அல்லது உனக்குச் சுகமில்லை எனப் பொய் சொல்லிப் போகாமல் இருப்பாயா? முழுமுயற்சியுடன் கேள்விகளுக்குப் பதில் அளிக்கப் பார்ப்பாயா அல்லது ஏமாற்றி நம்பிக்கைத் துரோகம் செய்வாயா? பதில் தெரியாவிட்டால், அதை ஒப்புக்கொண்டு உதவி கேட்பாயா அல்லது பதில் தெரியும் என நடித்து உனக்குப் பதில் தெரியாதது வெளிவரும் போது ஆசிரியர் இதை எனக்குக் கற்பிக்கவில்லை எனக் குற்றம் சாட்டுவாயா? உனது வாழ்வில் தலை தூக்கும் இத்தகைய சடுதியான கேள்வி களுக்கு என்ன பதிலளிக்கிறாய் எப்படிச் சமாளிக்கிறாய் என்பது நம்பிக்கை மைதானத்தில் நீ எந்த இடத்தில் நிற்கிறாய் என்பதைத் தெரிவிக்கும். வாழ்வில் உனக்கு யாவற்றையும் பற்றி சகலதும் தெரியும் என இன்றுவரை நீ நினைத்திருக்கலாம். வாழ்வின் வியப்பூட்டும் எதிர்பாராத சிறுசிறு நிகழ்வுகள் உனக்குத் தெரியவர வேண்டிய மேலதிக தகவல்களை உனக்குக் கற்பிக்க இன்று அனுமதி கொடு.

**பரிசோதிக்கப்படும்போது பயப்படாது உண்மையான பதில்களைக் கொடுக்க நான் எவ்வளவு ஆயத்தமாக இருக்கிறேன் எனும் விடயத்தை இன்று விசுவாசத்துடன் எதிர்கொள்கிறேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 230

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214 416.907.6897



லலிதா புருடி






ரூபி அறை யன்னலால் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தா. அவவுக்கு பின்னால் செக்கண்ட்புளோர் செல்லம்மா ஆட்டிலறி அன்னம்மா வானத்தை அங்குமிங்கும் பார்த்தனர். சுப்பசிங்கர்ஸ் ஹெலிகொப்டரிலை இதாலைதான் நேற்று போனவை?



ரூபனும் ரூபியும் ஜேர்மனிக்கு சுற்றுலா சென்றதால் உலகர் குழாம் ஊர் சுற்ற முடியவில்லை. பிறிம்லி மீனாவும் மதனும் செல்லும் நிகழ்ச்சிகளை ஐபொட் அகிலாண்டேஸ்வரிக்கு அனுப்பிக் கொண்டேயிருந்தனர்.



உலகரின் மனம் 'ஓல்ட் இஸ் கோஸ்ட்' என முருகேசர் அடிக்கடி சொல்வது போல தனது தரைமார்க்கமான ஈரான் பயணத்தை நினைத்துக்கொண்டிருந்தது. ராமானுஜம் கப்பலில் தலைமன்னார், ராமேஸ்வரம், மற்றாஸ், டெல்லி - இந்தியா. கறாச்சி, லாகூர், மிறிஜாவா - பாகிஸ்தான். ஆடு, கோழி ஏற்றும் தட்டி வான், பஸ்களில் பிரயாணம்... சாப்பிட்டது பாதி, தூங்கியது பாதி. செல்போன் இல்லை. (அந்தக்காலத்தில் யார் வீட்டில் போன் இருந்தது?)



அதன்பின்னர் ஈரானில் இஸ்லாமிய புரட்சி. அமெரிக்க, ஈரான் யுத்தம்... திசை மாறிய பறவைகளாக இத்தாலி, ஜேர்மனி, பிரான்ஸ், அமெரிக்கா, கனடா என ஈழத்து அகதிகள் பறந்தனர். மனைவி, பிள்ளைகள், பெற்றோரை கஸ்டங்களின்றி ஸ்பொன்சரில் வசதியாக அழைத்தனர். கஸ்டமில்லாத வசதியான வாழ்க்கையை அமைத்துக்கொடுத்தனர்.

உலகர் ஈரானில் இருந்தபொழுது இடைக்கிடை தகுதிக்கு மீறி செலவுசெய்து ஆடம்பரத்தில் கால்வைக்க முருகேசர் எழுதிய கடிதம் ஞாபகத்துக்கு வந்தது. நடந்து வந்த பாதையை மறக்கக்கூடாது. ஆனால் இன்று யார் பழைய நிலைமையை தம்மை அழைத்தவர் நிலைமையை நினைத்துப் பார்க்கின்றனர்.



ஹெலிகொப்டர் வேறை பாதையாலை போட்டுதுபோல கிடக்கு என்று சலித்தபடி வந்திருந்தனர். இத்தனை அமளிதுமளிக்குள்ளும் முருகேசர் இலங்கை தேர்தல் பற்றி உலகருடன் நல்லது கெட்டது கதைக்காமல் விடமாட்டார்.



தேர்தல் முடியும்வரை ஊமையாக இருக்க விரும்புகிறேன் என வடமாகாண முதலமைச்சர் சீ.விக்கினேஸ்வரன் சொன்னது தெரியுமோ.? என முருகேசர் கூறியதை உலகர் நினைத்துப்பார்த்தார். சிரிப்புத்தான் வந்தது. வருடக்கணக்காக தமிழ்மக்கள் ஊமையாகத்தான் இருக்கிறார்கள்.

இஞ்சை பார் இந்தப்பகிடியை என வாசித்த பேப்பரை எல்லோருக்கும் காட்டினா செக்கண்ட்புளோர் செல்லம்மா.



சந்திரிகா சொல்லுறா மகிந்த ராஜபக்சா வந்தா நாட்டைச் சீரழித்துவிடுவார். உடனே ஆட்டிலறி அன்னம்மா குறுக்கிட்டு அம்மா ஸ்ரீமா செகுவொரா கலவரத்தில் கணக்கற்ற சிங்கள இளைஞர்களை கொன்று குவிச்சா. மகள் சந்திரிகா ஜனாதிபதியாக வந்து பல தமிழ்ப்பகுதிகள் அழிக்கப்பட்டு தமிழ் ஆக்களும் கொல்லப்பட்டனர். இனி சீரழிக்க என்ன கிடக்கு என நீண்ட பிரசங்கம் செய்தா.

நேற்று லெக்சன் மீற்றிங்கிலை ராஜபக்சாவும் குடும்பத்தினரும் நிலம் நீர் ஆகாயம் மூன்றையும் கொள்ளையடித்து விட்டாரெனெ செய்தியை பார்த்துவிட்டு நல்லகாலம் சொர்க்கம் நரகம் இரண்டையும் விட்டிட்டாங்கள் என முணுமுணுத்தா ஆட்டிலறி அன்னம்மா.



அது பரவாயில்லை யாழ்ப்பாணத்திலை போதை வஸ்துக்களுடன் கைது செய்யப்பட்டால் கடும் தண்டனை அதுவும் பாடசாலை மாணவர்கள் கைது செய்யப்படும்போது பெற்றோரும் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுவர் என யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியனின் செய்தியும் இருந்தது.

(சிங்கம் படத்தில் விஜயகுமாரின் வசனம். இவ்வளவு காலமும் எங்கே ஐயா இருந்தாய்)

இலங்கையோ இந்தியாவோ கனடாவோ பிள்ளைகளை அடிக்கக்கூடாது பேசக்கூடாது அதட்டக்கூடாது மிரட்டக்கூடாது என சட்டம் சொல்லுகிறது. ஆனால் பிள்ளைகள் பிழை விட்டால் பிணை எடுக்கவும் வீட்டில் பெற்றோர் பொறுப்பாகப்பார்க்க வேண்டுமென்றும் அதே சட்டம் சொல்கிறது.

பெற்றோர் என்ன செய்வார்கள் ?

ஆகஸ்ட் 15 - 31, 2015



15. ரொரன்ரோ துர்க்கை அம்மன் தேர்.

16. ஆடிப்பூரம் (திருவாடிப்பூரம்)

16. ராமகிருஸ்ண பரமஹம்சர் நினைவு தினம். ஆகஸ்ட் 16.1886)
சுவாமி விவேகானந்தர் இவரிடம்தான் சீடராக இருந்தார்.
அனைத்து மதங்களும் ஒரே இறைவனை அடையும் வெவ்வேறு வழிகளே என்பதை தன் அனுபவங்கள் மூலம் உணர்ந்து அதையே வலியுறுத்தியவர்.



16. பாடகி ஜிக்கி நினைவு தினம்

17. தெல்லிப்பழை துர்க்காதேவி கொடி

18. நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் நினைவுதினம் (1945)



19. நல்லூர் கந்தசாமி கோவில் கொடி

19. உலக புகைப்பட நாள்

22. ஜாக் லெய்ரன் (Jack Layton - NDP) நினைவு தினம் - 2011



22. டி. எஸ். பாலையா பிறந்த தினம். (ஆகஸ்ற் 22, 1941 – டிசம்பர் 21, 1972) ஆரம்பகாலத்தில் வில்லனாக நடித்தவர். பின்னர் நகைச்சுவைப் பாத்திரத்தில் முத்திரை பதித்தவர். (காதலிக்க நேரமில்லை, தில்லானா மோகனாம்பாள், திருவிளையாடல் பாலையாவை மறக்க முடியுமா?)



23. ஆவணி ஞாயிறு விரதம் (முதலாம் ஞாயிறு)

25. "அருள்மொழி அரசு", "திருப்புகழ் ஜோதி" திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் பிறந்த தினம். (ஆகஸ்ற் 25, 1906 - நவம்பர் 7, 1993)

27. தெல்லிப்பழை துர்க்காதேவி தேர்



28. வரலட்சுமி விரதம்

28. கனடா செல்வச்சந்நிதி தேர்

31. இளவரசி டயானா நினைவு தினம் (1997)




# பத்திரகாளி சோதிட நிலையம்

# BADRAKALLI ASTROLOGY CENTER



## Pandit Sri Hanuman

Kerala (Choddankiri)

# 416.846.2798

## 100% Guaranteed Result



The Pandith can read the Past, Present & Future by Hand prediction, name, date of birth relating to love, education, marriage, money. I will help in all problems and work with god and holy spirit. Are you suffering in silence and nobody knows your pain or sorrow, but you and god know. Well you are not alone, the holy spirit will guide you tome and convince you. I will remove and destroy all bad, witchcraft, jealously and black magic permanently with superior strength & holy given power to protect to you and your family from evil things.

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் **Pandit Sri Hanuman** சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, ஜாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை இவரைச் சந்தியுங்கள்.

கண்ணூறு, நாவூறுக்கு வெள்ளிக்கிழமை இலவசமாக நூல் கட்டப்படும்.

- கைரேகை
- நாம நட்சத்திரம்
- கல்வி, உத்தியோகம்
- தொழில், வியாபாரம்
- இலட்சுமி வசீகரம்
- வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டுப் பயணங்கள்
- நீதிமன்ற வழக்குகள்
- பெண் பிள்ளைகள் – பெற்றார் பிரச்சனைகள்
- திருமணயோகம்
- குழந்தை பாக்கியம்
- கணவன் – மனைவி ஒற்றுமையின்மை
- எதிரிகள் கண்ணூறு, நாவூறு
- சர்ப்பதோஷம்
- கர்ப்பதோஷம்
- கஷ்ட – நஷ்டங்கள்
- வாகனப் பொருத்தம்
- ஒன்றுகூடுதல்

- Business Investments
- Jealousy
- Childless Couples
- Depression
- Worries About Loved Ones
- Enemy Problems
- Money Problems
- Sexual Problems
- Love Problems
- House Protection
- Work Problems
- Money Blessing
- Family Arguments
- Drinking Problems

பிளாக் மெஜிக் அகற்றி பாதுகாப்புக் கொடுக்கப்படும்.

**5215 Finch Ave. East, Unit #257, Upstairs, Scarborough ON M1S 0C2**

**GTA Square Mall (2nd Floor) (Middlefield & Finch)**

# ரொறன்ரோவில் திருமதி. வைதேகி ஹேபேர்ட் அவர்களின்

# சங்க இலக்கியப் பயிலரங்கு

கடந்த வாரம் 8ஆம் 9ஆம் திகதிகளில் சங்க இலக்கியம் பற்றிய பயிலரங்கத்தை ரொறன்ரோ இலக்கியத் தோட்டமும், ரொறன்ரோ தமிழ்ச் சங்கமும் இணைந்து மேற்கொண்டன. காலை 10 மணிமுதல் மாலை 5 மணிவரை எதுவித சலிப்போ கழைப்போ இன்றி பயிலரங்கத்தை நடத்தி கலந்து கொண்டோரால் பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்டார். இப்பயிலரங்கத்தினை பிரபல எழுத்தாளர் அ. முத்துலிங்கம் அவர்களும், வைத்தியக் கலாநிதி லம்போதரன் அவர்களும் ஒழுங்கு செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. வைதேகி ஹேபேர்ட் அவர்கள் சங்க இலக்கிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி-பெயர்த்து தமிழில் பாண்டித்தியம் அற்ற பாமரர்களும் விளங்கிக்கொள்ளத் தக்கவகையில் மகத்தான பணியினைச் செய்து தமிழன்னையின் அணிகலன்களுக்கு மெருகூட்டியுள்ளார்.

சங்க இலக்கியங்களான அகநானூறு, புறநானூறு, எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, கலித்தொகை முதலானவற்றில் இருந்து சில பாடல்களைத் தேர்ந்தெடுத்து அவற்றைப் பற்றிய விளக்கங்களை அவர் நயம்பட அனைவரும் இலகுவாக அறிந்து கொள்ளும் வண்ணம் இப்பயிலரங்கத்தை மேற்கொண்டார். சங்க இலக்கியச் செல்வத்தை அனைவரும் அனுபவித்து மகிழ வேண்டும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழரின் பண்பாட்டு வரலாற்றையும், விழுமியங்களையும், வாழ்க்கை முறைகளையும்

**- த. சிவபாலு -**

அப்பாடல்களில் புதைந்துள்ள கருவூலங்களின் வழி எடுத்தியம்பி இளைஞர் முதல் முதியோர்வரை அவற்றைத் தொடர்ந்து படித்துப் பயன்பெறத்தக்க இலகுவான வழிமுறைகளை அவர் எடுத்துக் கூறியமை அனைவரையும் சங்க இலக்கியத்தில் காதல் கொள்ளவைத்தது எனலாம்.

தமிழனின் வாழ்க்கை முறை, உடை தயாரித்தல், ஆயுதம் தயாரித்தல், போரியல், தூதுவரும் தூது சென்றமையும், காதல், உடன்போக்கு, ஊடல், பிரிதல், உவத்தல், ஐவகை நிலங்களின் பாகுபாடுகள், அவற்றின் மக்கள் வாழ்வியல், தொழில் முறைகள், களவொழுக்கம், உடன் போக்கு, களவொழுக்கமும் கற்பொழுக்கமும் என்பனவற்றோடு, காதல் வெறியாட்டு, கடவுள், காடுறை தெய்வம், செயோன், வேள், மாயோன் போன்ற தலைவர்கள் போற்றப்படும் நிலைமைகள், பெண்டிர் அணியும் அணிகலன்கள், ஆடவர் அணியும்



அணிகலன்கள், இயற்கை, குறிஞ்சி, நெய்தல், மருதம், முல்லை, பாலை எனவரும் ஐவகை நிலங்களின் மக்களின் தொழில் முறைகளும் வாழ்வியலும் பற்றிய விளக்கங்களும் நிலத்தை ஒட்டிய காதல் ஒழுக்கங்கள் பற்றியும், தோழியர், செவிலித் தாய், தாய், பாங்கன் போன்றோரின் அறிவுரைகள் பற்றியும் உதாரணங்களை எடுத்தாண்டு விளக்கமளித்தார். மகளின் மாற்றத்தைக் கண்டறியும் அல்லது கேட்டறியும் தாய் வெறியாட்டுக்கு ஏற்பாடு செய்ய ஆயத்தமாதல் அதனைத் தோழியின் வழி தலைவனுக்கு உரைத்தலும் பற்றிய அற்புதமான வாழ்வியல் முறைகள் பண்டைய தமிழகத்தில் நிலை கொண்டிருந்தமை பற்றிய விளக்கங்களை எடுத்துரைத்தார். அத்தோடு தலைவன் தலைவி துயில் கொள்ளும் படுக்கை அறைகள் அவற்றின் அளவுகள், படுக்கை விரிப்புக்கள் பறவைகளின் மென்மையான சிறகுகளாலான பஞ்சணை போன்றனவும், கதவுகள், சாளரங்கள், மாடங்கள், ஏழு அடுக்குக் கட்டிடங்கள் என்பன போன்ற விபரங்களைச் சங்கப் புலவோர் எடுத்துக் கையாண்டுள்ளமையின் கவித் திறனையும் வியப்போடு எடுத்துரைத்தார்.

அகல் விளக்கு, பாவை விளக்கு என்பன சங்க இலக்கியத்தில் பயின்று வந்துள்ளமையும் இவை யவனத்திலிருந்து வருவிக்கப்பட்டவை என்பதனையும் சங்க இலக்கிய வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது என்பதனை தெளிவுபடுத்தினார். 'யவனர்' என்பது வேற்று நாட்டினர் என்பதாகப் பொருள் கொள்ள முடிகின்றது என்ற அவர்

பல்வேறு சங்கத் தமிழ்ச் சொற்களுக்கான பொருள்களை விரித்துரைத்து தெளிய வைத்தார். ஒன்றைக் கூறி இன்னொன்றைப் பொருள்கொள்ளும் உள்ளுறை உவமம் சங்க இலக்கியத்தின் சிறப்பு என்ற அவர் அவை இயற்கையைப் படம்பிடித்துக் காட்டு வனவாகப் புலவர்களால் கையாளப்பட்டுள்ளமை தமிழரின் நாகரிக வளர்ச்சியையும் அதன் உயர்வையும் பிரதிபலிப்பதாகக் குறிப்பிட்டார். பாம்பின் தோலையும், மூங்கிலின் மேற்புறத்து மெல்லிய ஆடையையும் பண்டைக்கால பெண்களின் ஆடையாக்க காட்டப்பட்டதில் இருந்து உடை தயாரிப்பதில் எத்துணை தொழில் நுட்பத்தைக் கையாண்டுள்ளனர் என்பதனையும் எடுத்துக்காட்டுகின்றார்.

பரத்தமை ஒழுக்கம், மது அருந்துதல் என்பன தமிழகத்தில் இருந்துள்ளன. அதனை ஒரு பெரும் குற்றமாக எடுத்துக் காட்டப்படவில்லை. ஆண்களும் பெண்களும் கள்ளுண்டனர், இறைச்சியை உணவாகக் கொண்டனர் என்பதனை சங்க இலக்கியங்களில் இருந்து அறிய முடிகின்றது.

இவற்றை எமது எதிர்காலச் சந்ததிக்கு எடுத்துச் செல்வதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளேன் என்ற அவர், அதற்காக தமிழகத்தில் இரண்டு ஆரம்பப் பாடசாலைகளைத் தெரிந்து அங்கு 40 சங்க இலக்கியப்பாடல்களை கற்பிப்ப தற்கு ஆசிரியர்களையும் மேலதிகமாக ஒழுங்க செய்து அதில் போட்டியும் நடத்தினேன். பெரு வெற்றியாக அது அமைந்துள்ளது. அந்த மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கி ஊக்குவித்ததாகவும் அதனைத் தொடர்ந்து எடுத்துச் சென்று தமிழ்நாட்டு அரசாங்கத்தால் தமிழ் பிள்ளைகள் அனைவரும் சங்க இலக்கியங்களை அறிந்துகொள்ள வைப்பதே எனது இலக்காக உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

கலிபோர்ணியாவில் உள்ள கூக்குலிப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியரான ஜோர்ஜ் ஹார்ட் அவர்களே என்னைச் சங்க இலக்கியத்தைப் படிக்கத் தூண்டினார். நான் ஆரம்பக் கல்விக்குப் பின்னர் தமிழைக் கற்றுக்கொள்ளவில்லை, தமிழில் போதிய அறிவும் இல்லாதிருந்த என்னைத் தூண்டியவர் அவரே எனவும் இப்பொழுது இந்தியாவில் உள்ள ஒரு தலை சிறந்த தமிழ் அறிஞராக உள்ள திருமதி இராஜம் அவர்களிடம் எனது ஐயங்களைக் கேட்டு திருப்திப்படுகின்றேன் என்றார். தொடர்ந்து இப்பயிலரங்கில் கலந்து கொண்ட வோட்டலூ பல்கலைக் கழகப் பேராசிரியர் சி.ஆர். செல்வகுமார், ஓய்வு பெற்ற பேராசிரியர் ஆனந்தநாராயணன், பேராசிரியர் பசுபதி, ரொறன்ரோ தமிழ்நாடு தமிழ்ச்சங்கத் தலைவர் திரு. ரகுராமன் போன்றோர் திருமதி வைதேகி ஹேர்பேர்டைப் பாராட்டியதோடு, யாழ். பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் நா. சுப்பிரமணியன் அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார்.

இதனை ஒழுங்கமைத்த எழுத்தாளர் அ. முத்துலிங்கம் அவர்கள் திருமதி வைதேகி அவர்களை அறிமுகப்படுத்தி வைத்தார். இந்தப் பயிலரங்கு சிறப்புற தன்னாலான பணியினை எழுத்தாளர் சா. அகில் அவர்கள் செய்துகொண்டதோடு, கலந்து கொண்ட அனைவருக்கும் சிற்றுண்டி, தேனீர் உட்பட மதிய உணவும் வழங்கப்பட்டமை பாராட்டிற்குரியதே.

தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com



# Forward Condo. In DownTown Toronto

## Largest Builder in Canada

## "Concord"




- Only 30 Floors
- Amazing Amenities
- Walking to :

1. Sky Dome
2. CN Tower
3. Newly Built Aquarium
4. Harbour Front
5. National Super Market
6. Future Prestigious Mall

VIP Package For
HomeLife /GTA Clients
(Exclusive Brokerage)

For More Details & Appointments

VISIT CONVENIENTLY LOCATED OFFICE IN WELL KNOWN
GTA SQUARE MALL IN TORONTO

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

**Contact: 416.321.6969**

5215 Finch Ave., E., #203, Toronto, ON

*Independently Owned & Operated

BUSINESS / LAW CAREERS
Accounting ♦Payroll Admin / Business Administration ♦Banking and Financial Services ♦Hospitality Management ♦Paralegal / Law Clerk ♦Property Administrator ♦Hospitality Management ♦Tourism Management ♦Police Foundations/ Immigrant Consultant ♦Law and Security Officer Supply Chain & Logistics ...

IT CAREERS
Network Administration ♦Graphic/Web Designer ♦Software Quality Assurance and Testing Diploma ♦ Network Security Specialist ♦Web & Mobile Developer ...

HEALTHCARE & Related
Medical Office Administration ♦ECG ♦ Phlebotomy ♦Aesthetician/ Make-Up Artist ♦Hair Stylist ♦Community Service Worker ♦Personal Support Worker ♦Massage Therapist ♦Pharmacy Technician ♦Early Childhood Assistant ♦Medical Laboratory Technician ♦Food Service Worker ♦Intra Oral Dental Assistant ♦Addiction Worker ...

TRADES
Cabinetmaking ♦Construction & Maintenance Electrician Pre-Apprenticeship ♦Electrical Technology ♦Home Renovation Technician ♦Industrial and Commercial Maintenance ♦Civil / Mechanical / Engineering ♦Welding / Solar Energy Technician ....

Looking for a Better Career?
Better JOB?
Our free service can help!



நான் வேலையிழந்து வருமானமின்றி தவிக்கும் போது எனது நண்பரின் மூலமாக EENC யை நாடினேன் அவர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய சேவையால் Second Career மூலம் அரச நிதியுதவி பெற்று Medical Office Administration கல்வியை கற்றேன் அனுபவமில்லை எனக்கு நல்ல சம்பளத்துடன் கூடிய வேலையையும் பெறுவதற்கு வழிவகுத்த EENC யை நான் மனதார பாராட்டுகிறேன்.

நிமா (Dated : Feb. 2015)

நான் புதிதாக கனடா வந்த போது எனக்கு படிப்புக்கு தகுந்த வேலை கிடைக்கவில்லை. தற்போது EENC நிறுவன உரிமையாளர் திரு. தேசா அவர்களின் வழிகாட்டலில் அரச நிதியுதவியுடன் நான் கல்வியைத்தொடர்ந்து பகுதி நேர வேலையும் பெற்றுள்ளேன்.

உதயா (Dated : July.2015)



Photo taken in 2013 at Queens Park, when Thesa Theiventhiran's client Vasu, presented his success story in finding a professional job for himself and his wife in Canada.

EENC இனால் நடாத்தப்படும் இலவச வகுப்புகள்!
MS - Office
Bank Teller

Second Career மற்றும் அரச நிதியுதவி பற்றிய விபரங்களிற்கு அழையுங்கள்:

EENC.ca Employment and Education Network Canada Inc.
தமிழில் விபரங்களிற்கு : 416-223-3779 (தஷினா)
www.eenc.ca info@eenc.ca Phone: (416) 441-4100
(EENC is a no-cost no-obligation network, connecting career seekers to employers and career training facilities)


# உலக சனத்தொகை வளர்ச்சி பற்றிய சிறுகுறிப்பு

பூமியிலுள்ள ஐந்து கண்டங்களில் ஒன்றான ஆசியாவில் அமைந்துள்ள இந்தியா, சீனா ஆகிய இரு பெரும் நாடுகளில் மக்கள் தொகையும் அதன் வளர்ச்சி வேகமும் அதிகரித்தே காணப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டளவில் சீனாவைவிட இந்தியா சனத்தொகையில் கூடிவிடும் என்று கூறப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையின் படி தற்போதைய உலகச்சனத்தொகை 7.3 பில்லியனாகக் காணப்படுகின்றது. இத் தொகை 2050ஆம் ஆண்டில் 9.7 பில்லியனாகவும் 3000ஆம் ஆண்டில் 11.2 பில்லியனாகவும் வளர்ச்சியுறும் என்று எதிர்வு கூறப்படுகின்றது.
நடைமுறை ஆண்டான 2015இல் இருந்து 2050 வரையுள்ள இடைப்பட்ட காலத்தில் மக்கட் பெருக்கம் பெரும்பாலும் ஆபிரிக்க நாடுகளில் அல்லது பெரும் குடித்தொகை கொண்ட நாடுகளில்தான் வேகமாக அதிகரிக்கும் என்று சொல்லப்படுகிறது. இக்காலத்தைய அரைவாசிச் சனப்பெருக்கம்: இந்தியா, நைஜீரியா, பாகிஸ்தான், கொங்கோ ஜனநாயகக் குடியரசு, எத்தியோப்பியா, தன்சானியா, அமெரிக்கா, இந்தோனேசியா, உகண்டா ஆகிய ஒன்பது நாடுகளில் காணப்படும் என்று கருதப்படுகிறது.

இதற்கு எதிர்மாறாக 48 நாடுகளில் மக்கட்பெருக்கம் குறைந்துகொண்டே செல்லும். இவற்றில் பெரும்பாலான நாடுகள் ஐரோப்பாக் கண்டத்தில் உள்ளன. பொஸ்னியா, பல்கேரியா, குரோசியா, ஹங்கேரி, ஜப்பான், லற்வியா, லித்துனியா, மோல்டோவா, ரோமானியா, சேபியா, உக்கிரேன் உட்பட சில நாடுகளில் மக்கட் பெருக்கம் 2050ஆம் ஆண்டளவில் 15 விழுக்காடு மட்டில் குறைந்து கொண்டே செல்லும் என்று கருதப்படுகிறது.



தற்போதைய உலகமக்களின் சராசரி வயது 73 வருடங்கள். 2100இல் சராசரி வயது 83 ஆகக் காணப்படும். தற்போதைய நிலையில், அதிக ஆயுட்காலத்தைக் கொண்ட நாடுகளாக: ஜப்பான், இத்தாலி, சுவிஸ்சலாந்து, சிங்கப்பூர், ஐஸ்லாந்து, ஸ்பெயின், அவுஸ்திரேலியா, இஸ்ரவேல், சீனா ஆகியன காணப்படுகின்றன.

- கந்தசாமி முத்துராஜா -

சனத்தொகை கூடக்கூடத் தேவைகளும் அதிகரிக்கின்றன. தேவைகளைப்பொறுத்து வான்மண்டலம் உட்பட உலகம் பாதிப்படைகிறது. இயற்கை அழிவுகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன.


விளம்பரம் பத்திரிகையின் 25 ஆவது ஆண்டை முன்னிட்டு வெளியிடப்பட்ட "அடுத்த காலடி" என்ற நூல் விளம்பரம் பத்திரிகையின் காரியாலயத்தில் விற்பனைக்கு உள்ளது.



தொடர்புகளுக்கு: 416.282.8059
GTA Square
5215 Finch Ave.E., #201, Toronto, ON M1S 0C2


21 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு
SAMY & SONS
Wholesalers & Retailers
SINCE 1994
வரவேற்பு
விலை
தரம்
இதோ நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த
அதிரடி மலிவு விற்பனை
தெரிவு
நம்பிக்கை
நாணயம்
இம் முறை எதிர்பாராத அளவில் இரண்டு "யூனிற்"களில் கலக்க இருக்கின்றது.
Textiles, Jewellery, Gift Items & Fancy Goods,
Express Money Transfer, Pawn Broker, Chairs Rental Etc.
ஆகஸ்ட் 14ம் திகதி தொடக்கம் செப்ரம்பர் 14ம் திகதி வரை
எமது வாடிக்கையாளர்கட்கு! ஓர் அரிய சந்தர்ப்பம் இதோ!!!
3 for $10.00
குருதா ரொப்
சாறி பிளவுஸ், பிறா
சாறி உள்பாவாடை,
சாரம், ஜட்டி,
பெனியன்
இன்னும் பல.
Each $10.00
டெனிம் பான்ஸ்,
Dress பான்ஸ்,
சேட், குர்தி சேட்,
பட்டுபாவாடை செற்
பான்சி Frocks,
சுரிதார் (All Sizes)
மில்க் குக்கர்
ஸ்ரீமர், தோசைச்சட்டி
பிறஷர் குக்கர்
வாமர், புட்டுக்குடம்
றைஸ் குக்கர்
ரொட்டி மேக்கர்
கனடாவில் எங்கும் பெற்றுக்கொள்ள முடியாத மலிவு விலையில்
புதிய வரவுகளாக
பட்டு, கட் வேக், பிறைடல்
சொவ்ற் சில்க்,
ஹாவ் அன் ஹாவ்
சிக்குயின்,
அன்ட் கொட்டன் சாறிகள்
ஸ்பெஷல் சுரிதார்
பான்ஸி லங்கா சூட்
குருத்தா பிளவுஸ்
குருத்தா சூட்
இன்னும் பல
எங்கும் காண்டிராத மலிவு விலையில்
பான்ஸி பொருட்கள் 50¢ தொடக்கவிலையில்
Blow Out Sale Everything Must Go
OPEN 7 Days
10:00 am- 9:00 pm
Special Price
(Sumith, Preethi, Premier)
$300 மேல் புடவைகள் கொள்வனவு செய்யும் முதல் 25 வாடிக்கையாளர்களுக்கு ஒரு றைஸ் குக்கர் இலவசம்
Tel: 416-298-1598
Tel: 647-875-5002 Cell: 647-239-SAMY (7269)
1884 B Kennedy Road (at Ellesmere)
Scarborough, Ontario M1P 2L8
www.samyandsons.com E-mail: samyandsons@gmail.com
$150 மேல் புடவைகள் கொள்வனவு செய்யும் முதல் 25 வாடிக்கையாளர்களுக்கு ஒரு ஹொட் பொக்ஸ் இலவசம்
அன்றும், இன்றும் என்றும் ஒரே குடையின் கீழ் சாமி அன்ட் சன்ஸ்
SALE!! SALE!!! SALE!

"Let me help you make the right choice"
Schuren Sriskandarajah B.A.
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393

BRINGING YOUR DREAMS TO LIFE TODAY call Vany Jeganmohan for BUYING, SELLING & INVESTING • RESIDENTIAL & COMMERCIAL
Vany Jeganmohan
Sales Representative
Cell: 416-670-7436
vanyj26@yahoo.ca
HomeLife/GTA Realty Inc., Brokerage
Bus: 416.321.6969
Fax: 416.321.6963
GTA Square, 5215 Finch Ave. E., # 203, Toronto, ON M1S 0C2
Higher Standards Agents... Higher Results!™

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
List Buy Sell
RE/MAX All Stars Realty Inc., Brokerage
Chairman's Club Award
Raj Paramasamy
Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com
வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
No Credit or Bad Credit கவலை வேண்டாம்

வீடு மற்றும் வாகனக் காப்புறுதி HOME + AUTO = MORE SAVINGS*
"Call me today for a free home and auto insurance quote"
*Inclusive of all other discounts applies to Allstate's base rates. Terms & conditions apply & may vary region. Rates & discounts subject to change. Trademark used under licence by Allstate Insurance Company.
Allstate.
Raji Linghan
Cell: 416.817.5060
905.427.2827 Ext:5020
Ajax Agency 15 Westney Road N

THE TRUSTED MORTGAGE AGENT
"Solution For Every Mortgage"
Mortgage Alliance The Guardian
*Some Terms & Conditions May Apply
•I will arrange your 1st Mortgage with 0% down.
•Need a 2nd Mortgage???
"When banks say no We say yes"
@ interest rate starting from 6.99%+.
Surren Selvanayagam
(LIC: M14001034)
சுரேன் செல்வநாயகம்
Contact: 647.308.3090 / E-Mail: surren12@gmail.com

PYRAMID GROUP
NERANJAN RASIAH
Sales Representative
416-804-4436
PYRAMID GROUP YOUR DREAM TEAM
TOP LISTING TEAM IN GTA !!!
LIST WITH US & SEE THE DIFFERENCE
$$$ Get Paid for Referrals $$$

Free Real Estate Class - Call: 416.321.6969

the Ledger
ACCOUNTING & TAX SERVICES
BOOKKEEPING SERVICES
*GST/HST Remittance
*Payroll Services
*Bank Reconciliation
*A/R & A/P Maintenance
*Financial Statements
TAX SERVICES
*Personal Tax Return
*Rental Income
*Self Employment
*Payroll Taxes
*Corporate Tax Return
647.219.2273

RealEstate / Commercial Investments

| | | |
|---|---|---|
| Restaurant for sale<br>Woodbine & Davis drive<br>Building + Business<br>Price : $2.79 M | Audley / Rossland /Ajax<br>Bedroom : 4<br>Washroom: 3<br>Price : $549,900 | Morningside & Lawrence<br>Bedroom : 3<br>Washroom: 2<br>Price : $249,900 |
| Finch & Glenanna<br>Pickering<br>Bedroom : 3<br>Washroom: 2<br>Price : $339,900 | Condo Apartment<br>Brimley & Ellesmere<br>Bedroom : 1 + 2<br>Washroom: 1<br>Price : $ 229,900 | Gas Station<br>Building + Business<br>Downtown Peterborough<br>Price : $ 2.25 M |

RE/MAX Dynasty Realty Inc.
A. Anton Jeeva B.Eng
Ranked among the top 1% of all Realtors in the GTA
Mortgage can be arranged from 2.4%
Mortgage Rates Starting From 2.5%
Dir: 416.575.5055
Remax Dynasty Realty Inc., Brokerage 8 Shadlock St, Unit #7 Markham, ON L3S 3K9

அகத்தின் அழகு முகப்பில் தெரியும்....
உங்கள் அகத்தின் முகவரியை தேட
விசுவாசமான முகவர்.....
VK Kanthasamy
Sales Representative
Cell: 416-726-1698
Let Me find the key to your HoMe!
HomeLife/GTA Realty Inc., Brokerage
Buss: 416-321-6969 Email: vkpromise@gmail.com

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com / www.tamilvanakkam.com

ஆடைகளின் அரண்மனை
Anushas Boutique & Tailoring